உ
சிவமயம்.
ஓம் குஹப்ரஹ்மணேநம:

அத்தியாச்சிரம சுத்தாத்துவைத

வைதிக சைவசித்தாந்த ஞானபானு

# குமாரசுவாமி யென்னும்

# பாம்பன் ஸ்ரீமத் - குமரகுருதாச சுவாமிகள்

அருளிச்செய்த

## மூன்றாவது மண்டலம்

### முதல் பகுதி

# காசியாத்திரை.

சிவமயம்.

குஹப்ரஹ்மணே நம:

திருச்சிற்றம்பலம்.

# காசியாத்திரை.

### *நேரிசை வெண்பா.*

1. **எ**ந்தை யறுமுகனை யீன்றாமை மீன்பன்றி
முந்தை யுலகளந்தோன் மொய்ம்பரிமா - நொந்தழியச்
செய்தவனைத் தானோ திருமழிசை யாழ்வான்மே
லையெனவெண் ணாதிருந் தான்.

2. **ஓ**ம்பென் னிறையைநல் கோம்பொருளாய் மாலயனைச்
சாம்ப ரெனச்செய் தழற்கண்ண-னாம்பரன்கட்
செந்தீயைத் தானோ திருமழிசை யாழ்வான்கால்
வெந்தீ யடக்கு மிகுந்து.

3. **எ**ன்னிறையைத் தந்தோ னெரித்த வுடம்பினையு
முன்னவனே கொய்த முடியினையும் - பின்னுமுறப்
பண்ணவிய லாரப்பன் பாதநினை யாழ்வானோ
கண்ணுதலை வெல்வான் கணித்து.

4. **மா**ற்குவை குந்தமும்பல் லோர்க்குயர்வா ணாளுமருள்
வேற்கையன் மெய்த்தந்தை பார்த்தாழ்வான் - மேற்சொனவாழ்
வீயென்ற போதேலா தென்றானத் தேவென்ற
வாயென்றுன் புற்றதோ மாண்டு.

இந்நான்கு வெண்பாவும், திருமழிசையாழ்வானது
சரித்திரத்தை வாசித்தபோது நிகழ்ந்தன.

5. **கி**ட்டிணி மூழ்கிக் கிடக்கக் கிடக்கவுட
லுட்டிண மாறுமனத் தோகையுறும் - பட்டினிபோம்
பூமனத்தை மாற்றியிளம் பூரணனை நாடுமொரு
மீமனத்து ளின்ப மிகும்.

6. **கோ**தா வரியிற் குளித்த பலன்றானோ
யாதேனு முண்ணாமல் யானிந்தச் - சீதார்
விசாகபட்ட ணத்தருகே வெய்துறவே செய்த
தசூயையற்ற வேலோ யறை.

7. **எ**த்தனைபே ரென்னோ டிருந்தாலு மன்னவரெள்
ளத்தனையுன் னன்பில்லா ராயினெனக் - கொத்ததுணை
யாவாரோ வென்னெஞ் சறிந்துதவு வாரிஙனார்
தூவார் கடம்பணியோய் சொல்.

8. **தே**டரிய சேய்வாண தீர்த்தத்தி னீபட்ட
பாடதிக மில்லை பகீரதிசேர் - நாடினிது
பார்ப்பதற் குண்ணீ படும்பா டதிகமெனத்
தீர்ப்பதுதா னோவுன் செயல்.

9. **ந**ண்புடையர் சென்றா னடந்திருந் தாலிருக்கும்
பண்புடைய வெந்தாய் பதிமுருகா - தண்பெருகு
மன்பில்லார் பின்செல்லே னாளல்லா ரில்லெய்தே
னென்பதுன் னெஞ்சறிந்த தே.

10. **எ**ன்னரசா யென்குருவா யென்கடவு ளாயிருக்கும்
பொன்னயிலோ னன்பு புரிந்திங்ங - னென்னை
யிருவருளம் புக்கழைத்தே யென்பசியிற் கேற்ற
திருவமுது தந்தான் றெரிந்து.

11. **நி**த்திரைக்குத் தத்துவ நேதிசெய் யாதநீர்
சித்த மடங்கவது செய்வதென்னே - சித்த
மடங்கிடுமேல் யாவு மடங்குமக னேதிப்
படங்கள் படித்தலைவோ ரே.

12. **சு**டலையளிக் கும்மானிச் சூரனர ரென்னுங்
கடலைவறுக் கின்ற கயையி - னடலைமனஞ்
செற்றுய்ய வெண்ணுமெனைச் சேர்த்தனையே யென்கவலை
யெற்றைய னாமுருக னே.

13. **எ**ந்தை யிளம்பெருமா னீடில் கருணையினா
லிந்த வருங்காசி யெய்தியவென் - சிந்தை
களிக்க வரகங்கை கண்டேன் குடைந்தே
னளிக்குமர னைக்கண் டனன்.

14. **கா**சியவிர் கேதார கட்டச் சிவாலயத்துண்
மாசிலயில் வேலேந்தி மன்னுசிவ - தேசிக
மூர்த்தந் தெரிமுன் முருகுருவிங் கில்லையெனச்
சூர்த்ததென் னெஞ்சஞ் சுழன்று.

15. **க**ண்ணுள்ளார் காண்பார்நற் காதுள்ளார் கேட்பாரின்
பண்ணுள்ளார் பாடுவரிப் பண்பேபோல் - விண்ணருளிற்
பாழ்வெளி மீச்செல் பலமுள்ள வான்மாவு
மூழ்வழி யேவிளையா டும்.

16. **கா**துள்ளார் காண்பாரோ கண்ணுள்ளார் கேட்பாரோ
வாதலினற் றெய்வ வருள்வலியின் - மேதினியை
வெல்வார்க்கு மப்பிறவி மேவுதலைக் காலத்தே
யில்லாக் கலைக ளிலை.

17. **எ**ந்நதியின் மூழ்கிடினு மெக்கோவில் கண்டிடினு
மென்னிறையை யென்னகத்தி லேகாண - மின்னு
மறிவுபிறங் காவிடினெற் கானந்த முண்டோ
நறியமக னேநீ நவில்.

18. **மா**சில் விசாலாட்சி மைந்தனைநன் மாண்புடைய
பாச மறுதண்ட பாணியினைக் - காசிப்
பெருநகரி லென்றன் பிணிப்பவிழு மாறே
யிருவிழியி னாற்றரிசித் தேன்.

19. **எ**வனுருவந் தோன்றி யிறவாதோ வென்று
மவனுருவ மாங்கதியு மற்றென் - றெவரு
மறிவதற்கோ ரையமிலை யாதலிற்சா ரூப
திறமும் பலவெனநீ தேர்.

20. **க**ட்டினார் சத்திரங்கள் காசுடையார் பார்ப்பார்கண்
மட்டுமே யுண்ணவென மாநிலத்தி - னெட்டயிலோய்
மற்றவரு ணத்துதித்துன் மாணடியே நேடிநிற்கு
நற்றவரெங் குண்பார் நவில்.

21. **கா**சரிசி சோறுதுணி தானமெனிற் காதவழி
பூசுரரென் பார்பெறற்குப் போவதையிக் - காசினியி
லாய்ந்துணர மாட்டார் ரவர்க்கே யமுதளித்து
மாய்ந்திழிவை யேமருவு வார்.

22. **எ**வருலக நீத்திறையை யெண்ணியிருப் பாரோ
வவர்மகிழ வேசோ றளிக்குஞ் - சிவபுண்யம்
பண்ணூ ழிலார்பிறருக் கேநாளு மீந்துபசு
புண்ணியவாழ் வொன்றுறுவர் போய்.

23. **தா**ழ்வி லயோத்திதனிற் றண்ணார் சரயுநதி
மூழ்கி யெனதிதய மோகமலம் - போழ்கூர்த்த
வேலவனை நாடியடி வேட்டுநின் றேனிந்த
ஞாலநடை யெய்தாம னன்கு.

24. **சீ**ரா ரயோத்திதனிற் சீராம மூர்த்தமுநன்
னாரா ருமைநம்ப னல்லுருவு - மேரார்
கரிமுகத்தன் பேருருவுங் காணலாஞ் செவ்வே
ளருண்முகத்தைக் காண்ப தரிது.

25. **ஓ**முருகா மெம்பெருமாற் கோரன்னை யானவளு
நேம வரித்துவா ரத்திடைநீ - ராமுருவங்
காட்டிவரு தேவதையு மானவளைக் கண்டவுட
னீட்டியதோ மெல்லா மிறும்.

26. **த**ரிசிக்கத் தீண்டியிடத் தாழ்ந்துநனி தோய
வுருசிக் குரியநா வுண்ணக் - கரிசற்ற
சுத்தமுடற் குண்டாகுந் தூவுளத்தி லோகையுறு
மித்தெய்வ கங்கை யினை.

27. **து**ளசிவன மாமூரைத் தொன்மதுரை தன்னை
வளையமுனை மூழ்கினேன் மாசி - லொளிமுருகின்
பூறருளி னாலரித்து வாரகங்கை யுண்ணுபொழு
தேறியதண் டன்மை யிலை.

28 **வி**ழித்துயிலுக் காதாரம் வெய்யமல மேயவ்
விழித்துயிலை நீக்கவெண்ணல் வீணாஞ் - செழித்தமல
வண்மை யறுத்தருள மாகுகனை யேன்றமட்டு
மெண்ணியிரு மன்பீ ரினி.

29 **க**ன்மமல முள்ளளவுங் காணுபசிக் கீயுமுண
வின்மையுற மாட்டா தெனவறியுந் - தன்மையர்தாந்
தோன்றுபசிக் கேதேனுஞ் சுத்தவுண வுண்டுதயை
சான்றகுகற் றாழ்வார் தனித்து.

30 **நீ**றிடுவா ரைக்காணி னிந்திக்கும் வைணவர்க்கே
சோறிடுகோ வின்மடங்கள் சூழ்மனைகள் - காறறவே
காணினுஞ் சைவதவத் தோரங்கே கால்வைக்க
நாணுவது மிக்க நலம்.

31 **க**ரியமால் கோவிறனைக் காணினங்க னேநின்
றுரியநமற் கார முஞற்ற - *லரியடியா
ருண்டியுடை கேட்டா லுயர்சிவனுக் கென்றீத
லண்டனரு ளன்பர்க் கழகு.

32 **க**ண்ணன் குடையென்னக் கையிலெடுத் தேவிடுத்த
திண்ணவரை பார்த்தோஞ் செகநாத - மண்ணியநாள்
கார்த்திகே யக்கடவு ளென்றொன்று கண்டோமம்
மூர்த்தமுமிங் கின்று முனமே.

33 **கோ**குலத்தைக் கண்டுகளி கூர்ந்தவென் னன்னெஞ்சே
யாகுலத்தைத் தீர்ப்ப தருளொன்றே - வாகுலைக்குப்
பிள்ளையெனுஞ் சேயடியே பேணிநிலை நிற்போர்க்கவ்
வொள்ளருளெய் தாதிருக்கு மோ.

**31.** *அரியடியார் – அவைதிக சித்ரோர்த்வபுண்டர தப்தமுத்ராதாரணமின்றி, வைதிக விபூதி தாரணமும், விஷ்ணுபக்தியுமுளோர்.

34 **க**ங்கை யமுனை கரிசில் சரச்சுவதி
சங்கம மூழ்கியென் சஞ்சலங்கொல் - கங்கைமக
னாமுருக னோன்றாள்சே ராக்கமுற் றேனவன
தோமருளி னாலின் றுவந்து.

35 **இ**ந்தத் திரிவேணி சங்கமத்தி லேபடிவோ
ரெந்தத் துயருமில ரென்றாகிப் - பந்தக்
கடல்கடப்பார் கந்தன் கருணைக்கா ளானோ
ருடனிருப்பா ரோகையுறு வார்.

36 **பி**ரயாகை யாமிப் பெருந்தலத்தி னல்ல
சுரர்யாரும் வேண்டுமதி தூய - வரநதியைக்
காரேர்த் திருயமுனை காணரிய வாணிதனைப்
பாராக்கண் ணாலென் பயன்.

37 **எ**ற்றுக்கு நாம்பரமென் றெண்ணியுல கீர்வீணே
சொற்றுத் திரிகின்றீர் தோமெல்லா - மெற்றுந்
திரிவேணி சங்கமத்தைச் சேர்மின் குடைமின்
கருவானி நீத்துய்வீர் கள்.

38 **தெ**ன்மொழியைக் கேட்டலுமோர் தீட்டென்னும் பார்ப்பார்கட்
கென்வழி தான் கைகூடு மிவ்வுலகி - னன்மொழிதேர்
சம்பந்த ராதிமுத்தர் சாரா வகங்கார
வெம்பந்தந் தானே மிகும்.

39 **பே**சுவதுங் கேட்பதுவும் பெட்போ டெழுதுவது
மாசிறமி ழாயிருக்க வத்தமிழை - யேசுகின்ற
மூட மநுடரையெம் முத்தர் மதிப்பார்விண்
ணாடர் பிரானீ நவில்.

40 **வ**டமொழியைத் தேர்ந்தோர் வடமொழிதா யென்னிற்
றிடமொழியாந் தென்மொழியைத் தேர்ந்தோர் - புடவிதனி
லத்தென் மொழிதந்தை யாமெனலுங் கூடுமெனல்
சுத்தனை யேத்தென் றுணிபு.

41 **எ**ப்பொழுது தென்னா டெனுமொன்றுண் டாயினதோ
வப்பொழுதே யம்மொழியு மாயதென்றன் - முப்பொழுது
மோர்ந்தார்க்கு மொப்பா மொருமுருகை யேத்துமெனைச்
சேர்ந்தார்க்கு மொப்பாந் தெளி.

*கட்டளைக் கலித்துறை.*

42 **கா**சிக் குமர குருபரன் செய்த கனமடத்திற்
பாசிப் பயறு கலந்தநல் லன்னமும் பாலுமுண்டங்
கேசற்று நின்ற வெனதரை யிற்கும ரேசனன்பர்
தூசிற் சிறந்தபொற் *காடாய வத்திரஞ் சுற்றினரே.

43 **சு**ற்று மமையங் குமர குருபர சாமிசொந்த
முற்ற மடமிதிங் கேயிட்ட காவி யுடையிரண்டும்
பெற்றிட னின்கட னாகுங் குமர குருப்பெயரே
பெற்ற சுவாமி யெனவுரைத் தாரந்தப் பேரன்பரே.

44 **பி**ன்னு மெனையிங் கறியா தெழுந்ததிப் பெற்றியிதை
நன்ன ரிலையெனத் தள்ளே லெனவு நவின்றவன்னார்
சொன்ன மொழியைக் குமர குருபரன் சொல்லெனவே
யென்ன திதயமு மொப்பிப் பரவச மெய்தியதே.

45 **அ**ன்றிறை கோவணங் கட்டிவந் தெற்குய ராக்கஞ்சொலிச்
சென்றநா டொட்டுவெண் கோவணங்கொண்டு சிவப்பிறுணி
யொன்றையே போர்த்துத் திரிந்தவெற் கிச்செவ் வுடையிரண்டு
நன்றெனத் தந்தசெவ் வேளருள் பூர்த்தியு நல்குகவே.

*நேரிசை வெண்பா.*

46 **வ**ல்லா ரிராச மகேந்திரத்தி லேயொருவ
னில்லோர நான்றா னிருந்தேனவ் - வில்லோன்போ
லேகொருவ னீயிங் கிராதுபோ வென்சொல்லென்
னூகமனத் தைத்தொளைத்த துண்டு.

**42. *** இக்காடாயங் கட்டியகாலம், கலியுகம் 5004இல் நிகழ் சுபகிருது வருடம் ஆடிமாதம் 22ஆம் தேதி புதவாரம் பூர நக்ஷத்திரம் என்க. (6.8.1902)

47 **சீ**ருஞ் சிவமுமருள் செவ்வேளின் சேவடியே
சாருங் குமரகுரு தாசனெனும் - பேருறுநான்
றென்பொற் றமிழறியார் தேயங் களிற்கொண்ட
வின்புக்குத் துன்புகுறை வே.

48 **பி**றர் வணக்கங் கண்டுமகிழ் பேய்மனமே வஞ்சக்
கறைமனத்தர் தாமுமதைக் காட்டி - மிறைவிளைப்ப
ராகலினுள் ளன்புடையா ரன்பினையே நன்குமதி
மாகலைவே ளன்பும் வரும்.

49 **த**னக்கோர் சமமின்றித் தாரணியில் வாழ
நினைக்கின்ற பேதைமையோய் நீயுன் - வினைக்குழுவை
வென்றுய்ய நல்வழியை மேவியிரா யெஞ்ஞான்றுங்
குன்றெறிந்த கோனருளைக் கொண்டு.

50 **தே**ள்விடமென் காலைத் திருகிக் குடைதலினிந்
நீளுடலை நீக்கிடுநா ணோர்துன்பு - வாள்கொடற
வெட்டுவது குத்துவது வீசுவது போலுறுமோ
விட்டகும ரேசவறி யேன்.

51 **நி**தங்கட்ட மார்மதியா னேரில் புதிய
மதங்கட்டி யேயலையு மாக்கா - ளிதங்கெட்ட
சிற்றறிவைப் பேரறிவாச் செய்யுங் குகேசனடி
பற்றுதிர்முன் னூலின் படி.

52 **நெ**ஞ்சடக்கி நிற்கு நிலையிலெழு பேரறிவிற்
கிஞ்சிலுங் காணாக் கிறியுடையீர் - விஞ்சுவெளி
நோக்கநிலை யாகாது நூனமற்ற சேந்தனையுள்
ளாக்குதிர்நன் கேயு மது.

53 **எ**ப்பாடு பட்டு மிதயநடு வேதலைவற்
கொப்பா முயிரை யுயிர்க்குயிரைத் - தப்பாமற்
காணவிதிக் கும்மதமே காசின் மதமெனுமெம்
மாணயில்வே ளாளரது வாய்.

54 **உ**யிர்க்குயிராய் நிற்கு மொருகுகனைக் காண
வயிர்ப்பறவே நெஞ்சடக்கி யங்க - ணுயிர்ப்பறுபோ
தூனநினை வேறாம லுன்னவிதி யாதமத
மானைமத மீனமத மாம்.

55 **வே**ளுக்காட் பட்டவரே வேளாளர் மற்றையவர்
கோளுக்காட் பட்டகோ ளாளரந்த - வேளுக்காட்
பட்ட வருணகிரி பார்த்தநல் வேளாக்க
விட்டநினை நெஞ்சே யினி.

**ஸ்ரீ காசி யாத்திரை முடிந்ததன் பின்னர்**
**ஒவ்வொரு சந்தர்ப்ப நோக்கிப் பாடியருளிய திருப்பாட்டுகள்.**

56 **தெ**ன்னாட ருத்தரமே சென்றுநலந் தேடிடுக
வந்நாடர் தென்னாட் டருஞ்சேது - வென்னாசில்
சேத்திரமற் றுள்ளதலஞ் சேர்ந்துநலந் தேடுகவென்
றாத்தவே ளாளரறை வார்.

57 **நீ**ர்க்குடந் தூக்கிவரு நேரத்தி லேபெண்க
ளார்க்கும் பலபேச்சுண் டாமங்ங - னேர்க்குடநேர்
கொங்கை யுடையீர் குமரன்மாண் பேபகர்மின்
சங்கையற வெய்துமருட் சால்பு.

58 **இ**த்தில்லை யாடி யிளஞ்சுதனை யேத்துநர்க்கா
பத்தில்லை யெட்டில்லை பன்னரிய - புத்தில்லை
யீயு மவனருள்வந் தேயுமஞ் ஞான்றுமன
மோயுமா றுண்டாமொன் றுண்டு.

**அடியிலுள்ள 59-ம், 60-ம் முறையே ஒற்றிணைந்த**
**குற்றெழுத்துச்செய்யுளும், ஒற்றிணைந்த**
**நெட்டெழுத்துச் செய்யுளுமாம்.**

59 **த**ப்பெற்றும் பொன்மன்றத் தம்பக்கந் தற்கன்புத்
துப்புற்றிட் டுண்சித்தந் துன்பத்துப் - பப்புக்குட்
சென்மக்கள் பண்பற்றுச் செம்மக்கள் கண்பெற்றுப்
பொன்மக்கண் மெச்சப்பம் பும்.

60 **மா**ட்டாக்கோன் வார்பாப்போர் மாக்கான்மான் போற்றோர்மாண்
பாட்டேற்றான் சேய்வேட்போங் காப்பாட்டோர் - மாட்டேச்சார்
தீங்காஞ்சோம் பாந்தேம்பாத் தேன்பால்வேந் தாந்தீந்தேன்
பூங்கால்வாழ் வோம்பேண்போம் போம்.

61 **தெ**ய்வநசை முன்றந்தான் றெய்வப் பிரதான
சைவநசை பின்றந்தான் சாற்றெனக்குச் - சைவமுடி
வாகியசித் தாந்தநசை தந்தா னதன்பின்மெய்
யோகநசை தந்தான்சே யோன்.

62 **பூ**விழிப்பை நிட்டையெனுஞ் சைவனையும் புல்லுணர்வை
மாவுணர்ச்சி யென்னான்ம வாதியையுந் - தூவுணர்ச்சி
யுள்ளவரா யெண்ணே னொருகுகனுக் காளாகி
நள்ளிருளை வெல்லுமொரு நான்.

63 **வி**ழிப்புந் துயிலுமிலா மேனிலையைத் தானே
செழிப்புநிட்டை யென்னுஞ்சித் தாந்தம் - பழிப்பில்லா
வந்நிலையே யென்னிலையா மல்லார் நிலையயலா
மின்னிலைவே லோன்றயவு ளீர்.

64 **தோ**ங்கடிந்த சித்தாந்தத் தூலமுதன் மூவுடம்பு
நீங்கிநிற்க வேசொலுமந் நேராகத் - தீங்கி
லொழிவி லொடுக்கமது முக்கழற்றி யோது
மிழிவிலிதைக் காய்நெஞ் சிருட்டு.

65 **இ**ருளிரித்து வாலருளீ யெந்தைமுரு கையன்
றிருவுளத்தை நேடாச் சிறார்தாம் - பொருவினிட்டை
முன்னிலைதான் கெட்ட முடிவஙனம் வாக்குமன
துன்னலிலை யென்றறிவா ரோ.

66 **வா**னோர்க்கு மேனோர்க்கு மன்னாங் குமரகுரு
வானோர்க்கு நான்றாச னானேன்மற் - றேனோர்க்குத்
தாசனினி யாகேன் றருக்கன்பு சாலார்க்கு
நேசனுமா கேனிஃதென் னோர்.

67 **ஈ**ன்றாளின் மேலா மிரக்கமுள நச்செவ்வே
ணோன்றா டுதித்தினிய நூனுவலத் - தேன்போற்
கிடைத்ததெய் வத்தமிழே கேணினையு நின்னைப்
படைத்தவனை யும்பழிச்சு வேன்.

68 **வே**ளா தொழிவார்கா ணொண்ணாத வேலிறைவற்
காளா கியவென் னளிநெஞ்சே - கேளானே
நற்றகரோ பாசனையை நாதனறி வித்தமையின்
மற்றையவெல் லாநீ மற.

69 **கா**மிகட்குத் தெய்வங் கருவேளே யேனோர்க்குச்
சாமிநச்செவ் வேளென்பார் சான்றோரச் - சாமியெனை
யுள்ளா திருப்பான்கொ லோகையுட னேவந்து
கொள்ளா திருப்பான் கொலோ.

## அத்துவிதப் பொருள்.

70 **ஏ**கந் துவிதமெனு மெண்ணிருப்ப வத்துவிதந்
தோகமறு வேதஞ் சொனதாலவ் - வேகந்
துவிதமு மல்லாத சொற்பொருடா னேயத்
துவிதமென் றோர்த றுணிபு.

71 **ஏ**கமெனுங் கூற்றிற் கிறையொன்றே மற்றொன்றற்
கேகனுருச் சீவனுமென் றேநவிலல் - பாகமிலா
வத்துவிதச் சொல்லிற் கருளிறையுஞ் சீவனுமே
நித்தியசம் பந்தமென னோர்.

72 **அ**த்துவித மும்மேக மாஞ்சொலுமொன் றோவேக
புத்திரனை யத்துவித புத்திரனென் - றித்தரையி
லோதுவழக் கில்லா தொழிந்ததுணர் வோர்க்குமிது
நீதவழக் காகு நிதம்.

73 **இ**ன்மைப் பொருள்கோடற் கே+யகரம் வந்ததெனி
னின்மைப் பொருளகர மெண்ணல்லாச் - சொன்முன்
வருதற்கு மெண்மேல் வருமகர மன்மைப்
பொருளுதவும் வேறில் பொருள்.

74 **ஏ**கத்தின் முன்னகர மேய்ந்தே யனேகமென
வாகக்கண் டோமே யதனானே * யேக
மறுதலையா மின்மைகொளிற் சூனியமா மற்றே
தறிவதெனி லவ்வன்மை யாம்.

75 **ஏ**கத்து முன்னகர மெவ்வா றிரண்டொன்றைப்
போகச்செய் தவ்வெண் புணர்கூட்ட - மாகெண்ணி
னத்தந் தரு±கிறதோ வவ்வா றறைந்ததுவி
தத்தகர முந்தான் றரும்.

**73.** **+**இது நகரத்தில் வரும் அகரம்.

**74.** * ஏகமறுதலையா மென்றதற்கு ஒன்றன் மறுதலை யிரண்டென்றாம் என்பது பொருளென்க.

**75.** ± இக் 'கிறு' நிகழ்கால விடைநிலையாம். இது :– மதுரைக் கடைச்சங்கத்தார்க்கு இலக்கணநூலாயிருந்த தொல்காப்பியத்தி லில்லாமையால் அச்சங்கப்புலவர் பாடிய பாடடுக்களிலும், அக்காலத்து வேறு சிலர் பாடிய பாட்டுக்களிலு மில்லாமையாயிற்று. இதுபோல அத்தொல்காப்பியச் சூத்திரங்களில் வெளிப்படாக் 'கின்று' 'ஆநின்று' எனுமிடைநிலைகளு மப்பாட்டுக்களில் அரியனவாயின. பிற்காலம் இலக்கியங் கண்டவழி அக் கின்று ஆநின்று என்பவற்றையுங் கோடல் வேண்டுமென்று காட்டக்கருதிய சேனாவரையர் 'அவைதாம் – அம்மாமெம்மேம்" என்றற் றொடக்கத்துச் சூத்திரவுரையில் "உண்ணாநின்றனம்" உண்கின்றனம்" முதலிய வுதாரணங்களைக் காட்டினர். ஆண்டுங் கிறுவுக்கு உதாரணங் காட்டாராயினார். அஞ்ஞான்றதற் கிலக்கிய மவர்க்குக் கிடைத்திலது போலும். இலக்கியங்கண்டவழிப் பன்னூறேர்ந்த நன்னூலாசிரியர் "ஆநின்று கின்று கிறுமூ விடத்தி னைம்பா னிகழ்பொழு தறைவினை யிடைநிலை." எனச் சூத்திரஞ் செய்தாரன்றே. அன்னணஞ் செய்தாராயினும், கிறு வசனத்தினன்றிச் செய்யுளகத்து வருதலுண்டோ வெனின், – அறியாது வினாயினாய் : என்னை? ஸ்ரீஞானசம்பந்தர் தேவாரம் திருவீழிமிழலை யமகம் 2–வது திருப்பாட்டில் "பணிகிறேன்மிகு மாதையே" என்றும், ஸ்ரீ அருணகிரிநாதர் திருப்புகழ் 1–ம் பாகம் 98–வது திருப்பாட்டில் "அவிகிற சுடர்போலே" என்றும், சித்துவகுப்பில் "மொழிகிற வகையிது சிறிது பெற்றிலர் ***** இருக்கிற சருக்கரை

76 **ஒ**ன்றுமற் றொன்றாக மாறுவது தானன்மை
யென்றறிதல் சாலுமனே கம்மெனுஞ்சொ - லொன்றிரண்டின்
சம்பந்தங் காட்டியவை தாண்டியமூ வெண்டொட்டுப்
பம்புநிரல் கண்ட படி.

77 **இ**ச்சம்பந் தந்தன்னை யீனுதரக் கண்ணிருந்
தச்சுருவு மாவியுமொன் றாவருமோர் - நிச்சயம்போ
லாருயிருந் தேவு மனாதியே யத்துவிதம்
நீரிருமை யென்றுணர்த னோர்.

78 **ஏ**சுவிழி சேரொளியிற் கேசேறா தவ்வாறே
யாசுயிர்சேர் தேவிற்கு மாசேறா - தேசதுதா
னீங்கவிழிப் புண்டாகு நேர்போலவ் வாசொழிவி
லாங்கடியின் பேமுத்தி யாம்.

79 **அ**லியென்னு மோர்மொழிபெண் ணாணில்லை யென்ன
வலியதாய் நிற்றல்போன் மாசி - லொலிமறையி
னத்துவிதச் சொல்லுமிரண் டொன்றை யகற்றவொரு
சத்தியுள தென்றறிதல் சால்பு.

80 **இ**வ்வத் துவிதத்தை யேமுத்தான் மாவினுக்
கொவ்வப் புகலி னொருதேவன் - *றெவ்வமிலா
வத்தேவை விட்டதுவி தச்சித்து மன்றெனவா
மித்தீர்வன் மைப்பொருளா மே.

வருக்கைக தலிக்கனி'' என்றும், வடுகநாததேசிக ரியற்றிய புள்ளிருக்கும் வேளூர்ப்புராணம் துசீலச்சருக்கம் 9–வது திருச்செய்யுளில் ''திருடர்போ னீள்கடை***** தருகிறே னென்றுதாம் பூல மாதியாய்'' என்றும், திருவிழாச்சருக்கம் 9–வது திருச்செய்யுளில் ''பண்ணுகிறதில்லை யென்று'' என்றும், சூதசங்கிதை பஞ்சாக்கரமந்திர முரைத்த வத்தியாயம் 8–வது திருச் செய்யுளில் ''பயங்குலவு மருத்தந்தான் வணங்குகிற தென்றுரைக்கப் படுமற் றிந்த'' என்றும் மானதயாகமுரைத்த வத்தியாயம் 19வது திருச்செய்யுளில் ''துதியறுநிட் பலவாத மிருக்கிறதின் றெனச் சொல் விவ காரத்திற்கு'' என்றும் வருவனவற்றுள் வந்தவாறே பல்வேறு செய்யுளகத்தும் அக் கிறு வரூஉமென் றறிக.

**80 *** எவ்வம் = துக்கமென்பது பிங்கல நிகண்டு.

81 **அ**வ்வன்மைக் கேயப் பிராமண னாங்காட்டே
தெவ்விலிதைத் தற்சா திருசியமென் - றிவ்வுலகத்
தோதும் வடநூலே யொப்பென்னுந் தென்னூலே
யேதுமிதி லேத மிலை.

82 **பி**ராமண னூனும் பிழியுநனி யுண்+டப்
பிராமண னாகிப் பிழைசா - லிராவணப்
பஞ்சமனுக் கொப்பாகு பண்புபோ னீத்தோனுஞ்
செஞ்சிவற்கொப் பாதல் சிவம்.

83 **ஒ**ப்பா மிதுசமவா தத்துமுடி வோவன்றே
யெப்பாடு மற்றநிலை யெய்தியமா - துப்போ
ரடைமுடிவா மிவ்வரிய வத்துவிதந் தானே
கொடையுடைமெய் கண்டான் குறி.

84 **ஒ**ன்றென் றிரண்டென்று மோரிரண்டு மேசேர்த
லென்றுமிங் கார்ப்போ ரிடர்களைந்த - நன்றி
மறவாம லேதாயு மானவரு மம்மெய்
யறிநாத னைத்துதித் தார்.

85 **இ**ச்சமமென் சாமியத்தை யேவித்து வான்வினைதீர்ந்
துச்சிதமா யெய்துவனென் றோதிடுமே - மிச்சைசொலா
முண்டகமவ் வாறே மொழியுஞ்சை வாகமமும்
பண்டையிவற் றாற்சொனதும் பண்டு.

86 **ஒ**ன்றெனற்குச் சுட்டு விரலினையு மோரிரண்
டென்றிடற்கஃ தோடொன் றினையுமிரண் - டொன்றுமென
வாட்டியொன் றாக்குதலுங் காட்டாம லத்துவிதங்
காட்டியதே கல்லாலிற் கை.

---

**82.** +அப்பிராமணனென்பதற்கு, இழிகுலத்திற் பிறந்து பிராமண கர்மங்களைச் செய்து கொண்டிருப்போனென்று சிலர் பொருளுரைப்பர். அஃதீண்டுக் கோடற்பாற்றன்று. பிராமணனாகப் பிறந்து ஊனும் பிழியுமுண்பவனென்பதே கோடற்பாற்று.

87 **அ**த்துவிதச் சொற்கிவ்வா றத்தங்கொள் ளாதேக
நித்தமெனின் முத்திபெறு நீர்மையினர் - மித்தை
யெனவாந் துவிதமெனி னின்பிலைசேர் வென்னி
னனகாம் பரமெலிவிற் றாம்.

88 **ஆ**கலினிவ் வத்துவித வத்தம் பலவுள்ளுந்
தோகமில தேயென் றுணிபாமிஃ - தோகையுய
ருண்மை யநுபவத்திற் கொவ்வுநனி யோங்குகதே
வண்மை யருள்விழைவார் மாட்டு.

89 **சு**த்தமெனு மிவ்வத் துவிதப் பொருட்கணெழு
வத்து விலக்கணமு மற்றையவும் - வித்தைப்
பெருநூல் சிறுநூல்க ளாகப் பிறங்கென்
*றிருநூல்கள் கூறுந் தெளித்து.

*இன்னிசை வெண்பா. முற்றுமுடுகு.*

90 **மா**தவமி லாமனதின் மாலுளது மாலுளது
நீதமுண ராமனதி னீலுளது நீலுளது
பாதகமெ லாமடுகு கேசனடி பாடுணர்வி
லேதமிறை யேனுமிலை யே.

அத்துவிதப்பொருண் முற்றிற்று.

*நேரிசை வெண்பா.*

91 **தூ**வார் மலர்தூய்த் தொழுவார்க்கு மின்பொருளீன்
மாவான கற்பகமெம் மான்குகவேள் - பூவா
மவன்றா டுதிமின்க ளார்கடனே நீங்குங்
கவன்றோடு நன்மாந்தர் காள்.

92 **எ**ன்றமிழை யுண்மடுக்கு மேர்ச்செவிய னாமுருக
னன்றறிவிக் குந்தூய ஞானகுரு - வென்றெழுபல்
பண்ணவர்க்கு மேலாம் பரம குருவெனற்குக்
கண்ணுதலே சாலுங் கரி.

**89.** * ‘திரு’ எனுமொழியை முதற்கட்கொண்டு விளங்காநின்ற திருவலங்கற் றிரட்டு, “திருப்பா” முதலிய நூல்கள்.

93 **அ**ழகாய தண்ணளியி னந்தணராய் வாழுங்
கிழவோர்காள் வேலேந்து கேடின் - மழவோனெப்
பண்ணவரு மெண்ணப் படுவோ னெனற்குமரைக்
கண்ணரியே சாலுங் கரி.

94 **ம**டவிய வார்முலையார் வண்டோளை நாளுந்
தடவியுழன் மாந்தர்காள் சாவா - வடல்வேலோ
னெண்ணா ரெவரையுமே தண்டிப்போ னென்றற்கெண்
கண்ணானே சாலுங் கரி.

95 **அ**ம்பரனை நாடு மறிவுடையீர் செவ்வேளா
மெம்பரனை மிக்கழக னென்றறிதற் - கும்பரெலா
மாதரமுற் றேபுகழு மாற்றலுடைச் செங்கண்மால்
காதலியர் சாலுங் கரி.

96 **ப**ல்லேடும் பார்த்திப் பழவுலகிற் சித்திகள்செய்
வல்லாரே தேவென்னு மக்காள்வேல் - வல்லான்
றிடனுளமா சித்தரெலாந் தேடுசித்த னென்னக்
கடமுனியே சாலுங் கரி.

97 **க**ட்டிளமை மாறாக் கடவுளாஞ் செவ்வேளை
மட்டில்லா மாவீர னென்றுசொல - வட்டவரி
முட்சூல் வசிநுழையா மொய்ம்புப் பெருவலிவெங்
கட்சூரே சாலுங் கரி.

98 **வெ**ண்டளையை யோராதார் வெண்பாவு மக்கலியு
மொண்டுறையும் பாடவலி யுள்ளாரோ - பண்டுலகீ
ராழ்கலிபோ லாரருள்வே ளாற்றலுண ராரவ்வேட்
சூழ்வலியுள் ளாரோ சொலும்.

99 **யா**ன் பிறந்த ஷூரா மிராமேச் சுரமங்கே
தான்செல்லே னந்தத் தலமேய - வேன்முருகை
யெங்குமுள தேவெனவு மென்கண்ணு முள்ளதென
வுங்கருது கின்றே னுவந்து.

100 **சே**ணார்க் கினியதிருச் சேயவனை யோர்சிறிதும்
பேணாப் பெருமை பெருமைகொளும் - வாணா
ளறுமுன் னவனடியுள் காசை பிறங்கின்
வறுமையாம் வந்தவறு மை.

101 **ந**ன்செல்வ வேலரசை நம்பாதார் முன்னோன்மை
யின்செல்வஞ் செல்வ மெனுநம்பு - மன்பு
நிகழாணை மிக்குடையார் நீடுய்யு மாறு
துகளாகுஞ் செய்த துகள்.

102 **ஞா**லக் கடறாண்டி ஞானக் கரைசேர்ந்த
சீலக் கனல்வரைப்பேர்ச் செல்வனையே - போல
முழுதுங் குமரனையே முன்னுதல்கை வந்தோ
ரமுதிங் கலையாருய் வார்.

103 **க**ல்லாதார் மேம்பாடு கற்றார்முன் மங்குதலிற்
கல்லாதார் கற்றாரைக் காண்டலுமே - பொல்லாத
வஞ்சம் விளைப்பரென வாள்வேலோய் நானவர்கட்
கஞ்சுமிள நெஞ்சமுடை யன்.

104 **க**ற்றார்தம் முள்ளுங் கசடருளர் வேலோயுன்
னற்றாளி லன்புசெயு நற்குணமொன் - றுற்றார்தாங்
கல்லாரே யாயினுமக் கற்றார்க்கு மேலோரிந்
நல்லா ரதுநட்பு நன்கு.

105 **கு**டமுனிக்கும் பாணினிக்குங் கோதில்லான் சொற்ற
வடமொழிக்குந் தென்மொழிக்கு மாறா - யிடுமே
தணிகா சலமயிலே சம்முருகே சன்னென்
றணிகாலிந் நாட்டிலறை தல்.

106 **வ**ளம்பூ ரணமாமிம் மண்டலத்தி லெங்க
ளிளம்பூ ரணற்பாடு மின்பீர் - களஞ்சேர்
கலியிற் சிலமகமு மம்மணமுங் காசற்
றொலியிலக்க ணங்குறைபாட் டும்.

*கட்டளைக் கலித்துறை.*

107 **ப**ண்டாய வொப்பில் சரித்திரந் தன்னைப் பராசரன்சேய்
கண்டாய வாறுசெய் காந்தம் புகழு மலாதுபெரி
துண்டாய மாபிர பந்தங்க ளில்லை யொடுங்குகவி
கொண்டாய புத்தக மேசில வுண்டெங் குருபரற்கே.

108 **தே**யிர வோடு பகலுமில் சேந்தன் றிருவடியை
யாயிர மாயிர மாப்புகழ் மின்கவி யார்தமிழா
னோயிர வேம னதிகார மண்ணாநன் னுண்ணுணர்வாம்
பாயிர நூல்கள் பலவுந் தெரிதமிழ்ப் பண்டிதரே.

109 **மு**ன்னிலா ருள்ளுண ராநினை நித்தலு முன்னிடுவோர்
முன்னிலா ரந்தக னார்விடு தூதுவர் மோதவொளி
முன்னிலா வுங்களி யேமிகு மெற்கு முதமருளின்
முன்னிலா ருள்ள நடிக்கின்ற வாறு முககுருவே.

110 **மு**ன்னிலா வேணி யுழன்றிட வானந்த முக்கணிதன்
முன்னிலா டீசன் கனல்விழி வந்த முருகநித
முன்னிலா ழன்புடை யேனையு முன்னருண் மூடுநல
முன்னிலா ரோடிருக் கச்செயு மோநின்றன் முன்னமதே.

111 **சி**றந்தேயு நல்லன்பு வாழ்க்கையி னாளுந் திகழ்ந்திடவே
சிறந்தேயு நிட்டை யிருப்பரைத் தேடித் தரிசிக்கினு
மறந்தேயு மின்ப வருளேயு மென்றுள வாய்மைகண்டு
மறந்தேயு மெள்ளுங்கொ லென்னெஞ் சுனைச்செம் மழமுனியே.

112 **தி**றவேல் செறிந்த பெருவயற் சேந்த திறப்பதொன்றைத்
திறவேல் விடுகென வேநீ தடாமற் றிறக்கவருண்
மறவேல் புகும்வரை யுத்தர கோசமங் கைத்தளிவாழ்
மறவேல் வதிகைத் திருவவிண் ணாசெம் மழமுனியே.

113 **க**ட்டே யிருக்கு மெனைவிடு விக்கக் கருதளிநின்
கட்டே யிருக்கு மெனவுணர் வுற்றுனைக் கண்ணுமென
கட்டே யிருக்கு முரணுள தோபசி கட்டிடத்திற்
கட்டே யிருக்கு முதனூன் முதலயிற் கையரசே.

114 **து**திக்கை முகவிளங் காளைதம் பீயெஞ் சுவாமியென்று
துதிக்கை யெவரிடத் துண்டவர் சொல்லினைச் சொல்லினும
துதிக்கை யொழிகை யிலாததைக் காட்டுமுட் டோன்றுமினி
துதிக்கை யுறுபே ருலகைப் பழத்திற்குச் சுற்றரசே.

115 **ஓ**டி யறியா மனத்தரு முள்கப்ப னும்மகனுந்
தேடி யறியா வடிமுடித் தேநல்கு சேயவனைப்
பாடி யறியாத நாநறு நாக்கொல் பகலுமல்லு
நாடி யறியா மனநன் மனங்கொலுண் ணட்பினரே.

*நேரிசை வெண்பா.*

116 **மு**த்திமுதல் வேறென்னா முன்னிடுவ தெற்றுக்குச்
சித்திமுதல் முத்திமுதல் சேயதனைச் - சத்தரனென்
னுத்தம மாவிளக்கி லேகொளுத்தி யுள்ளபகல்
வத்தியெனக் கொள்க மதித்து.

117 **ஆ**டுவார் பாடுவா ரன்பரொரொடு கூடுவா
ரோடுவார் தேடுவா ரூமர்போன் - மூடுவார்
நிற்பா ரிருப்பார் நெடுங்கூ ரயிலனரு
ளற்பா லடங்குமடி யார்.

118 **பா**வத்தின் மூத்துப் பகைமையினின் மூத்துநெடுங்
கோவத்தின் மூத்துக் குடிகெடுப்போர் - மாவித்தை
யாளர்க்கும் வாய்த்தற் கரிதா மிளம்பெருமான்
றாளூற்றுய் வாரோ சதா.

119 **ப**ரம்பொருளெவ் வண்ணம் பரிசுத்த மோவத்
தரம்பெருகி னோரே சமான - பரம்பெறுவ
ரென்றறிதன் ஞாயமென்ப ரெம்மிறையா மாண்மகன்
றன்றுணையை விட்டுவிடா தார்.

120 **ஆ**ண்மகனா மெம்மிறையை யாசற்ற கண்ணாலே
காண்மகனே வீயாக் கதிபுக்க - சேண்மகனென்
றோதற்கு மையமுள தோகளியி னோங்கவவன்
காதற்கு ளாயகருத் தே.

121 **ம**ந்திரம் பேய்மை மருந்தறியேன் மற்றவர்செய்
தந்திரந் தேரேன் றயைமிக்கா - ரெந்தையாங்
கந்தனே போமளவிக் காசினியி னானுய்த
லெந்தவா றோவறிகி லேன்.

122 **க**டுத்தின்றான் சேயேபல் காலு மிவன்றான்
கொடுக்கின்றான் றுன்பெனநீ கொண்டா-லடுக்கின்ற
வின்னா வனைத்திற்கு மீடு கொடுத்துய்ய
வென்னாலே யாமோ வினி.

123 **இ**ம்மா நிலமற்று மெற்கில்லா தற்றிடநான்
சும்மா விருக்குமட்டென் றூக்கிறைநீ - சும்மா
விருக்கொணா தென்வேண்டு கோட்படியே செய்தி
திருக்கொணார் வேலோய் தெரிந்து.

124 **வா**ய்க்கு மதுர மனக்கு விருந்துவன்
னோய்க்கு மருந்து நுகர்பசியைத் - தேய்க்குஞ்
சருமேன் செவிக்கினிதெஞ் சாமி குமாரப்
பெருமான் பெரிய பெயர்.

125 **பே**ரம்ப லங்கண்டுன் பேர்பன்னி நின்றதுபோற்
சீரம்ப லஞ்செய்சிற் றம்பலஞ்சேர் - நேரந்தண்
ணார்தயவி னாலணைக்கு மாண்டகையே செவ்வேளே
யார்தயவி னின்றிடுவேன் யான்.

126 **தீ**யனேன் றீதெல்லாந் தேய்த்த சுரகங்கை
சேயனே நின்றன் றிருவடியி - னேயமே
யிந்தத் துறவா மிருஞ்செல்வ மீந்ததினி
யந்தத் துறவு மருள்.

127 **அ**ன்புக்கன் பாநின்றெஞ் ஞான்று மணைத்தாளு
மின்புக்கந் தாவுனதன் பிற்கிங்கே - துன்புற்றே
யீன்றாளி னன்பை யிணையாக்குங் கொல்லோநின்
வான்றாள் விழையென் மனம்.

128 **பு**த்தற் புதவாழ்வார் புள்ளிருக்கும் வேளூருய்
முத்துக் குமாரனது முன்செல்வா - னித்தினநா
னூறுகெடச் சேறலிடை யூறாதல் கண்டுபல
வாறெனுளம் வாடிற் றரோ.

129 **பொ**ய்தபுக்கும் புள்ளூரெம் பொன்னயிலோய் நானுனக்குச்
செய்தகுற்ற மேதுமில்லை செய்திருப்பி - னொய்தறுக்கு
நீபொறுத்துக் கோட னினக்குக் கடனேயுன்
மாபதத்தை வேட்டன் மதித்து.

130 **த**ண்டை சிலம்பு சதங்கைக ளோலிடுநின்
னிண்டையந் தாட்போ திரண்டையுநான் - கண்டு
களிதலை மீக்கொள்ளுங் காலமெஞ் ஞான்றோ
வளிதுதைவே ளூர்முருகை யா.

131 **ப**ந்த நிகளமது பட்டென்ன வேயொடிய
வந்தருளு மெந்தாய் மயிலீசா - வெந்த
வடிவையு நீயெனவே வந்திக்கு மெற்குன்
னடிதூர மாமோ வறை.

132 **நா**ட்பட்ட தேவருன்னு நாயகனெம் மான்குகனுக்
காட்பட்டு ளாரை யவமதிக்குங் - கோட்பற்
றுடையூத்தை வெந்நெஞ்ச மொல்லைநம னார்காய்
கடுமூர்க்கப் பேய்வாழ் கடறு.

133 **த**யவறா நெஞ்சச் சடக்கரதே வைச்சூழ்
நயவரே ஞாயமெது மின்றிக் - கயவ
ரொருகன்னந் தாக்கின்மற் றொன்றுங் கொடுமின்
றிருமன்னு நுங்கட் சிறந்து.

134 **அ**றுமுகனை நிந்திப்போற் காணி னவன்வா
யிறுமா றடக்குகவன் பேய்ந்தோர் - வறிதே
லிருநற் செவிமூடி யேகவுண்ணொந் தேந்தல்
கருதித்தண் டித்தல் கடன்.

*பின்முடுகு - பல்சந்தம்.*

135 **பூ**ரணத்தைக் கோடற்கென் புத்திரவா வாவென்றுன்
னாரணச்செந் நாத்தா னழையாதோ - வாரணச்செந்
தோகையிறை வாநெடிய சோதியயி லாவரைவி
லீகையுடை யீசநவி லே.

136 **ஔ**ளவினுரு வைத்தெரிவா னன்றேட்டை யாராய்ந்த
விவ்வறிவி லிக்கா யிரக்கணக்காத் - தெவ்விறமிழ்
பாடவுயர் நூலுணர வேபணிய பாதவருள்
கூடவரு ளாதுகொல்கு கா.

137 **வெ**ன்றிவடி வேல்பிடித்தம் விஞ்சுமயி லூர்காளா
யன்றுசொன நின்மொழிமுற் றாங்கால - மென்றோ
வெனமா கவல்கூ ரெனுளே மகிழ்மா
நனவே யதைநீ நவில்.

138 **வ**ம்பார் கடம்பணிந்து மஞ்ஞை வருகாளாய்
நம்பார் வழிகடந்த நானுன்ற - னம்பூ
ணடிவாழ் வினையே யடைநா டொலையோ
படிறே னறிமா பகர்.

139 **எ**ந்தா யருள்வள்ளிக் கேற்றதலை வாவென்னுட்
செந்தா மரைப்போதைச் சீறுநின - தந்தா
டடதா கிடதா தடதா வெனவோர்
நடமா டிடவே நடி.

140 **சே**ண்மதியு நாணவரு செம்முகமு முன்னுநரைக்
காண்விழியு முள்ள கதிர்வேறாங் - காண்மை
கிளர்ந்த கடம்ப கிளம்பெ னகந்தை
களைந்தி டுவந்து கவிந்து.

141 **அ**டியார்க் கெளியனென வன்புநனி செய்யும்
வடிவேற் பெருமவெனுண் மல்கு - கடியாங்
களிப்பை யளப்பில் கருத்தை நிசத்தை
யொளிக்கு மிருட்டை யொடுக்கு.

142 **எ**ப்பாடை யுள்ளாரு மெத்தேயத் தெண்ணிடினு
மப்பாடை தேர்ந்தேயங் கங்கருள்வே - லப்பா
விளாத கறாத வினோத வடூறு
கொளாவொ ருவீடு கொடே.

143 **ச**ந்ததவின் பார்தெய்வத் தந்திதலை வாமயிலூர்
கந்தசிவ னேநிற் கருதெனக்குத் - தந்தருடி
யண்டார்பு கழ்ந்திடு னந்திக முங்கழல்
கண்டும கிழ்ந்திடு கண்.

144 **எ**ன்னுடைய நாயகமே யெங்குமொரு பூரணமா
மின்னெடிய வெஃகரசே வேண்டெனக்கா - லின்னளியிற்
றந்தரு ணின்கெழு தண்கழல் கண்டணி
கந்தர மிஞ்சுத கை.

145 **கா**ண்டொறுங் காண்டொறுங் காமுறற்கா முன்னடியே
வேண்டெனது முன்னெடிய வேன்மழவே - யீண்டுரையாய்
பொய்த்திட லற்றவிர் புத்தறி வுக்களி
துய்த்தியெ னச்சொலொர் சொல்.

146 **க**டியார் கடம்பணிந்து கானலயி லேந்தித்
தொடியா ரொடுவருவோய் சூழ்ந்துண் - ணடியே
தனதத் தனதத் தனதத் தனதத்
தனதத் தனதத் தென.

147 **வா**டா மலர்சூடா வாரயில்கை யேந்தியெனைக்
கோடா யிருவரையுங் கொண்டாய்வந் - தாடாய்
தனதந் தனதத் தனதந் தனதத்
தனதந் தனதத் தென.

*கட்டளைக்கலித்துறை.*

148 **த**மிழ்வளந் தேர்ந்த குமர குருபரன் றன்மனத்தின்
புமிழ்வளங் கூரும் படிக்கருள் பாலித்த வுள்ளங்கொடுள்
ளிமிழ்வளங் காணவென் கண்ணொரு நட்ட மிழைத்திசந்து
கமழ்வளங் கொள்குய வேனற் கொடிச்சியங் காவலனே.

149 **அ**விமுத்த மேய குமர குருபர னையவென்றுன்
பவிமுத்த வொண்ணகை வள்ளிகொண் காவின் னருட்குயிணாய்க்
கவிமுத்த ரீசுர வானந்த தாண்டவ கந்தவென்றன்
கவிமுத்த மேயருள் காமுற்று நிற்குமென் கண்மணியே.

150 **பூ**மண நாறுநின் பொன்னடி நாட்டப் புனிறுகொண்டே
யூமண நாறுபெண் ணல்குல் விருப்பை யொழித்தவெற்குச்
சாமண நாறுதன் மேவாப் பரகதி தந்தருளாய்
பாமண நாறுசெந் நாவா குமார பராபரனே.

151 **அ**ரவை விரும்பி யணிமணி கண்ட னருங்குருந்துன்
வரவை விரும்பி யிருக்கின்ற வெங்கண் மனம்புணர்க்கும்
விரவை விரும்பி யெழுந்தரு ளென்பவர் வீழுமருட்
பரவை விரும்பி யுலம்பெனை யாளென் பராபரனே.

152 **க**டிய விருமனந் தேடாவு னின்பக் கழலிணைகாண்
கடிய விருமனந் தாரா யெனக்கொலி காட்டுசிலம்
படிய விருமனஞ் சிந்தைசெய் யாதி படைத்தவகம்
படிய விருமனஞ் சென்னி புடைத்த பராபரனே.

153 **சா**ங்கட்டி லேகிடந் தோய்வார் செயறழை யாதெற்குனன்
பாங்கட்டி லேகிடந் துய்புத்தி யீயர னாரளித்த
தீங்கட்டி யேகுற மான்பக்க நாடர சேசிறந்தோர்
பாங்கட்டி டாதணைத் தாள்குக னேயென் பராபரனே.

154 **ஆ**ய்ந்தறி யும்படி சொன்னூ லுணர்ந்திங் கழுங்குமன
மோய்ந்தறி யும்படி யோதுங் கடவு ளுரைபிடித்துள்
ளேய்ந்தறி யும்படி நிற்பார் பெரும விரக்கவெள்ளம்
பாய்ந்தறி யும்படி வாவெனுட் கந்த பராபரனே.

155 **அ**டிக்க வனேக கணங்கணல் வாச்சிய மானந்தமா
நடிக்க வனேக கணங்கள் விருதுக ணாற்புறமும்
பிடிக்க வனேக கணங்கணற் பாடகர் பின்னுமுன்னும்
படிக்க வெனதெதிர் வாராய் குமார பராபரனே.

156 **கொ**டியா னினைப்பினுக் கெட்டாத சீர்த்தியங் கோழியணை
கொடியா னெமைக்கொள்க வென்பார் தமைக்கொள் குகவெங்கவி
படியா னகத்தை விழைவைகொல் கந்தன் பலரளவிற்
படியா னெனச்சொறொன் னூற்பொரு ளேயென் பராபரனே.

*பின்முடுகு - பல்சந்தம்.*

157 **பே**யணை மங்கையர் வார்முகிழ் வன்முலைப் பெட்புவந்து
பாயணை துன்ப மொழிந்தது போலென் பழமலந்தான்
றீயணை மேவிடு நாளெது வேதொரு தீதுமிலா
நீயணை நாளெது கூறுதி மான்மக ணேடரசே.

158 **நோ**யுரு வாமிப் புலாலுடல் சேதித்து * நுன்னருளிற்
றோயுரு வேற்றிட வல்லனு மல்லேன் சொலார்மறையு
மேயுரு வீழ்தலின் ஞானமு றாதெனு மேபரிவோர்
தாயுரு வாயகு காசெயு மாறெது தானருளே.

159 **ஒ**ளியே விழைந்து சுகத்தி லுலாஞ்செய லொல்கியல்குற்
களியே விழைந்து நசிப்பவர் காணாக் களியினையென்
னளியே யுளநீ கொளவா வெனையே யடையெனவே
விளியே விளியே துணிகா னுதிவேல் விறலரசே.

**158.** * உன், நின் எனும் பொருள் பயக்கத்தக்க "நுன்" எனுமிது சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரத் திருமுறையில் "நொந்தா வொண்சுடரே நுனையே நினைந்திருந்தேன்" என வருதற் கண்ணுமுளது. "சலந்தரன் முதலா நுன்குலத் தலைவர்" எனத் தணிகைப் புராணத்திற் சீபரி பூரணப்படலத்து 133–வது திருச்செய்யுளிலும் வந்துளது. பிறநூற்கண்ணுமுண்டு. இவ்வாறு வருவழக்கறியா வுரையாசிரிய ரொருவர் "சொல்வழுவென்பது சொல்லிலக்கணத்தொடு – புல்லா தாகிய புகர்படு மொழியே." என்ற தண்டியலங்காரச் சூத்திரத்திற்கு இச்சொற்புக்க வொரு செய்யுளைத் தானே யுதாரணமாகக் காட்டி அதிலுள்ள "நுனக்கு" என்பதை வழூஉச் சொற் புணர்க்கப்பட்டதாக வரைந்து வைத்தார். அதற்கது காட்டாகாதென மறுக்க. பன்மைக்கு நும்மெனுஞ்சொல் வரூஉமென் றுணர்த்திய தொல்காப்பியனார் முதலிய இலக்கண நூலுடையாரும் ஒருமைக்கு நுன்னென்பது வரூஉமென் றுணர்த்தாமைக்குக் காரணம் யாதாமெனின், – இதுபோன்ற அடிப்பட்ட சான்றோர் வாக்கிய மவர்க்குக் கிடையாமையே யஃதாமென்க.

160 **மொ**ழியே கரும்பு விழியே சுரும்பென முன்னியல்குற்
குழியே விழுந்துழி தந்தழி காமுகர் கூறுவஞ்ச
வழியே நடவே னுனையே தொடர்வேன் மருவியநோ
யொழியே யருளே கொடுவா மயிலே றொருதுரையே.

161 **ப**லநோய் விளைவதற் கேதுவென் னென்று பகுத்துணரின்
மலநோய் தனைமுத லாயுள்ள கன்ம மலமெனவாங்
குலநோய் குடிநோய் குணநோ யிலிநீ குயிலதனோர்
சலநோய் தொலைமா றருளாய் பரபூ தரகுகனே.

162 **ப**றந்து திரிகின்ற பாழ்த்தநெஞ் சோடு படுந்துயரை
மறந்து திரிகின்ற நல்லார்கள் வாழ்க்கை மருவிடவே
பிறந்த வெனெஞ்ச மடங்கி யுறங்கல் பெறும்படிநீ
சிறந்த வரம்பு ரிகந்த சிவந்த சிலம்பிறையே.

163 **அ**லைந்த மனத்தக மேபிர பஞ்ச மனைத்துமது
கலைந்த மனத்தக மேசுக முண்டெனக் கண்டுணர்நான்
மலைந்த விடந்தி டநின்று பிறங்க மனஞ்செய்துழாய்
மிலைந்த முகுந்த னருஞ்சு தையன்பு விரும்பரசே.

164 **தி**ருத்த முளமறை யாகமந் தேர்ந்து சிவமெனுஞ்சொற்
கருத்த மொருபிர மஞ்சூ ழதுகுக னாமெனக்கொள்
கருத்த ருளத்தி லிருக்கு மளப்பில் களிப்பினையே
பொருத்த வெனக்கு மளித்தி யுயுத்த புரிப்பொருளே.

165 **அ**ளக்க வமையாத வண்டங்க ளெல்லா மடங்குமுன்றன்
விளக்க வருள்வெளிக் குள்ளதற் குள்ளென் விளைவடக்கிக்
கிளக்க னினைத்தன் மறத்த லுமற்ற கிடக்கைகொடாய்
துளக்க வயிற்க ரவத்த நிரப்பில் சுகக்கடலே.

166 **அ**னாதி மலமுத்த னாய நினதடிக் கன்புடையென்
மனாதி கரண மெலாந்தப நின்றுன் மகாமவுன
மெனாது கணாக விராவ லெநாள்சொ லிறாதவிணோர்
மனாது வளாவ யிலாசு ரசேனை மனோரதனே.

167 **அ**ந்தர மோவிடை செந்துவ ரோவித ழல்குழலோ
மந்தர மோமுலை யென்றுழல் வோர்செல் வழிப்புகுதாச்
சுந்தர நெஞ்சம கிழ்ந்திட வந்தருள் சொந்தமொடா
லெந்தர நன்குணர் கந்தநி ரந்தர வெண்குணனே.

168 **வெ**ய்ய பகைக்குப் பெரும்பகை யாய்நல்ல வேட்கையினுக்
குய்ய வருளுநட் பாயுள்ள சேந்தவென் னுண்ணடிவா
தைய தனத்தன தைய தனத்தன தையதனா
தைய தனத்தன தைய தனத்தன தையெனவே.

169 **க**னதன வள்ளிகண் டேகளி கூரொரு கட்டிமுத்தே
யெனதன னெஞ்சங் குளிர்ந்திட வோர்நட மேபுரியாய்
தனதன தத்தத் தனதன தத்தத் தனதனனா
தனதன தத்தத் தனதன தத்தத் தனவெனவே.

*நேரிசை வெண்பா.*

170 **பி**மரங்கா ணும்போது பெட்பொடுகொள் கூற்றின்
சமரங்காண் முன்னே தவம்பே - ணமரங்கா
ளோங்கார நாட்டா யொளிர்சிவலிங் கத்துநமை
நீங்காத சேயையுள்க னோர்.

171 **தா**மாலைக் காதுகுகன் றாள்விழைவோய் வேள்வாடும்
பூமாலைக் கின்பம் பொழியுமெனி - னாமீயும்
வாடாத பாமாலை வம்பாமோ நன்னீதி
கோடாத நீயே குயில்.

172 **வி**ருத்தியறு சேய்மையிலும் வேண்மனைவி மக்கள்
கருத்துநல மாறியகா லத்துந் - தரித்திரநோ
யுற்றகா லத்து முனைவிரும்பு வார்கொள்கை
நிற்குமோ வேலோய் நிலைத்து.

173 **எ**ல்லிருக்குங் கண்ணல்லு மல்லிருக்குங் கண்ணெல்லு
மில்லிருக்கும் பூவி லிராவாறு - வில்லிருக்கும்
வென்றி யயிலோயுன் மெய்ந்நடையும் பொய்ந்நடையு
மொன்றி யிராவெனலென் னோர்ப்பு.

174 **க**னாவி னனாவுமலர்க் கண்டிறந்து காணு
நனாவிற் கனாவுமிலா ஞாயம்போன் - மனாசை
யுலகிற் பரமும் பரத்தி லுலகு
மிலையென்ப சேயின் பினர்.

175 **இ**றக்கவொண் ணாதெனவோ தேடுபடித் தேமேற்
பறக்கவெண் ணெஞ்சீரிப் பாடேன் - றிறக்கவருள்
செய்யுங் குகனும்முட் டேசா யுளன் காணி
னுய்யுந் திறமுண்டா கும்.

176 **நூ**ற்றை யடுத்தபத்து நூற்றோசை கோடல்போ
லூற்றை யொழிக்கு மொளிமுருகன் - காற்றண்மை
யுற்றவனைச் சார்நல் லுயிரு மவன்பெயரே
பெற்றுய்யு மீதே பெரிது.

177 **கு**றுநூற்றி லேதுங் குறையெண்ணவ் வோசை
பெறுமாற்றல் காணாத பெற்றி - யுறுமாறே
யம்முருகன் றன்மைகுறை யான்மாவுங் கீழ்நீர்த்தா
மிம்முறைமற் றெண்ணுயிர்க்கு மே.

178 **நூ**றொருதொண் ணுற்றையுந்தொண் ணுறிழியெண் யாவையுமெவ்
வாறுதனு ளாக்கிமே லாமோவவ் - வாறுகுகன்
முத்தரையும் பெத்தரையு முற்றி றனுளடக்கி
யத்துவித மாயிருப்ப னார்ந்து.

179 **வே**ந்தைக்குச் சக்கரமீ வேந்தை நெடுஞ்சூல
மேந்தைக்குச் சேய்க்களிநல் கெம்மானைத் - தோந்தைக்கு
நெஞ்ச நினைத்திடுமோ நீடாக்க முற்றிடுமோ
செஞ்சொ னயமுடையாய் செப்பு.

*மடக்கு. (யமகம்).*

180 **ஆ**னை யுரியானை யன்பி னுரியானை
மானை யணிவானை மாவானைக் - கோனையுயர்
தந்தையெனும் வாயானைத் தாழார்க்கு வாயானை
யெந்தையெனும் வாயோ னியான்.

181 **வே**ட்போர்வாழ் வுள்ளானை வேளார்வாழ் வுள்ளானை
ஞாட்போர்கா ணல்லானை ஞாயமிலா - வாட்போர
ரூட்டி னயிலானை யோகை யயிலானை
யீட்டின்பாக் கொண்டோ னியான்.

182 **ஓ**ங்குவரை யில்லானை யொப்புவரை யில்லானைத்
தீங்கினர்கண் ணில்லானைச் சேயழக - னாங்குகனை
யேசி லருளானை யெண்ணா ரருளானை
யீசனெனக் கொண்டோ னியான்.

183 **ஏ**த்துநருட் கண்ணானை யேத்தாருட் கண்ணானைக்
கூத்தரனார் நீட்டுமயில் கொண்டானை - நீத்தளியே
கொண்டார்க்கு மஞ்சானைக் கூடெவர்க்கு மஞ்சானை
யெண்டேவாக் கொண்டோ னியான்.

184 **ஆ**றம் முடியானை யந்தின் முடியானைக்
கூறின் மொழியானை கொண்டானை - வீறுகொள்வேன்
மின்சிவப்புக் கையானை மேவினர்க்குக் கையானை
யின்செருக்கிற் சேர்வோ னியான்.

185 **கூ**டுநர்சொற் கேளானைக் கூடார்சொற் கேளானைச்
சூடுதொடைத் தோளானைச் சூரொடுபோ - ராடுதொழின்
மங்கமனம் பண்ணானை மாசுவையம் பண்ணானை
யெங்கணுமே சூழ்வோ னியான்.

**வேறு.**

186 **ப**ணநல்கு வோருற்றாற் பார்ப்பார்தங் கோவி
லணவியவர்க் கொண்டாடு வார்காண் - பணநல்கார்க்
கேது முதவா ரிவர்க்கும்பொன் வேசிகட்கும்
பேதமென்னை வேன்மழவே பேசு.

187 **இ**ருப்புள்ளார் கையேற் றிலாவன்பர்க் கன்பு
பெருக்குதளிப் பார்ப்பாரே பீழை - முருக்கி
யிகபரத்து மேயுய்வா ரென்பநின தன்பர்
பகையறுத்தாள் வேற்கைப் பரா.

188 **கா**ட்டரணே நீரரணே கல்லரணே வெள்ளிடையின்
மோட்டரணே கொள்ளினுமென் மொய்ம்பியமன்-சீட்டுடையா
ரெய்திடுபோ தோரரணு மில்லையத னான்முருகன்
கையடைசேர் நட்பைக் கருது.

189 **ஆ**க்கையள வேயுன் னதிகார மாக்கைவிடிற்
றாக்குநமன் றன்னதிகா ரங்கண்டாய் - சீக்கிரமே
யென்னுடைய நாயகவே லீசுரனுக் காட்படுதி
யன்னமனார் தாக்க லற.

190 **ப**லமேவு மக்களுருப் பட்டுளநீ யீண்டுப்
பலவாறு சிந்தித்துப் பாழ்த்த - கலதியென
வோடி யுழலாதே யுட்புலத்து ளேகுகனை
நாடி யிருத்தி நடந்து.

191 **பு**றக்கோயில் செல்லும் புலந்தோறும் வாரா
திறப்போர்க்கு முண்டிதயக் கோயின் - மறப்போர்க்
கிரண்டு மிலைநினைவோ ரேர்ப்புறமுங் கண்டுட்
டிரண்டுநனி நோக்கல் சிறப்பு.

192 **அ**கக்கோயி னிற்ற லதிகமுறின் மற்றைச்
சகக்கோயி னேமந் தடையே - சுகக்கோயி
னிற்கு மொருகுகனை நெஞ்சிருத்தி யுய்யோகங்
கற்கும் விவேகி களுக்கு.

193 **வி**ழிப்புண்டா மாயின் விளங்குமயிற் கையன்
பழிப்பில்பூங் கோயிறனைப் பார்த்து - விழிப்புன
லூற்றெடுப்ப மேல்வலம்வந் தோகையுடன் வீழ்ந்தெழீஇ
நீற்றினையிட் டுள்ளடக்க னோ்.

194 **அ**ருள்பழுக்குங் கற்பகமா மாண்மகனை வெஃகா
விருள்பழுக்குஞ் சோம்புடையர்க் கிந்தத் - தெருள்பழுக்கு
முள்ளும் புறமு முயர்வாகா வென்பநிதந்
துள்ளுந் துயர்வென் றுளர்.

195 **உ**டம்பழகு காட்டி யுலாத்தரு பேதா
யுடம்பழகெஞ் ஞான்றுமுண் டோசொல் - கடம்பழகன்
கால்பிடிக்கு நல்ல கருத்தழகு கோடியிது
கோல்பிடிக்கி னுஞ்சால் குழகு.

196 **ந**ற்குடி வந்தவெழி னாரிநீ யாண்பூட்டுச்
சொற்குடன் பட்டச் சுகங்கருதி - னிற்கின்
றருங்குகன் வாழ்வண்ணா தாஞ்சூ லொடுபல்
லிருங்கலா மேமே லிடும்.

197 **ந**ற்குடி வந்தவெழி னம்பிநீ பெண்பூட்டுச்
சொற்குடன் பட்டச் சுகங்கருதி - னிற்கின்
றருங்குகன் வாழ்வண்ணா தாந்தொய் வொடுபல்
லிருங்கலா மேமே லிடும்.

198 **தூ**ண்டிற் பசைவிழையு மீன்பெரிய துன்புறல்போ
லீண்டுப் பெருந்துயர்சிற் றின்பருமே - காண்டறுணி
பாதலினம் புந்தியுளீ ரத்துன் புறாதுகுகன்
பாதநலஞ் சேர்மின் பணிந்து.

199 **ஆ**சில் பரிபூர ணானந்த போதத்தி
னேசி றுறவிற்சிற் றின்பிழிவைப் - பேசினேன்
வாதுளதே லவ்விளக்கம் வாசித்துத் தீர்ந்துகுகன்
போதடிசேர் மின்களளி பூத்து.

200 **ப**தக்கண்டா பண்பா வலங்கற் றிரட்டின்
முதற்கண்டம் பாடு முருகோன் - பதக்கண்டா
மின்புனது கண்ணுறுமா றேதி லருணோக்கு
மன்பருநின் முன்வருகு வார்.

201 **யா**ப்பி னிலக்கணமும் யாத்த விலக்கியமும்
யாப்பொலிபல் சித்திரமு நச்சியல்போய் - மூப்போ
தலங்கற் றிரட்டினிரண் டாங்கண்டம் பாருன்
விலங்கைத் தறித்து விடும்.

202 **ம**ன்பதையெல் லாமாள்வேன் மன்னே நினதங்கா
லின்பதுமம் விட்டுவே றேபுத்தே - டன்பதமுட்
டாழை விரும்புஞ் சரீரியெனு மஞ்சிறைவண்
டேழைமதி யென்னா மிவண்.

203 **எ**ன்பெருமா னாம்வள்ளா லேரார் மயிலுகைப்போ
யுன்பொருவி லாமுகத்தி னுக்குலகுய் - யன்பர்
மதியை யுவமிக்க மாண்பினது செய்த
முதியதவ மென்னீ மொழி.

204 **ஒ**ளிசான் முழுமதியே யுன்னைமட மின்னா
ரளிவாய் முகத்திற்கொப் பாக்கத் - தெளிபுலவ
ருண்டதனாற் சேய்முகத்தை யொப்பிடே னிற்கொருநீ
யெண்டிசையெ லாமியங்கி னும்.

205 **கூ**ழைச் சிகியூருங் கோநின்கட் டீயளியர்
பீழைக் கடலாம் பெருக்குணுமுன் - கேழைக்
கடைக்கட் குளிர்ச்சியன்பர் கண்ணிருக்கும் வெப்பை
யடக்கி யருள்புரியு மால்.

206 **வ**ன்மையுங் கூர்மையு மில்லா மதனம்பு
சென்மவுயிர் வெல்லுஞ் செயல்வியப்பே - பொன்மையயில்
வேலோ யதினும் வியப்புன் னினைப்படியர்
பாலாய பந்தம்வெல் பண்பு.

207 **ஞா**யிறுகண் டாங்கு நனிகண் டிறுமாக்க
வேயெனுள் வந்தருள்செய் வேலோயே - யோய்விலா
துன்னரிய தீயரஞ ரோட்டி நலம்புரியு
நின்மதியி னோர்தானென் னீர்த்து.

208 **ந**ல்லார் விரும்புநெடு ஞாங்கரவிர் கைக்காளாய்
பல்லா யிரவுலகும் பன்னரிய - வில்லார்
வெளியி லடங்குநின் மெய்ம்மை யடங்க
வுளதின் றெனவுணர்த லுப்பு.

209 **சீ**ர்த்த திருமலிநச் செவ்வேட் பெயர்ப்பெரியை
கூர்த்த வயிலோயுன் கோதிலடி - பார்த்தவிவ்
வீயுண் மரைகளிம் மேலழகென் றோநமக்கு
மேயுமென வாடினவா லிங்கு.

210 **மை**த்த விழிமானே மாமாய விவ்வுலகங்
கைத்த மனத்தவர்கள் காமுறுமின் - பைத்தருசெவ்
வண்ணலயி லோன்சொல் லமுதநுகர் வோர்மதியின்
றண்ணமுத நச்சுவர்கொல் சாற்று.

211 **பூ**வளிகள் கிண்டுகுழற் பூவாய்செவ் வேளடிமஞ்
சாவளியை நோக்கமக வானுக்கு - மோவலறச்
செப்ப வனந்தற்குந் தீட்டவொரு வீரியற்குந்
துப்புவலி யுண்டோ சொலாய்.

212 **ம**ழைமதர்க் கண்மானே வண்பாம்பே பாம்பின்
குழைநடைக் கால்காண் குணம்போ - லிழைவள்ளி
மன்னுலையா மாண்பினையம் மன்றா னறிமோமற்
றென்னவோ யானறிகி லேன்.

213 **சி**த்தப்பெண் ணேயெற்காச் சேயிடநீ தூதுசென்று
முத்துப்போ லுன்னன் முகம்வோ்த்துக் - குத்துப்பட்
டேர்வன்மைக் கொங்கைகுழைந் தேவந்தாய் நான்செயவிங்
கோர்கைம்மா றுண்டோ வுரை.

214 **கு**றுநீ ருறைமீன் குளிர்நதிகண் டாங்கு
மறுநீ ருடையென் மனது - நறுநீ
றணிமேனிச் செவ்வே ளடிகாணிற் கொள்ளுங்
கணியாமெய்ப் போகக் களி.

215 **மு**றுக்கவிழு மொட்டிண்டை மூடுதடஞ் சூழுங்
குறுக்கமறு காளத்திக் கோவில் - சிறக்கவுறை
வென்றிக்கை வேலவுனை வேண்டென்னை நோக்காயே
லென்றுக்க மெவ்வா றிறும்.

216 **சு**ழித்தோடும் பொன்முகலித் தொன்னதியின் றண்மை
செழித்தோங்குங் காளத்திச் சேயே - விழித்தீங்கு
செய்தவற் குன்றந்தை செய்தகதி யைத்தானோ
வெய்தெற்குஞ் செய்வா யிசை.

217 **பா**ட்டளிக டேனுண்டு பாடுந் திருவாலங்
காட்டரனார் தந்தவிளங் காளாயென் - பாட்டுத்
தமிழ்த்தனித் தேவுன் றயவன்றி யென்னோய்
துமித்தருள்வா ருண்டோ சொலாய்.

218 **கா**னார் திருவாலங் காடா ரயினாதா
வானார் பணிசெம் மலர்ப்பாதா - நானா
ருனக்கய லானோமற் றோராத பேயோ
வெனக்கயல்போ னீநிற்ப தென்.

219 **எ**ங்கு மிருக்கின்ற வெம்பெருமா னேசேயே
கங்குல் பகலுனையே காமுறுநீர் - பொங்கு
மெனதுநெஞ் சஞ்சிறிது மேங்காமே செய்த
லுனதுநெஞ் சின்கடனன் றோ.

220 **வ**ள்ளி மணவாளா மாசி லருளாளா
புள்ளி மயிலூரும் பொற்புலவா - வள்ளிலைவேன்
மன்னாவுன் வாழ்வுக்கே மாலானேன் கொள்ளாயே
லென்னாகு மென்னிலைமை யிங்கு.

221 **ப**கிர்முகத்தே தேடு பதுமத்தா னுக்குந்
துகிர்நிறக்கண் மாலுக்குந் தோன்றா - தகமொளித்த
சென்னியுஞ் சேவடியும் போலுமோ வெற்குமுன
தின்னருள்கொன் வேலோ யியம்பு.

222 **அ**ளியாத்த நீப மணியுன்றாள் கண்டு
களியாட் டயர்கின்ற கால - மெளியேற்குத்
தூரமெனி னெஞ்சந் துடிதுடிக்குஞ் சூரடுமா
தீரவிரை விற்றயவு செய்.

223 **அ**ஞ்சிறைய மஞ்ஞாயுன் னாண்டவனென் னாண்டவனே
நஞ்சுறைநீர் மீன்போல நான் மயங்கி - னஞ்சிறுவ
வஞ்சற்க வஞ்சற்க வென்றருளா வாறெனவன்
செஞ்சொற்க ளானன்கு செப்பு.

224 **இ**ருள்போல் விராயமல மெற்றியருள் செவ்வே
ளருள்வாதி யென்னகமே யார்ந்த - மருள்கண்டு
நேடி வராநீரென் னேரி லவன்கொடியா
யாடிவருங் கோழீ யறை.

225 **இ**ழிவில் பெருங்கருணை யீசனெனுஞ் சேயோ
னழிவில் கருணைவிழைந் தாசில் - கொழிதமிழ்சொன்
னாவா ரருணகிரி நாதாவுன் றேவென்னை
மேவாத பண்பென் விளம்பு.

226 **நா**டுமதி காணூஉ நார்நறிதீ கந்தனையே
பாடுமரு ணாசலப்பேர்ப் பண்ணவனே - பீடுடையுன்
றேவனையே நம்பிடுமிச் சிந்தையனை யன்னவனன்
காவணையா வாறென் னறை.

227 **மெ**ய்யடியார் சூர்தபுத்து மின்னும் விறல்வேலே
தொய்யடியா னயமுமென் றுன்பிரியச் - செய்யடியா
னாங்குமரன் றான்வந் தருளா திருத்தலெவ
னோங்குமரு ளானன் குரை.

228 **அ**ளப்பரிய சத்தியெனு மாரயிலே யென்ற
னிளைப்பழிய வாளுன் னிறைவன் - வளப்பவருள்
காட்டானே னான்சேர் கதியென்னா முற்றவருட்
கூட்டானே நீயே குயில்.

229 **பெ**ருங்கருணை யாகப் பிறங்கெந்தாய் வல்லீ
யருங்கரிமின் னேயெனையா ளப்ப - னிருங்களிவே
ளெண்ணா திருப்பினினி யென்செய்வேன் சொன்மின்க
ளுண்ணார் பெருக்கி யுவந்து.

230 **தா**மரைக்கு நீரன்றிச் சார்பிலையவ் வாறெனக்கும்
போம்வரைக்கு நின்னையலாற் போக்கில்லை - யோமுரைக்கு
மாண்டகையே செவ்வேளே யானந்த தாண்டவனே
யாண்டுமிது சத்தியமே யாம்.

231 **வே**ரிக் கடம்பணிதோள் வேந்தே கருங்கவல்சேர்
மூரிக்குவ் வின்னு முளைப்பதென்றாற் - பாரித்த
துன்புமீ தூரத் துடிதுடிக்கு மென்னெஞ்ச
மன்புமீ தூரவின்றே யாள்.

232 **ம**ட்டவிழும் பூங்காவில் வாழ்பறவை காளெனிருங்
கட்டவிழு மாறு கருணைபுரி - நெட்டயில்வே
ளாக்கவடி நச்சுபுமிக் கஞ்செனது நெஞ்சிலுள
வேக்கமுடி நாணவின்மி னின்று.

233 **கொ**வ்வைக் கனியுண்பான் கூடுபசுங் கிள்ளைகா
டெவ்வைக் கடியயிலன் றேவர்கோன் - செவ்வை
மலையாளி யென்கவலை மாற்றவரு நாளென்
றுலையாவன் பானுரைமி னோர்ந்து.

234 **மு**த்தனைய புள்ளியெழின் மொய்த்தகுயில் காளறைதிர்
நித்தநினை யன்பருழை நீணிலத்தி - னெத்துயரு
மொட்டா தவர்செல் வுழிச்சென்று புல்வுழிப்புக்
கிட்டாள்செவ் வேள்வருநா ளென்று.

235 **இ**ன்றே னருந்தி யிசைபாடு பூவளிகா
ணன்றேனும் போனானு முய்பாக்கா - லென்றே
வெனுங்குமர வேடுணையி லின்பப்பே ருள்ள
மினுங்கருத வில்லையிது வென்.

236 **ந**ன்மருந்து விண்ணவரே நற்றயவு செய்திஙனீர்
பன்மருந்து தேடுநரும் பார்ப்பரிய - சொன்மருந்து
கொண்டுவருஞ் சூர்ப்பகைநீ கூறற்க துன்பெனினு
மண்டியழுங் காதென் மனம்.

237 **சா**ன்றீரே சான்றீரே தண்ணளியி னீயிரிங
னான்றோ ரகக்கோயி லார்குகதே - மேன்றோலா
மின்சொற் கொடுவருநீ யெற்றுக் குழல்கின்றா
யென்சொற் சொலினெற்கா மின்பு.

238 **மு**க்கால முந்தெரிநன் மோனமுளீர் ஞானமுளீ
ரெக்காலம் வேள்வருமென் றேங்குமென்மு - னக்கால
மிக்கால மென்னா விசைப்பீரே லென்மனத்தின்
மிக்காய வெந்நோய் விடும்.

239 **து**திப்பிரிய னாமுருகன் றொல்புகழை நன்கு
துதித்துவய மாக்கவருந் தூய்மை - கதித்தபல
நாப்படைத்தே னில்லை நமறகரிக்கப் பல்கரமெய்
யாப்படைத்தே னில்லையளி யேன்.

240 **ஏ**னலம ரோர்மானை யெண்ணியிரு கால்சேப்பப்
போனவொரு காளாயென் புந்தியுடம் - பூனமெலாம்
பாற்றியருள் பண்ணுதலுன் பக்கமன்றோ வெஞ்ஞான்றுங்
கூற்றினியின் றென்றே குயின்று.

241 **ப**த்தர் பெருமானே பன்னரிய பண்டிதனே
சித்தர் பெருமானே சேயவனே - யித்தருண
முற்றபிணி யொன்றொழித்துள் ளோகைதந்த வாறேநீ
மற்றொன்றுந் தீர்த்தி மகிழ்ந்து.

242 **இ**வ்வருடக் கந்தசட்டி யேதமற முற்றுமென
வெவ்வருள ருந்துதிக்கு மீசாவென் - றெவ்வினெஞ்ச
மெண்ணியதற் கோரிடையூ றென்கணொரு நோயாயிற்
பண்ணியிடல் யாது பகர்.

243 **அ**ன்ப ரகக்களியா யானந்த வாரிதியா
யின்ப மலையா யியங்குகுகா - துன்பந்
தொலைத்தருள வேண்டுமெற்குன் றூவடிமெய் வாழ்க்கை
நிலைத்திடவென் றேநீ நினைந்து.

244 **சே**ந்தவனே சேந்தவனே சேவடியீ யென்பவர்கட்
போந்தவினை சீத்தருளும் புண்ணியனன் - பாந்தயவா
லிவ்வருடச் சட்டி யினிது நடந்ததிவ்வா
றவ்வருளும் வந்துகொள்க வார்ந்து.

245 **ஏ**துநா முண்ணோ மெனவிருந்தி யாருமறி
யாதிரா விற்புசித்துள் ளார்மலநீர் - தாது
மறைக்கும் பதடிகளை மான்களௌன நம்பே
னறைக்கடம்ப னல்லடியார் நம்பு.

246 **மா**ணிப் பிரப்பன் வலசைதனில் வாழுமெழி
லாணிப்பொன் வேலேந் தருளாளா - வீணிற்செல்
புந்தியுளோர் நட்பறுத்துன் பூவடிசூழ் வாழ்வெனக்குத்
தந்ததுபோன் மேல்வீடுந் தா.

247 **கொ**ம்ப ரிருக்குங் கொழுந்தேங் கனியுகுமா
றிம்ப ருனை நினைந் தேயிருக்கு - நம்ப
ருடலுமுயி ரும்பிரியு மோமற்றென் னாமோ
படர்முடிவிற் சேயே பகர்.

248 **க**ருவி லழிவபல்ல கட்டுமுலைப் பாலைப்
பருகி யழிவபல்ல பண்பு - பெருகியெழில்
கூர்போழ் தழிவபல்ல வென்றுணராக் கோண்மதியுஞ்
சூர்போழ் குகற்றொழுமோ சூழ்ந்து.

249 **அ**ன்னைநுக ராகார மக்குழவி சென்னிநடு
மன்னுதொளை சென்று வளர்க்குமென - வுன்னி
யெழுதிவைத்த பொய்யேட் டினைநம்பு மாந்தர்
குழுவுமொப்பில் சேயறியுங் கொல்.

250 **தா**யருந்து மன்னத்தின் சாரநா பிக்கொடியின்
வாயிலா கச்சென்று வண்சிசுவின் - காயம்
வளர்க்கு மெனவறியா மந்தமதி யோவொள்
ளொளிக்குமர னொண்மையறி யும்.

251 **நி**லத்தும்பை தொல்சுரத்தை நீக்குதல்போ லென்றன்
மலத்துன்பை நீக்கு மருந்தே - குலத்தும்பர்
நாயகனே செவ்வேளே நானாடு நன்னிலையை
யீயளியி னென்கவியை யேற்று.

252 **தி**யானத்தின் மூப்பே சிவநிட்டை யென்றுன்
றயாநச்சு நல்லார் சவஞ்சேர் - மயானச்செந்
தீயண்ணா ஞானமயா னஞ்சேர்வர் தீதகைக்குஞ்
சேயண்ணா வாண்டெனையுஞ் சேர்.

253 **எ**ன்பாட்டுத் தேவே யெரிவரையின் பேர்ப்புலவன்
றன்பாட்டுச் சாமீ தயவுடையா - யின்பாட்டுக்
காட்டியெனைக் கொள்காலங் கம்பலையி ராதெனலே
தீட்டஞ்சு மென்னெஞ்சின் றீர்வு.

254 **கொ**ன்முடியே முண்டித்துக் கோவணமொன் றேவீக்கி
யென்முனமுன் னேவந்த வேருருவை - யின்னுமொரு
காலென்கண் கண்டு களிகொளுமோ கொள்ளாதோ
வேலொன்று கையோய் விளம்பு.

255 **வா**ளசுரர் கோளரியாய் மாணடிசூழ் யாவரையு
மாளரசா யுள்ள வறுமுகவே - டாளருளை
யெண்ணா துழிதந் திரிவதுதான் முன்றவமே
பண்ணா வறியவர்தம் பாற்று.

256 **து**ங்க வருட்சிவமாய்ச் சூழடியார் தேவாகி
யெங்கு மிருக்குமயி லீசனைநன் - கிங்குணராப்
பேதைமைதா னல்லூழ் பிறங்கா விலம்பாட்டு
வேதனைமிக் குள்ளார்தம் மேற்று.

257 **வி**ண்முதலோ ரைந்தற்கும் வேறாயல் லுள்ளதுபோன்
மண்முதனா தாந்த மலிகருவி - யுண்மைக்கு
வேறாயஞ் ஞானவிருண் மேவிநிற்கு மென்றுணர்தல்
காறேயில் சேயடியார் கட்டு.

258 **பூ**தத்தின் வேறாய்ப் பொலியிருள்பூ னைக்கண்ணை
வாதித்து மூசி மறையாம - லேதமக்கள்
போதகல்கண் ணேமறைத்தல் போலுண் மலியிருளூ
நாதனலா ஞானமறைக் கும்.

259 **இ**ருடா னொளிமுன் னிருந்து மதன்வண்மை
பெருகா தடங்குதல்போற் பேதந் - தருமிருடான்
ஞானக் குகனருட்செஞ் ஞாயிற்றின் முன்னடங்க
றானத் துவிதசுகச் சால்பு.

260 **இ**ருளின் மதிபிரகா சிப்பதுபோ லேதொல்
கருளில் விளங்குங் கருத்துத் - தெருளன்று
சிற்றறிவே யாமென்று தேர்ந்துகுகற் சூழ்வோர்க்கு
முற்றறிவை யீயு முருகு.

261 **வி**ண்ணானை வென்றிமுனை வேலானை மூவாறு
கண்ணானை யோவாக் களியானை - யெண்ணா
வுயிரு மலவிருளை யோட்டுங்கொல் லோவெஞ்
செயிர்தீர் மதியுடையாய் செப்பு.

262 **க**ட்டுக் கருளறுக்குங் கந்தபக வான்றானே
யெட்டுக் குடியிருக்கு மீசனவன் - மட்டில்
கருணைக்கா ளாவோர்க்குங் கம்பலையொன் றுண்டோ
வருணச்சு மைந்தா வறை.

263 **சா**ந்துணையும் வீரமே சாதிப்பார் போலுடம்பு
போந்துணையு நச்செவ்வேள் பொன்னடியே-யாந்துணையென்
றவ்வடியே நாடுதிற னார்ந்தார் பெறும்பேறே
யிவ்வடியா னாடுகின்ற வின்பு.

264 **அ**ணுபக்கஞ் சம்புபக்க மாய்ந்தறிந் தன்பு
பணுபுத்தி யின்றிப் பலவா - றெணுபுத்தி
யுள்ளார் வழிச்செல்லா துன்னருளே நாடெனைநீ
கொள்ளா வழியென்சேய் கூறு.

265 **எ**ளியே னிறுமாக்க வெஞ்ஞான்று மொல்கா
வளியே யளித்தருள்க வாசில் - களியே
தருகவமு துண்ட தகையுடைவிண் ணோருங்
கருதரிய வொண்குகலிங் கம்.

266 **பா**ரா தனவெல்லாம் பார்த்துப் பரமார்த்த
வாரா வமுதை யடைபெரியர் - சீரார்
நிலையெற்கு நன்கருள்க நீடுசிவா னந்த
கலைமிக் கவிர்குகலிங் கம்.

267 **எ**னாது துதியெல்லா மின்செவிக்கொண் டொல்காத்
தனாது பதியெனக்குத் தந்தா - ளனாதி
யருணிலையை யீக வகத்தினடு வேமின்
கருணைகெழு பொற்குகலிங் கம்.

268 **எ**ன்றன் மனவடக்கத் திற்கோ ரிடையூறே
யின்றி யருள்புரிக வின்பருள்க - தொன்றுதொட
ரேசொட்டா மேயுய்வா னெண்ணுந் திருவடியார்
காசெற்று சிற்குகலிங் கம்.

269 **அ**டியார் சினஞ்சினவி யன்பிற் புணர்த்தி
முடியா வொருநன் முடிவீ - கடியா
மமலவரு ளைத்தமியேற் கீக வகச்செங்
கமலமம ருங்குகலிங் கம்.

270 **வெ**ல்க பிணிகளையே வெல்க வினைகளையே
வெல்க விருள்வலியை வெம்மனத்தை - வெல்கவிது
செஞ்சிவமென் றுள்ளிநிதஞ் சிந்திக்கு மென்னிதய
கஞ்சமம ருங்குகலிங் கம்.

271 **கொ**ல்க கொடும்பகையைக் கொல்க பொறாமையினைக்
கொல்க மடமதத்தைக் கோண்மடியைக் - கொல்க
தளையண்ணா வாழ்க்கை தருக வெனாது
களைகண்ணா குங்குகலிங் கம்.

272 **இ**டைகலை பிங்கலையை யேணார்மற் றொன்றை
யடைநிலைக் கண்ணே யடைத்தென் - னுடைய
வுருவுணர்வை யுண்டருள்க வோங்கார மாநான்
கருதுமறி வுக்குகலிங் கம்.

273 **எ**வ்வுலகு முள்ளடக்கி யென்னுருவைத் தன்னுருவாச்
செவ்வ னிழைத்தே செறிந்துசுடர் - தெவ்வினிலை
தந்தருள்க தந்தருள்க சச்சிதா னந்தசிவ
கந்தனென வாங்குகலிங் கம்.

274 **உ**டம்பால யுத்துள் ளுளவான்ம லிங்கத்
திடம்பிறங்கு மீசன் குகனத் - தடம்பொருளைப்
பார்க்க விலிங்கநடுப் பாவித் திடுமுதியோர்
சீர்க்குமே லில்லையொரு சீர்.

275 **கு**கனிருக்கு மூர்த்தங் குகலிங்க மேயக்
குகனுருக்க வற்புவந்து கூடிற் - குகனிருக்கு
மொன்றிரண் டல்லா வுயரத் துவிதநிலை
நன்றுறுமென் றென்மனமே நம்பு.

276 **சி**த்துருவா யுள்ள சிவகுகனு மான்மாவு
மத்துவித மாக வவிர்தலினான் - முத்திவிரும்
பான்மா விலிங்கமா மத்தே விலிங்கியாம்
வான்மா றிடாவிதுவே மாண்பு.

277 **இ**ம்மாண்பே யோகமுடி விம்மாண்பே ஞானநிலை
யிம்மாண்பே யொப்புமுத்தி யென்றறியுஞ் - செம்மாண்பர்
முன்னவனுக் கான்மாவோர் மூர்த்தமென வுண்மைநூல்
சொன்னதுமிஃ தென்ப துணிந்து.

278 **பி**ண்டமும் பிண்டத் துயிரு மிலிங்கமெனக்
கண்டபடி கோவில் களையமைத்துட் - கொண்டவிடந்
தன்னிற் சிவலிங்கந் தாபித்தார் மிக்காரென்
றுன்னித் தொழுவருணர் வோர்.

279 **அ**ஞ்சுயம்பு லிங்கமதா மான்மாவைப் போலவே
செஞ்சுயம்பு லிங்கமுமென் றேதெரிநன் - னெஞ்ச
ரனைத்துஞ் சிவலிங்க மாமுண்மை கண்டு
நினைத்தகுக னாத னிசம்.

280 **வெ**ண்காந்தட் பூவணிசேர் மேன்றோ ளுடையிறையே
யொண்காந்தித் தாணினைவார்க் கோகைதரு-வண்காந்திச்
செக்கர் நிறமுருகே சிற்சுகநான் மேவலெந்நாள்
சொக்கர் களுமதிக்கச் சொல்.

281 **சீ**தைசென்ற மார்க்கந் தெரியாமற் றேடுமரி
நாதனங்கி யாய்நின்ற நம்பனது - கோதிலடி
தேடிமயங் கானோசொல் செங்கண்மா லன்பவெனு
நாடினருண் சேயடியர் நா.

282 **த**வநிந்தை செய்யாத சக்கரமா லன்பா
சிவநிந்தை யின்றிநீ செல்லி-னவநிந்தை
காணாது வைகுந்தங் கண்டுமகிழ் வாயன்றேல்
வீணாளர் போலுழல்வாய் மிக்கு.

283 **ம**தத்தாற் சிவகுகனை வைகதைகள் கட்டிப்
பதத்தாள் வினையின்றிப் பாழா - மதத்தார்போல்
வண்சங்க மேந்தரியை வைகுற்றங் கோடற்க
வொண்சைவ னாகியநீ யும்.

284 **ச**ழக்காற் றுயருழந்து சாம்பொழுதும் பொன்னங்
குழைக்காத னாங்குகனைக் கும்பிட் - டழைத்தால்
வருவான் றுயர்துமிப்பான் வஞ்சமிலா வாழ்வு
தருவான் கருணையினாற் றான்.

285 **நா**ன்றுயர வென்ற னடுவான நெஞ்சமது
தான்றுயர வோசெய்யுந் தண்ணளிசா - லான்றவர்தங்
கல்விப் பொருளோர் கருணைப் பரமசிவ
செல்வக் குமரன் செருக்கு.

286 **ப**ல்பெரியீர் பல்பெரியீர் பாவகியை யேநேடிச்
செல்பிரிய முற்றதினிச் சேரார்பேண் - டொல்புவிநோ
யென்கடைவந் தோங்க நடுவுண்டோ வின்னன்பி
னன்கறிந்து சொன்மி னனி.

287 **அ**ந்திமான் சந்திமா னானார்க் கருள்குகனே
நந்திமா னம்புமொரு நன்மகனே - தந்திமா
னன்பா மழமுனியே யானா நிழலரசே
யென்பா டறிந்தருடி யின்று.

288 **நி**ன்னருளிற் சித்தி நிகழ்த்திடுவா ருள்ளாரே
லன்னவரை யெற்கினிய ராக்கியரு - ணின்னருடா
னின்றிப் பலவினையா லேது மிழைப்பாரோ
டொன்றப் புரியேல்வே லோய்.

289 **அ**வ்வுயிர்போ லெவ்வுயிர்க்கு மண்ணலா யுள்ளகுக
விவ்வுயிரின் கட்டுன்பொன் றேய்ந்தக்காற் - றெவ்வறுநின்
னுள்ளம் பொறாதென்றே யுன்னருளை நம்பியுளேன்
கொள்ளன்பில் யாதுளதோ கோள்.

290 **யா**தொருபி ராணிபடும் யாதனையை நாம்பொறா
நீதியென நம்மினோய் நேர்பொழுது - மாதயவு
மல்கயிலோ னும்பொறுக்க மாட்டா னெனவுணர்தல்
பல்கவிபா டென்னெஞ்சின் பண்பு.

291 **கா**ண்பசிசோ றுண்டக் கடையொழியு மாறிம்பர்
மாண்பறுமென் னுள்ளே மலிகலக்கஞ் - சேண்படருந்
தேவர்பிரா னெம்பெருமான் செவ்வேள்கால் கண்டவழி
யோவலுறு மஃதெக்கா லோ.

292 **தொ**ழும்பர் குழாஞ்சூழத் தோகை மயின்மீ
தெழும்பர மேசா விதவுக் - கழும்பரிசேன்
கானங்கா லும்புவிகாண் கான்மகிழ்வெய் தாததென்னை
வானங்காண் போதுமகிழ் மாறு.

293 **மு**முச்சீத வெண்டிங்காண் முட்டறுமொள் விண்ணே
விமுச்சீர் விசாகன் வியன்றாட் - குமுச்சீர்சூழ்
பத்தனென கண்கணுமைப் பார்த்து மகிழ்ந்திடல்போ
லித்தரைகண் டேமகிழா வே.

294 **தீ**ங்காம் வினையேதுஞ் செய்யன்மோ செய்யன்மோ
போங்காறு நல்லுளமே புல்லுளம்போ - லோங்கார
மேனிச்செவ் வேட்சூழ் விழுமியோர் செய்கையினி
லேநிற்றி நாளு மியைந்து.

295 **ஏ**லக் கருங்குழலார் யாவரையுந் தாயெனவே
சாலக் கருதுதலுந் தாழேழை - போலத்
திரியுயிரை மக்களெனச் சிந்தைசெய லுஞ்சூ
ரரிமுருக னன்பரியல் பாம்.

296 **பொ**ன்னினையு மண்ணினையும் பொய்யென் றுணர்ந்துபுறஞ்
சென்னினைவு சாலாச் சிலவரிவை - நன்னிலைதேர்
ஞானிகளை யென்செய்யு மென்பரிவர் நட்பொழித
லானியில்சே யன்பர்க் கழகு.

297 **ஆ**சைப் பிணியாளர்க் கக்குகதே வில்லையெனு
மோசைப் பலநூ லுணர்ந்தாரு - மாசைப்பேய்
பொள்ளென வுண்ணுழைந்து பீழிக்கப் புன்னடையே
கொள்ளுவதிங் கென்னை கொலோ.

298 **ம**ந்ததர மந்தமுயர் தீவிரம தன்றரமெ
னிந்தநாற் பக்குவர்கண் ணேற்றறிவு - கந்தெகுளும்
வாழைத்தண் டீர மரநன் குலர்ந்தவிற
கேழைப்பஞ் சிற்றீ யிடல்.

299 **ப**ன்னோய்பல் லோடு பறந்தாங் குதிப்பழிவாம்
வன்னோயஞ் ஞான மலத்தொடுபோ - மந்நீண்
மலங்கோறல் வேலிறைவன் மாணருளென் றோர்ந்துட்
கலங்காது நிற்றல் கதி.

300 **இ**ரக்க வருணகிரி யெண்ணத்தெஞ் ஞான்றும்
வரக்கடவு ளாங்குகனை மால்சால் - குரக்குமன
மெண்ணா ததையாத்தவ் வீசனையெண் ணிக்கலுழுங்
கண்ணா ருறார்பின்னுங் கட்டு.

### *கட்டளைக் கலித்துறை.*

301 **க**டல்சூழ் கிடக்கு நிலத்துட் பெரிதடுக் கல்லதினு
மடல்சூழ் பொறுத்தபொன் மேரு பெரிதோங் கதினுமெண்ணி
லுடல்சூழ் பசுத்தனு மாயை பெரிததி னும்மதுவே
விடல்சூழ் கருத்துப் பெரிததை யீயெற்கு வேலரசே.

302 **தீ**தற்ற செங்கழைச் சாறே கசக்குமின் றேன்கசக்குங்
கோதற்ற பாலின் சுவைகசக் குங்குடக் கூழ்கசக்கு
மேதற்ற முப்பழங் கற்கண்டு தெள்ளமு தேகசக்கும்
வாதற்ற நின்சீ ருணர்ந்தார்க் கயிற்கை மழமுனியே.

303 **சீ**ர்மல்கு வாயுண்டு கையில்லை காலில்லை செந்தலையுண்
டேர்மல்கு நின்றாள் பராவுநர்க் கென்று மெனவுணரென்
னார்மல்கு நெஞ்சி னடுவே யெழுந்தரு ணாதநெடுங்
கார்மல்கு மட்டார் குழல்வள்ளி கொண்கவென் கண்மணியே.

304 **ஊ**னம் பரந்த பிறப்புண்டு நோயுண் டுறுகணுண்டெள்
கீனம் பரந்த வறுமையுண் டுண்மரு ளுண்டிரியா
ஞானம் பரந்த நினைப்பணி யார்கட்கெஞ் ஞான்றுநறுங்
கானம் பரந்த குழல்வள்ளி நாயகி காவலனே.

305 **ஊ**னம் பரந்த பிறப்பின்று நோயின் றுறுகணின்றெள்
கீனம் பரந்த வறுமையின் றுண்மரு ளின்றிரியா
ஞானம் பரந்த நினைப்பணி வோர்கட்கெஞ் ஞான்றுநறுங்
கானம் பரந்த குழல்வள்ளி நாயகி காவலனே.

306 **து**ன்பே முயங்குதற் போதமென் றோது தொகைகொடுத்தே
றின்பே முயங்குநின் சேவடி பெற்றே யிருப்பரரு
ளன்பே முயங்குநல் லாரவர் பெற்றி யளியெனக்கு
மென்பே முயங்கணி பூணரன் றந்த விறையவனே.

307 **நே**யங் கிளர்ந்த மனத்தார்க் கினிய னிலமகிழ்ச்சி
மாயங் கிளர்ந்தநெஞ் சில்லார்க் கினியன் மறங்கள்புகா
ஞாயங் கிளர்ந்தவுள் ளுள்ளார்க் கினிய னவைதபுவொண்
டோயங் கிளர்ந்த சடையாற் கினியன் சுரேசுரனே.

308 **ஏ**தங் கலந்த மனத்தோ டுழிதரு வேனையிந்நாள்
வேதங் கலந்த மனத்தின னாக்கி விளம்பரிய
நாதங் கலந்த கழலார் களியென்க ணாட்டினது
சீதங் கலந்த மலரர சாங்குகன் சேவடியே.

## வெண்டளையான் வந்த பரஞ்சோதிக் கண்ணி.

309 **தி**த்திக்கு மானந்தத் தேனே தெளிஞரணை
முத்திக்கு வித்தே முருகா பரஞ்சோதீ.

310 **தூ**வடியர் பண்டைத் தொடர்ச்சிதுமித் தாணினது
சேவடியை நான்மறவேன் சேயே பரஞ்சோதீ.

311 **பொ**ன்னாடர் தண்ணளியிற் போற்றிசைப்ப வீற்றிருப்பா
யென்னாடல் கண்டருள்செய் யெந்தாய் பரஞ்சோதீ.

312 **அ**னந்தலை யற்பமற்ப மாகவென்மிக் கார்சேர்
நனந்தலை யீந்தருளென் னாதா பரஞ்சோதீ.

313 **அ**ந்த நனந்தலையி லாணீயு நானுமரோ
நந்த லிலா தொளிர்சீர் நல்காய் பரஞ்சோதீ.

314 **பூ**தவெளி மும்மாயைப் பூவெளியெல் லாங்கொளுமோர்
போதவெளி நிற்கயலாப் போகேன் பரஞ்சோதீ.

315 **தொ**ன்றுயிருண் ஞானச் சுடராய வுன்னைவெளி
யென்றலுப சாரமன்றோ வென்றும் பரஞ்சோதீ.

316 **வி**காரமிலி யாகவெங்கு மின்னுதலி னின்னைச்
சிகாதவெளி யென்றுமறை செப்பும் பரஞ்சோதீ.

317 **உ**றேனோ சிவஞான மொல்காவுன் றேங்கல்
பெறேனோ விதுப்பினனி பேசாய் பரஞ்சோதீ.

318 **நி**ன்னிறைவு சேர்பாக்கு நித்தம் பிதற்றியழுங்
கென்னிறைவு காண்கிலையோ வீசா பரஞ்சோதீ.

319 **இ**ங்கின்னு மெத்துணைநா ளிவ்வா றுழிதருவேன்
பொங்கின் னுவப்பாற் புகலாய் பரஞ்சோதீ.

320 **வா**னமாய் நின்றாயை வாக்காலெவ் வாறுசொல்வேன்
ஞானமாய் நின்றறிய ஞாட்பீ பரஞ்சோதீ.

321 **உ**ள்ளும் புறமு மொருபடித்தாக் காண்பாக்குத்
துள்ளும் பொறிமனத்தைச் சூழாய் பரஞ்சோதீ.

322 **வா**னமெல்லா மாளினுமிவ் வையம் புரக்கினுமெய்ஞ்
ஞானமில்லா ரேழையன்றோ நட்பே பரஞ்சோதீ.

323 **வி**ண்முதன் மண்காறு மெய்யில்லை யென்றுணர்ந்தார்
கண்முதன் மைத்திருவைக் காட்டாய் பரஞ்சோதீ.

324 **சி**வஞான மில்லாத செல்வவழி யெல்லா
மவஞான மென்றகன்றே னாளாய் பரஞ்சோதீ.

325 **க**யிலாயம் வைகுந்தங் கண்டாரு மிங்கா
ருயிராகி னாரென்னு மொண்ணூல் பரஞ்சோதீ.

326 **அ**ப்பருஞ் சுந்தரரு மக்கயிலை நின்றிழிந்தே
யிப்புடவி வந்துகண்டா ரெம்மான் பரஞ்சோதீ.

327 **ஆ**தலிற் சாலோக மச்சாமீ பம்போத
வீதலிற் சாரொருவீ டாகா பரஞ்சோதீ.

328 **ஞா**னசா யுச்சியநல் காவிடினு நாயேற்கன்
பானசா ரூபநல்கி யாளாய் பரஞ்சோதீ.

329 **மா**ரூப மண்ணுதிக்குஞ் சாரூப மல்லாவண்
சாரூப மொன்றைத் தருவாய் பரஞ்சோதீ.

330 **இ**ந்தப் பகுதியுடம் பின்னுமெடுத் திப்புவிக்கட்
பந்தப் படவெனைநீ பண்ணேல் பரஞ்சோதீ.

331 **கா**மியினுங் காமியரோ காமுறுதற் குள்ளவிந்தப்
பூமியினா னுற்றதுன்பு போதும் பரஞ்சோதீ.

332 **சி**ன்னாளிப் பூமிநின்றீர் சேர்ந்தீ ரழுக்கெனக்கண்
ணன்னார்க் கரனுமுரைத் தானே பரஞ்சோதீ.

333 **ம**ண்ணுலக மாசேறி மாளுமுன்னர் விந்துகொள்பை
யுண்ணுழைதல் போலிழுக்கொன் றுண்டோ பரஞ்சோதீ.

334 **இ**ப்படியா மண்வாழ்வை யின்பென் றெணார்க்கதையே
யெப்படிமே லுங்கொடுப்பா யீசா பரஞ்சோதீ.

335 **இ**ச்சைவழி யேநின் னிருஞ்சத்தி செய்யுமென
லச்சுருதி சொல்கடப்பா டன்றோ பரஞ்சோதீ.

336 **த**வம்புரிந்து வாழவிம்மண் டக்கதெனி னுங்கோ
ளவம்பொருத லூங்கென் றறிந்தேன் பரஞ்சோதீ.

337 **மா**சிலப்பி ராகிருத மன்னுசுத்தப் பேராக்க
மீசிலப்பி ணைத்தா ளிறையே பரஞ்சோதீ.

338 **நா**ங்கடவு ளென்பார்க்கு நஞ்செயலே யென்பார்க்கு
மாங்கதிகொல் லோவெனக்கு மாகும் பரஞ்சோதீ.

339 **உ**ன்னைவிடு வோர்க்கிரங்கா வுன்னருடா னுன்னைவிடா
வென்னைவிட ஞாயமுண்டோ வெந்தாய் பரஞ்சோதீ.

340 **வா**வா வலிந்துகொள்ள வாவா வளைந்துகொள்ள
வாவா நுகர்ந்துகொள்ள மாண்பார் பரஞ்சோதீ.

341 **தீ**யனைய செக்கர்த் திருமேனி காட்டியருள்
பேயனைய நான்வாழ்வான் பீடார் பரஞ்சோதீ.

342 **இ**ன்பை நினைத்திருக்கு மென்னைவிழுங் காவிடினுன்
னன்பை நினைத்தே யழுவேன் பரஞ்சோதீ.

343 **ம**ண்ணி னவைசெறுக்கு மாண்புபெரு காதேனிற்
கண்ணி மிகக்கலுழ்வேன் கந்தா பரஞ்சோதீ.

344 **எ**ன்னன் பினைத்தெனநீ யெண்ணியெனைக் கொள்ளாயே
லுன்னன்பை யுள்கி யுழல்வேன் பரஞ்சோதீ.

345 **அ**னைத்து மிருக்குமுனை யண்ணிநிற்கு மென்றுன்
பினைத்தென் றறிந்தருளா தென்னே பரஞ்சோதீ.

346 **இ**ச்சூர்த்த பூவாழ்க்கை யின்றியுனைத் தேடவொரு
பிச்சேற்றி விட்டாய் பிதாவே பரஞ்சோதீ.

347 **எ**ன்வினையோ *நின்வினையோ வேதோ வறிகிலனென்
றன்வினையி னீசுடராத் தன்மை பரஞ்சோதீ.

348 **த**னித்த வமைதியருட் சால்பாமஃ தொன்றே
நுனித்த கருத்துடையார் நோன்மை பரஞ்சோதீ.

349 **கா**ழ்த்த மரம்போன்று கற்போன் றிருக்குநெஞ்சிற்
பாழ்த்தமரு ளல்லான்மற் றுண்டோ பரஞ்சோதீ.

350 **எ**ரியிடை யிட்டமெழு கென்னவுரு கன்புக்
குரியவ ருய்வாரிஃ துண்மை பரஞ்சோதீ.

351 **சே**ரக் கருதுபுதஞ் செம்முகமெல் லாம்விழிநீர்
வாரக் கலுழ்வாரும் வாழ்வார் பரஞ்சோதீ.

352 **ஈ**ரக் கிருபையினை யெண்ணுபுதங் கையுமெய்யுஞ்
சோரக் கிடப்பாருந் தோன்றார் பரஞ்சோதீ.

353 **தெ**ய்வநசைப் பேய்பிடித்துத் தேங்குநர்க்கு நின்னரிய
சைவநிச வாழ்வுவந்து சாரும் பருஞ்சோதீ.

354 **ம**றவாத வாய்மறந்து மண்மறந்து நின்னை
மறவாத பத்தருமே வாழ்வார் பரஞ்சோதீ.

355 **ம**ண்மறந்து விண்மறந்து மைத்தமலம் வெல்லினுநின்
கண்மறைந்த பின்றான் கதியாம் பரஞ்சோதீ.

356 **மா**னவர்முன் ஞானம் வருவதுண்டேல் வானவன்முன்
ஞானமுறற் கையமுண்டோ நட்பே பரஞ்சோதீ.

357 **வெ**ந்தோ மறுத்தருளுன் மேலருளை நான்மறந்தா
லந்தோ கெடுவே னடியேன் பரஞ்சோதீ.

**347.** * நின்வினையோ = உனது செயலோ?

358 **எ**ண்ணிற் படாவுனரு ளென்னைவளை யாவிடினிம்
மண்ணிற் புரண்டழுவேன் மன்னே பரஞ்சோதீ.

359 **ந**ண்ணுதுன்பு நம்வினையே நன்மையவ னீகையென
வெண்ணுமன்ப னான்கா ணிறையே பரஞ்சோதீ.

360 **தொ**ழவே மதிபடையாத் தோமுளனா யிவ்வா
றழவே பிறந்தேனோ வையா பரஞ்சோதீ.

361 **ம**ற்றுக்க மற்றிருந்து வாழவுதித் தார்கணல்லா
ரெற்றுக்கு நானுதித்தே னீசா பரஞ்சோதீ.

362 **ப**ற்றுக் களைந்தேநின் பாதம் பெறாவொருநா
ளெற்றுக் குதித்தே னியம்பாய் பரஞ்சோதீ.

363 **கொ**ன்செய்வான் றாட்டிருவே கொள்ளப்பல் லோர்பிறந்தா
ரென்செய்வா னான்பிறந்தே னேசில் பரஞ்சோதீ.

364 **யா**னுறங்கும் போதுகருள் யானைவரின் ஞானசிங்கந்
தானுடன்று நோக்கவருள் சாமீ பரஞ்சோதீ.

365 **அ**ன்பாருன் றண்கடைக்கட் பார்வையே யார்வுடைய
வென்போல்வார் செல்வமும்ப ரேறே பரஞ்சோதீ.

366 **து**ன்ப முறாவுனக்குத் துன்பந் தெரிமோவத்
துன்பமெம் போல்வாரே சொல்வார் பரஞ்சோதீ.

367 **நோ**ய்கொல் வயித்தியர்க்கு நோய்கொல் வயித்தியனீ
யாய்மல் கருட்டிறமா ராய்வார் பரஞ்சோதீ.

368 **நோ**ற்றல் சிறந்துதிகழ் நுண்ணுணர்வுள் ளார்களுநின்
னாற்றல் வரைந்துநவில் வாரோ பரஞ்சோதீ.

369 **வா**ன்றிறமு மண்டிறமுஞ் சொல்லவல் லார்களுநின்
னான்றசெயல் சொல்லவறி வாரோ பரஞ்சோதீ.

370 **அ**ளியினு மின்னளியென் றையமறக் காணான்
விளியினு முன்னைவிடு வேனோ பரஞ்சோதீ.

371 **கோ**திலுனக் குத்தோழன் கொள்ளடிமை பிள்ளையென
வாதலுநல் லாக்கமன்றோ வம்மான் பரஞ்சோதீ.

372 **இ**ல்லவடொண் டன்சீட னென்ன வமைதலுமோ
ரல்லகண்ட மில்லாக்க மாமே பரஞ்சோதீ.

373 **அ**ரந்தையென்போல் வாரீண் டரற்றலுநீ வாளா
விருந்திடலுந் தொல்வழக்கோ வேகா பரஞ்சோதீ.

374 **பெ**ருங்களிப்பை நாடுநர்க்குப் பேரரந்தை மேவ
லருங்கருத்தி னாணைகொல்லோ வண்ணா பரஞ்சோதீ.

375 **ந**ல்லமுதங் காணுமுன்னர் நஞ்சுகண்ட வாறுனருள்
புல்லிடுமுன் றுன்பே புலுமோ பரஞ்சோதீ.

376 **எ**ம்மார்க்க மெவ்வா றியம்பினுஞ் சீவனுன்னாற்
செம்மாக்கு மென்பதென்றன் றீர்வை பரஞ்சோதீ.

377 **மா**வுலகிற் பன்மதம்பல் வாறுகழ றுற்றானுந்
தேவுயிர்க ளுண்டெனலென் றீர்வை பரஞ்சோதீ.

378 **அ**வ்விரண்டு மத்துவித மாஞ்சித் தெனலுமுற்ற
தெவ்விழந்து வாழவுள்கென் றீர்வை பரஞ்சோதீ.

379 **கா**ணரிய வவ்விரண்டைக் கண்டுசம மாகாமை
யாணவமென் றோர்ந்தேனென் னன்பே பரஞ்சோதீ.

380 **நூ**னவுயி ரைத்தேவை நோக்குநெறி காணார்சொன்
ஞானமுமொர் ஞானங்கொன் ஞானீ பரஞ்சோதீ.

381 **உ**ரைத்தபடி செய்வாக் குளாருமுயிர்ப் போதங்
கரைத்தநிலை காண்பாரோ கந்தா பரஞ்சோதீ.

382 **க**ண்ணிமைப்ப தற்குளுல கைச்சூழ் வருவோரு
முண்ணிலைத்த சித்தறிவா ரோமா பரஞ்சோதீ.

383 **எ**ண்சித்தி யாடுதிற னேய்ந்தோரு மத்துவித
வண்சித் தறிவாரோ மன்னே பரஞ்சோதீ.

384 **க**ட்டிரா மெய்யடியார் காதற் கினியவுனை
விட்டிரே னன்பினினி மேவாய் பரஞ்சோதீ.

385 **க**ண்ணுமெனை யும்முனையுங் காட்டாத வல்லிருளை
யுண்ணுமுனை நானடையா றோதாய் பரஞ்சோதீ.

386 **அ**னைத்துயிரு நின்னடிமை யாயுந் துயர்தல்
வினைத்திற லன்றோவேல் வேந்தே பரஞ்சோதீ.

387 **மா**றாக் கருணைவெள்ள மன்னுன் மனநினையிற்
பாறாக் கலக்கமெல்லாம் பாறும் பரஞ்சோதீ.

388 **ஒ**ல்காக் கருணைவெள்ள வூற்றுன் மனநினையிற்
பல்காற் கவலனைத்தும் பாறும் பரஞ்சோதீ.

389 **ஆ**னாக் கருணைவெள்ள மாமுன் மனநினையி
னூனாக்கை யல்லலெல்லா மோவும் பரஞ்சோதீ.

390 **மா**யாத் தனிக்கருணை மன்னுன் மனநினையின்
வீயாக்கை யாறனைத்தும் வீயும் பரஞ்சோதீ.

391 **சி**ந்தைக் கினிய செவிக்கினிய வன்றோநீ
நுந்தைக் குரைத்தசொற்கண் ணொள்காப் பரஞ்சோதீ.

392 **ஆ**சறுசின் முத்திரையே யப்பொரு ளாகுமெனா
வேசறுநின் பத்த ரிசைப்பார் பரஞ்சோதீ.

393 **அ**ஃதே பெருங்கேடு மான்றபெரும் பேறுமெனாப்
பஃறோ மறுத்தார் பகர்வார் பரஞ்சோதீ.

394 **அ**ம்முடிவே யென்முடிவு மாகவென்று காண்பேன்சொல்
செம்முடிவே தத்தரது தேட்டே பரஞ்சோதீ.

395 **மா**லுறுவல் காட்டா வருத்துகின்ற வல்லிருட்பேய்
காலிறுபு வீழ்நாள் கழறாய் பரஞ்சோதீ.

396 **ம**யலுறுவல் காட்டா வருத்துகன்மப் பேய்தான்
செயலிறுபு வீழ்நா டெரியாய் பரஞ்சோதீ.

397 **ப**ன்மையுரு வாகப் படர்ந்தலைக்கு மாயைப்பேய்
வன்மையிறா வீழ்நாள் வழங்காய் பரஞ்சோதீ.

398 **சே**ல்வளர்கண் ணாருதரஞ் சேராமே யுய்யவொரு
வால்வளர்வ தெந்நாள் வழங்காய் பரஞ்சோதீ.

399 **கோ**ல்வளைகொள் கையார் குழப்பமற வென்கணொரு
தோல்வளர்வ தெந்நாள் சுரேசா பரஞ்சோதீ.

400 **பு**விதழைக்கு நெஞ்சினது போக்கறுத்துய் வானோர்
செவிதழைப்ப தெந்நா டெரியாய் பரஞ்சோதீ.

401 **ப**ண்டழைக்குஞ் செந்துவர்வாய்ப் பாவைமுகம் பாராவோர்
கண்டழைப்ப தெந்நாள் கழறாய் பரஞ்சோதீ.

402 **பு**ல்லறிவெ லாமொழிந்து போயிற்றுப் போயிற்றென்
வல்லறிவு வந்துநிற்க வாராய் பரஞ்சோதீ.

403 **எ**ன்கண்ண தாயமல வேசறுப்பா னொன்றுரைத்தாய்
புன்கண்ணை நன்கறுத்தாள் பொன்னே பரஞ்சோதீ.

404 **வ**ருந்தேல் வருந்தேலென் வாயுறைதான் கொண்டு
வருந்தேவு நின்னையல்லான் மற்றார் பரஞ்சோதீ.

405 **தி**ரிதருமெ னெஞ்சைத் திருத்தியரு டீர்த்தன்
கரிசறுமு னெஞ்சே களிசால் பரஞ்சோதீ.

406 **ம**னையாட்டி மக்களென மால்கொளா வாறிங்
கெனையாட்டு கிற்பவரா ரீசா பரஞ்சோதீ.

407 **அ**ங்காட்டி யாடரிவை யார்நலம்வெஃ காமலெனை
யிங்காட்டு கிற்பவரா ரீசா பரஞ்சோதீ.

408 **நா**யன்ன வெற்குனடி நாட்டமுறச் செய்தவரார்
சேயன்ன தேவாய்த் திகழும் பரஞ்சோதீ.

409 **க**ழுதன்ன வெற்குனடி கண்ணுளந்தந் தார்யா
ரிழுதென்ன மிக்கினிக்கு மின்பே பரஞ்சோதீ.

410 **மு**சுவன்ன வெற்குனடி முன்னுளந்தந் தார்யார்
வசுவன்ன மேனியவிர் மாகா பரஞ்சோதீ.

411 **தெ**வ்வாற் றுயருழந்து தேயெனைநீ நோக்காயே
லெவ்வாற்றா னுய்வே னிறையே பரஞ்சோதீ.

412 **நி**சிதேங்க நிற்குமெனை நீபார்த்தி யாயிற்
சுசிதேங்க நிற்பேன் சுவாமீ பரஞ்சோதீ.

413 **மு**ண்முனைக் கொப்பாய மூர்க்கத்தி னோலாமை
யண்முனைக் கொள்ளேனென் பாயோ பரஞ்சோதீ.

414 **மு**ழுத்தவத் தோர்க்குமதை முன்னார்க்கு மொன்றாம்
விழுத்தெய்வ நீயலையோ வீட பரஞ்சோதீ.

415 **அ**லகிலா வாசுகுடி யானாலு மவ்வா
சுலகெலா மாளுனரு ளோட்டும் பரஞ்சோதீ.

416 **ந**ற்றே வுனையடுத்து நன்றேது நண்ணாமே
வெற்றே கழிவேனோ விண்ணாள் பரஞ்சோதீ.

417 **எ**ன்னே தெலாமுருக்கு மீசவுனக் காளாயுங்
கொன்னே கழிவேனோ கோதில் பரஞ்சோதீ.

418 **பொ**ய்யெலாஞ் செற்றுப் புரவாமல் விட்டிடினென்
றெய்வமே யாதுசெய்வேன் சேயே பரஞ்சோதீ.

419 **வீ**ணவாப் பாவி வெருக்கொள வெய்தருட்கே
வேணவா வுற்றேன் விமலா பரஞ்சோதீ.

420 **ப**வாரி யெனவிளங்கிப் பந்தங்கா தேணுக்
கவாவு மெனைக்கழிக்க லாமோ பரஞ்சோதீ.

421 **எ**ள்ளினு மேதிலரு ளில்லைபோ வென்றெனைநீ
தள்ளினும் போகேனென் சாமீ பரஞ்சோதீ.

422 **ஈ**னம்போ மாறென் னிதயநடு வேகருணை
வானம்போல் வந்து வளையாய் பரஞ்சோதீ.

423 **க**ண்கண்ட தைத்தான் கருத்துக் கருதுமெனா
விண்கண்ட மேலோர் விதிப்பார் பரஞ்சோதீ.

424 **உ**ருவிலி யாகவுன்னை யுள்ளிடத்தி னெஞ்சு
கருதவறி யாதேயென் கண்ணே பரஞ்சோதீ.

425 **யா**தொரு நல்லுருவா யாணரகக் கண்ணினைதல்
கோதறு மார்க்கமன்றோ கோவே பரஞ்சோதீ.

426 **அ**வ்வுருவ நாட்டமன்றி யாடுமன நில்லாதென்
றெவ்வறிவு ளார்தா மியம்பார் பரஞ்சோதீ.

427 **உ**ள்ளடக்க லிற்கிவ் வுபாயமறி யாதாருன்
னொள்ளருளைக் கண்ணுறுவா ரோமா பரஞ்சோதீ.

428 **வா**னம்போ லுள்ளே வரைந்துசிந் தித்தலுமெய்
யானவுரு வப்படர்வே யாகும் பரஞ்சோதீ.

429 **தே**வருவே யென்றிருப்போர் சிந்தையுண்மை காணாமே
மாவலைவே கொள்ளுமெனல் வாய்மை பரஞ்சோதீ.

430 **அ**ருவநிலை காண்பதற்கே யாளுருச்சிந் திப்பார்
பருவமுடை யாரென் பதியே பரஞ்சோதீ.

431 **ம**னத்தினுக் கெட்டாத வத்துவென்று வேதந்
தொனித்தது மிக்கருத்தே தூய பரஞ்சோதீ.

432 **எ**ட்டா தெனுமதுவே யோர்ச்சோகம் பாவனையி
லெட்டா திருப்பதில்லை யென்னும் பரஞ்சோதீ.

433 **ஆ**வதே னெஞ்சிறந்த வத்துவித வாக்கமதைப்
பாவனா யோகிலர்பார்ப் பாரோ பரஞ்சோதீ.

434 **பா**வனையி னெஞ்சுப் படர்ச்சியற்ற காலமந்தப்
பாவனையு மின்றுறலுன் பாதம் பரஞ்சோதீ.

435 **அ**ன்னிய பாவனைக ளன்னியஞ்செய் யும்மதனாற்
றன்னிலை யிற்செயனற் சார்வே பரஞ்சோதீ.

436 **இ**த்தகரோ பாசனையை யேதிலார் செய்யார்நல்
வித்தகரே செய்வார் விடாரோம் பரஞ்சோதீ.

437 **இ**ம்மார்க்கந் தானே யிமையோ ரிருடிகட்குஞ்
சன்மார்க்க மாயிற்றென் றந்தாய் பரஞ்சோதீ.

438 **மு**த்தி யனுக்கிரக மூர்த்தியை நீக்கலுமுன்
மத்தர் மதக்கொள்கை யாமே பரஞ்சோதீ.

439 **பெ**ந்தமுத்தி யுண்டெனவே பேசுமறைக் கேபகைபே
செந்தயுத்தி நூலையுங்கொள் ளேனே பரஞ்சோதீ.

440 **மு**த்தியில்லை யென்றே மொழிமதத்தை நம்புகின்ற
புத்தியுமொர் புத்திகொல்லோ பொன்றாப் பரஞ்சோதீ.

441 **மு**த்திநெறி போலே மொழிந்ததுவின் றென்வழியின்
முத்தியடைந் தாருமுண்டோ மோசம் பரஞ்சோதீ.

442 **பெ**ந்தமுத்தி யில்லுனக்குப் பெந்தமுத்தி யோத்துரையா
பெந்தமுத்தி சீவனுக்கே பேசும் பரஞ்சோதீ.

443 **மு**த்திநித்த மென்றம் முதுநூன் முழங்குதலி
னத்தையடை வத்துநித்த மாமே பரஞ்சோதீ.

444 **அ**றிவாமெய் வத்துமற்றொன் றாதலற்ப மாதல்
செறிவாமுக் காலுமில்லை தேவே பரஞ்சோதீ.

445 **ப**ன்மணியி லோர்நூலே பற்றிநிற்கு மாறரிய
நின்மகிமை மூர்த்தமெங்கு நிற்பாய் பரஞ்சோதீ.

446 **க**ருவமிச மாமாறு காந்தியோங் கார
வுருவமிச மாமென்ற லொவ்வும் பரஞ்சோதீ.

447 **ஏ**சணா ஞானநனி யெய்தளவு மோர்மதத்தி
னேசனாய் நிற்றனல்ல நேர்மை பரஞ்சோதீ.

448 **ஏ**ர்க்கா லிலிநடவா னவ்வா றியாதொருநன்
மார்க்கங் கொளான்மதியு மாமே பரஞ்சோதீ.

449 **போ**த்துமர மாகளவும் புல்வேலி வேண்டுதல்போ
லாத்தனருள் காறுமத மாமே பரஞ்சோதீ.

450 **இ**ழுக்கிறெய்வ நிச்சயமு மெற்றியுண்ட லாதி
வழுக்களைவு முள்ளதுநன் மார்க்கம் பரஞ்சோதீ.

451 **அ**த்தெய்வ மாசிரிய னாய்நின் றருளுமுத்தி
வத்துநிலை யென்பதுநன் மார்க்கம் பரஞ்சோதீ.

452 **இ**னத்தையொழித் தெஞ்ஞான்று மேகாந்த மாகி
மனத்தையடக் கென்பதுநன் மார்க்கம் பரஞ்சோதீ.

453 **கு**திமனத்தைக் கொல்லாமற் கொல்லுவது மேலா
மதியெனச்சொல் கின்றதுநன் மார்க்கம் பரஞ்சோதீ.

454 **எ**த்திசையுஞ் செல்லா திழுத்தமன தைக்கமல
மத்தியில்லை யென்பதுநன் மார்க்கம் பரஞ்சோதீ.

455 **அ**க்கமலத் தார்தேவா வாள்குருவை யுள்கியுறன்
மக்கினமி லின்பெனனன் மார்க்கம் பரஞ்சோதீ.

456 **உ**ன்னோர் தகரால யத்தைநுவ லோர்நூலிற்
சொன்னேனிவ் வுண்மைநன்கு தூவார் பரஞ்சோதீ.

457 **ந**ட்டிடத்தின் மிக்குநிற்போர் நல்லங்குட் டத்தளவாங்
கட்டொளியைக் காண்பாரென் கண்ணே பரஞ்சோதீ.

458 **அ**வ்வொளிக் கண்ணழுந்தி யார்ப்பின் றளாதலவர்
செவ்வொளிச் செல்வமன்றோ சேயா பரஞ்சோதீ.

459 **நீ**டத்து வஞ்சொன் னிகமமங் குட்டவொளி
* கூடத்த னென்றே குயிலும் பரஞ்சோதீ.

460 **அ**ந்தவொளி தான்மலத்தி னார்ப்புண் டிருத்தலினாற்
பந்தவுயி ராமே பரமா பரஞ்சோதீ.

461 **அ**வ்வுயிரி னுக்குயிரா யார்ப்பி லகண்டமதா
யெவ்வுயிரு மாணீ யெனைக்கொள் பரஞ்சோதீ.

462 **ஆ**ன்மாவி னீயிருந்து மாளுருவெண் ணாத்தாழ்வி
னூன்மா றுணர்ச்சியுற்ற தில்லை பரஞ்சோதீ.

463 **எ**த்தனை சாத்திரத்தை யெத்தனைநா ளோர்ந்தானு
மத்துவிதங் காண்ட லரிது பரஞ்சோதீ.

464 **உ**ன்றன் கடைக்கணிப்பா மொன்றுள்ள தாமாயி
னின்றன்மை கோட லெளிது பரஞ்சோதீ.

465 **பே**றியம்பு சாத்திரமும் பீடர்சொற் கேட்டலுமுள்
வீறடங்கி நிற்குமட்டும் வேண்டும் பரஞ்சோதீ.

466 **சா**ர்ந்தபக்க மாமுயிர்தான் சன்மார்க்கர் கேள்விவிட்டா
லீர்ந்திழுக்கும் வெம்மோகத் தேகும் பரஞ்சோதீ.

**459.** * கூடஸ்தன் = தலைவன், முன்னோன், ஜீவசாட்சியென்ப.

467 **ச**ன்மார்க்கம் போன்றிழிவு சாற்றுநூற் கேள்விகளுந்
துன்மார்க்க மாகுமன்றோ தோமில் பரஞ்சோதீ.

468 **கோ**துக்கு ணின்றே குடிகெடுப்பா ரோர்ஞான
மேதுக்குப் பேசுகின்றா ரெந்தாய் பரஞ்சோதீ.

469 **மு**ன்னறத்தா னின்னன்பு முற்றப் பிறந்தார்க்குப்
புன்னுவற்சி மார்க்கம் பொருந்தா பரஞ்சோதீ.

470 **த**லத்திருக்க வாசையுற்றோர் சண்டாளர் பெய்த
மலத்தினையு முண்பாரே மாசில் பரஞ்சோதீ.

471 **பி**ண்டத் தடைந்ததையே பேரண்டத் தும்மடைவார்
தண்டத் தவத்தாருந் தந்தாய் பரஞ்சோதீ.

472 **ஆ**ன்மாவைத் தானடைந்தோ ரம்முதல்வ னானபர
மான்மா வுனைத்தா னடைவார் பரஞ்சோதீ.

473 **பூ**தத்தான் யாத்தவிந்தப் பொள்ளற் கடத்தைநம்ப
லேதத்தார் பக்கமன்றோ வெம்மான் பரஞ்சோதீ.

474 **வா**ழுயிருந் தேவுமன்றி மற்றையவெல் லாஞ்சடமென்
றூழுறுதி யுள்ளாரே யோர்வார் பரஞ்சோதீ.

475 **மெ**ய்ஞ்ஞான மேவாத வேட்கையெலா மெஞ்ஞான்று
மஞ்ஞான மென்னா வறிந்தேன் பரஞ்சோதீ.

476 **வா**லாரு மத்துவித வாழ்வைப் பெறுமாறு
மாலாயு ளேனினிக்கொள் வந்து பரஞ்சோதீ.

477 **ச**ங்கமத்தைத் தாவரத்தைத் தாங்குந் திருவருளா
மங்களத்தை நச்செனைக்கொள் வந்து பரஞ்சோதீ.

478 **பூ**ச்செய்கை யேமகிழ்செய் பூரணதே வென்றரில்செய்
தீச்செய்கை யாளரைநான் சேரேன் பரஞ்சோதீ.

479 **ஓ**ங்கிழவு மில்லை யுதிப்புமில்லை யென்றிடிக்குந்
தீங்கிளவி மேகமுன்னைச் சேர்வேன் பரஞ்சோதீ.

480 **பொ**ருதிரை வாரிதிசூழ் பூவினின்சீ ருள்ளார்
வெருவினுழல் வாரோ விளம்பாய் பரஞ்சோதீ.

481 **தி**ருந்திழையார் பூசலெலாஞ் சேராமே செய்தா
யருந்திருவா முன்றா ளளியாய் பரஞ்சோதீ.

482 **இ**ன்புருவே யாமொருநீ யேழைமையேன் மீதிதுநா
ளன்புளையே லெற்கிணையா ரையே பரஞ்சோதீ.

483 **பா**ண்வண்டர் சேர்காவாழ் பண்ணவர்க ளேத்துநின்றாட்
சேண்மஞ்சு தாராய் சிவமே பரஞ்சோதீ.

484 **அ**முதமுதிங் கேமாழ்கா தந்தமிலொள் ளின்பா
யொழுகொளியைக் காட்டியரு ளோமா பரஞ்சோதீ.

485 **பொ**ருமாரன் றன்னை வெல்லொண் புந்தியர்கோ நின்சீர்
வருமாறு புல்லியருண் மஞ்சார் பரஞ்சோதீ.

486 **தி**ருத்தகு சீரறிவு சேந்தனருட் கண்ணென்
றுருத்திர ரோதுரையு முண்டே பரஞ்சோதீ.

487 **ஆ**சறு பெய்வளையா ராண்மக்க ளுக்குமரு
ளீசுர னீயலையோ வேகா பரஞ்சோதீ.

488 **தோ**முதா லென்றியமன் றூதரெனைப் பற்றவரிற்
காமுதால் காமுதா லென்பேன் பரஞ்சோதீ.

489 **பா**சிவா பாசிவா வென்றியமன் பற்றவரிற்
காசிவா காசிவா வென்பேன் பரஞ்சோதீ.

490 **ஏ**சன்வா வேசன்வா வென்றியமன் பற்றவரிற்
றாசனான் றாசனா னென்பேன் பரஞ்சோதீ.

491 **நா**சனுக்கி ரத்தொழிலை நாசஞ்செய் தாளுதற்கு
நீசமர்த்த னல்லைகொலோ ஞேயப் பரஞ்சோதீ.

492 **எ**ன்றாச னைத்தீண்ட வேமநீ வல்லனல்லை
யென்றே சொலாதிருப்பை கொல்லோ பரஞ்சோதீ.

493 **மா**ண்பார்க்கு நல்லாய்நின் வண்டா ளுறாதுதுன்பே
காண்பேற்கு முண்டோ களிதான் பரஞ்சோதீ.

494 **கூ**டிமகிழ் நீர்மை கொளாவிடினும் நின்சீரே
பாடிமகிழ் கின்றேன் பதியே பரஞ்சோதீ.

495 **ப**ருதிமுன்கண் ணேபோற் படியாவிட் டானுங்
கருதிமகிழ் கின்றேன் களிசால் பரஞ்சோதீ.

496 **கே**டற்ற தெள்ளமுதங் கிட்டிற்றுக் கிட்டிற்றென்
றாடத்த னாய்வந் தருளாய் பரஞ்சோதீ.

497 **த**ரணியொடு வானுமெச்சத் தண்ணளியி னென்னுண்
முரணியதுன் பெல்லா முருக்காய் பரஞ்சோதீ.

498 **வ**ரைவிடுசொல் லிற்கடங்கா வானா யளாவ
விரைவொடென் முன்வருதி வேதா பரஞ்சோதீ.

499 **யா**தனை யெற்றுக் கியான்கொணர்வ லின்பமெனாப்
போதனை செய்தாள்செம் பொன்னே பரஞ்சோதீ.

500 **அ**ல்லுமின்றி யெல்லுமின்றி யந்தரமா நிற்குநிலை
வல்லவர்கண் மாட்டே மதியீ பரஞ்சோதீ.

501 **பூ**வயி னில்லார் புரைதணந்த விண்ணுறுவா
ராவயி னெற்குமளித் தாளோம் பரஞ்சோதீ.

502 **பா**சநூல் பாரேன் பசுநூலுங் கொள்ளேனல்
லீசனூல் பார்ப்பே னிறைவா பரஞ்சோதீ.

503 **கா**மக் கனல்கனற்றக் கட்டுண் டறிவழிந்து
சாமக்கள் சார்பினில்லேன் றாயே பரஞ்சோதீ.

504 **யா**து புகழ்மைத்தோ யாது பெருமைத்தோ
கோது துமிக்கவதைக் கொள்வேன் பரஞ்சோதீ.

505 **இ**ருபாற்பட் டாலுரிமைக் கீனமுண்டா மென்றே
யொருபாற்பட் டேனே யுணர்வே பரஞ்சோதீ.

506 **நீ**வாழ்க நீவாழ்க நித்தலுமென் றோதுனுரை
யேவாழ வந்தா ளினியோம் பரஞ்சோதீ.

507 **து**ன்புகூர்ந் திங்கே சுலாங்குண மோங்காம
லன்புகூர்ந் தென்னை நீ யாள்க பரஞ்சோதீ.

508 **நு**ட்டார்க்கும் விட்டார்க்கு ஞாயவழி யேபலனீ
பட்டாங்குத் தேநீயென் பாடாய் பரஞ்சோதீ.

509 **நா**க்குழற மெய்சிலிர்க்க நல்விழிக ளூற்றெடுக்க
வாக்குமரு ணோக்க மளித்தாள் பரஞ்சோதீ.

510 **உ**ள்ளக் களிகூர்ந் துடன்மறந்து நானுனருள்
வெள்ளக் கடலாழ்வான் மேவாய் பரஞ்சோதீ.

511 **பா**ர்த்த விடனெல்லாம் பரவெளியாய் நிற்குநிலை
சேர்த்தருடி யென்னெளிமை தீரப் பரஞ்சோதீ.

512 **எ**துவோ வெனைநீங்கா தென்றுமுள்ள தெய்வ
மதுவே குகனென் றறிந்தேன் பரஞ்சோதீ.

513 **எ**வனோவென் னோடே யிருக்குங் குகதே
வவனேகொள் வானென் றறிந்தேன் பரஞ்சோதீ.

514 **எ**துசுகமீ யன்பா யிருந்துளதோ நட்டார்க்
கதுகுகனா நீயென் றறிந்தேன் பரஞ்சோதீ.

515 **எ**ப்பொரு ளிம்மண்விண் ணெங்கு நிறைந்துளதோ
வப்பொரு ணீயென் றறிந்தேன் பரஞ்சோதீ.

516 **எ**வ்வத்து முற்றுமளித் தேந்தி யொடுக்குமரோ
வவ்வத்து நீயென் றறிந்தேன் பரஞ்சோதீ.

517 **எ**ப்பிரம மெஞ்ஞான்று மேசிலறி வாயுளதோ
வப்பிரம நீயென் றறிந்தேன் பரஞ்சோதீ.

518 **தீ**தொன் றிலாவுன்மேற் றீதேதுஞ் சொன்மதத்தைக்
கோதென் றொழிப்பனன்றிக் கொள்ளேன் பரஞ்சோதீ.

519 **வ**த்துநிச்ச யந்தான் வழுவாயி னெய்தியவுண்
முத்தியுமவ் வாறே முருகா பரஞ்சோதீ.

520 **தொ**க்குடைய வாவிதொறுஞ் சோதீநீ யுள்ளதனா
லெக்குடிவந் தாருமுத்தி யேய்வார் பரஞ்சோதீ.

521 **து**ணிதார கம்மெமக்கே சொந்தமெனு முந்நூ
லணிபார்ப்பார் சொன்னீதி யாமோ பரஞ்சோதீ.

522 **ப**ல்வருணத் தாரும் பரயோக தாரகத்தின்
செல்வமடைந் தாரென்றார் செப்பார் பரஞ்சோதீ.

523 **வி**ப்பிரரல் லாதபல்லோர் மெய்த்தா ரகயோகஞ்
செப்பமொடு செய்துசொற்றார் பன்னூல் பரஞ்சோதீ.

524 **சி**ற்பிரண வத்தைச் செபிப்பவர் சுத்தரெனா
நற்பனுவல் யாவு நவிலும் பரஞ்சோதீ.

525 **தொ**டர்கருமத் தாரெவருஞ் சூத்திரரே யென்னா
விடர்தபுக்கு நூல்க ளியம்பும் பரஞ்சோதீ.

526 **இ**யங்குபய கன்மமறா வெவ்வருமெய் விட்டே
மயங்குப மன்னோசெம் மாப்பே பரஞ்சோதீ.

527 **சா**திபெரி தென்றுநினை தன்மையர்க்குஞ் சாதியில்லாச்
சோதியறி வுண்டாமோ தூய பரஞ்சோதீ.

528 **சா**தியொழுக் கந்தான் சயனிப்போன் கைப்பொருள்போ
லேதமற நீங்க லியைபே பரஞ்சோதீ.

529 **பொ**ல்லா மலக்கிழங்கைப் புய்க்குமருண் மேயவரை
நல்லார் மதித்தே நடப்பார் பரஞ்சோதீ.

530 **மா**யிருண் ஞாலமுறா மாதவரை யோம்பாதார்
தாயிருள் காண்ட றவிரார் பரஞ்சோதீ.

531 **தா**ளாண்மை மெய்யடியார்த் தாழ்த னலம்பேணல்
வேளாண்மை யுள்ளார்தம் மேல பரஞ்சோதீ.

532 **வ**லிசான்ற தேவருநின் மாணவரை யெள்ளார்
கலிசான்ற குவ்வர் கணியார் பரஞ்சோதீ.

533 **மு**டிதாழ்த் தடிவணங்கி முன்கெடுத்து நிற்கு
மடியார்க்குத் தெவ்வ ரழிவார் பரஞ்சோதீ.

534 **கெ**ழுதகைமை நேடிநிற்குங் கேளனெற்குன் மாட்சி
விழுமிதி னீவிளக்க வேண்டும் பரஞ்சோதீ.

535 **அ**ழத்தகு மற்பேற்குன் னாசிலடி யென்னும்
விழுத்தகு சீரெந்நாண் மேவும் பரஞ்சோதீ.

536 **மே**தி கரும்புழக்கு மேனாட்டை யாளினுமோர்
கேதி லுனைமறவார் கேளர் பரஞ்சோதீ.

537 **ஆ**துல ராயிடினு மார்பிணிய ராயிடினு
நாத னுனையிழக்கார் நாரர் பரஞ்சோதீ.

538 **ந**லக்கேது நின்கருணை நாடகமே யாமென்
றிலக்கேதி லார்யா ரியம்பார் பரஞ்சோதீ.

539 **எ**ன்வாக்குத் தேவுனைத்தா னெஞ்ஞான்று மேவழா
நன்மாக்கு மூலமென்னு நன்னூல் பரஞ்சோதீ.

540 **கொ**ன்பிறப்புற் றாரன்பு கூர்ந்து தவங்கிடக்கு
மின்பொழித்துக் கோட லெவனே பரஞ்சோதீ.

541 **ந**ன்றியறிந் துன்னடியே நாணாளு நாடிநிற்ற
லின்றியொரு செல்வ மெவனே பரஞ்சோதீ.

542 **அ**ங்குட்ட மிற்றென் றறிந்தவ் வளவினிற்கு
மங்குட்ட மா*னருடந் தாளாய் பரஞ்சோதீ.

543 **நீ**ட்சிகுறைந் தங்குட்ட நிற்குநின தங்கிசத்தார்
மாட்சிமை யெற்கும் வருமோ பரஞ்சோதீ.

544 **நீ**ண்மனமு மூச்சு நிரப்புற்றங் குட்டமுற
லேண்மகிமை யொள்ளருளர்க் கேயும் பரஞ்சோதீ.

545 **அ**ங்குட்ட முங்கரைத லைக்கிய முத்தியெனா
வெங்கட் டொழிந்தார் விதிப்பார் பரஞ்சோதீ.

546 **அ**ங்குட்ட மேமுக்கா லங்குலமு மாமிதலை
யுங்கட்டந் தீரெவர்க்கு மொப்பாம் பரஞ்சோதீ.

547 **நீ**ட்சிகுன்றக் குன்ற நெடியநல னோங்குமென்றுட்
காட்சியுடை யார்புகல்வர் கண்ணே பரஞ்சோதீ.

548 **நீ**ளமே தீவினையு நீளமே நல்வினையு
நீளமே யெவ்வுலகு ஞேயப் பரஞ்சோதீ.

**542.** * அங்குட்டமான் = அகஸ்திய மாமுனிவர்

549 **தே**மனுவுந் தேவுருவுஞ் செவ்வன் செபித்துநினைந்
தேமருநர்க் கக்குன்ற லெய்தும் பரஞ்சோதீ.

550 **நி**த்திரையி னெஞ்சிறந்து நீண்மூச் செழும்புதலி
னத்தகுநற் குன்றலில்லை யன்றோ பரஞ்சோதீ.

551 **நீ**ர்க்குணெடு மூச்சுநின்று நீணெஞ் சுலாவுதலிற்
சீர்த்தவக் குன்றலில்லை சேயே பரஞ்சோதீ.

552 **தா**க்குண்ணு மூர்ச்சை தனிலவ் விரண்டுமற்று
மீக்கொணிலை மேவா மயக்கே பரஞ்சோதீ.

553 **கு**ன்றாத குன்றலந்தக் கோதில் சமாதியென்று
நன்றா யுணர்ந்தோர் நவில்வார் பரஞ்சோதீ.

554 **வீ**ங்கார்வ ரித்தை விழியா விழிப்பென்றுந்
தூங்காத தூக்கமென்றுஞ் சொல்வார் பரஞ்சோதீ.

555 **மு**ன்னிலையில் லாமே முழுப்பிரம நாமெனறா
னன்னிலையென் பாருமுண்டிந் நாட்டிற் பரஞ்சோதீ.

556 **அ**க்கொள்கை மெய்ந்நிலைய தாயினதற் கும்மேலா
மெக்கணலு மின்மரத்தி யற்கை பரஞ்சோதீ.

557 **கா**ட்சிதனின் முன்னிலைதாங் கண்டமா மாங்கழுந்தன்
மாட்சியெனத் தேர்ந்தணைவர் வல்லார் பரஞ்சோதீ.

558 **சு**வானுபவ வுண்மையிஃதுன் றூவருளுள் ளார்க்கே
நவானுபவ மாகவந்து நண்ணும் பரஞ்சோதீ.

559 **தோ**டுபட்ட காதுடைய தோகையர்செய் மாலொழித்துப்
பாடுபட்ட வர்க்கே பலனாம் பரஞ்சோதீ.

560 **ஓ**ட்டேது மின்ஞானி யொள்ளுடம்பை யெவ்வாறா
விட்டாலு முத்தியென்னும் வேதம் பரஞ்சோதீ.

561 **ந**ல்விழைவோ னாக்கைவிட்ட ஞான்றுசிவ மாவனெனாச்
சொல்சிவநூல் போன்மறையுஞ் சொல்லும் பரஞ்சோதீ.

562 **வெ**ம்மைசகித் தோர்மெய் விதிப்படிசெய் யாவிடினும்
திண்மை*யவர்க் கில்லையெனுந் தெண்ணூல் பரஞ்சோதீ.

563 **ஞா**னத்தா னீறாய ஞானியுடம் பைக்கனற்றே
லீனத்தார்க் காமதெனு மோர்நூல் பரஞ்சோதீ.

564 **சு**டுகாடல் லாதசெழுஞ் சோலைசெறி பாங்க
ரிடுமாறு கூறுமந்த வோர்நூல் பரஞ்சோதீ.

565 **அ**ந்நில நீர்ப்பிடியு மாபாச முப்புமில்லா
நன்னில மாயிருக்கி னன்றே பரஞ்சோதீ.

566 **மெ**ய்த்தசிவ லிங்கமென மின்னுருவை யாண்டுகல்லி
வைத்தகுழிக் கண்ணமர்த்தன் மாண்பே பரஞ்சோதீ.

567 **தா**பித்த மூர்த்தந் தனைச்சிவம தாகவங்ஙன்
பாவித் தெலாஞ்செய்தல் பாங்கே பரஞ்சோதீ.

568 **செ**ய்தவர்க்கு நற்பலனாந் தேயவள முங்குழுமு
முய்தவங்க ளோங்குமந்த வூரிற் பரஞ்சோதீ.

569 **மா**ய்வறுத்த வவ்வுருவின் மண்டைபழு தேபடத்தேங்
காயடித்தல் செய்யார் கருத்தர் பரஞ்சோதீ.

570 **சொ**ற்றமுறை விட்டுருவைச் சுட்டா னகரழியு
மற்றழியி லோரழியு மம்மான் பரஞ்சோதீ.

571 **பே**தகமி லானுருவைப் பேணச்செல் வோர்களுக்குச்
சூதகமு மில்லையெனுந் தொன்னூல் பரஞ்சோதீ.

572 **கா**யம் விடுநாடு காசியெனிற் கங்கைதனிற்
றோயவிடல் வேண்டுமென்பர் தூயோர் பரஞ்சோதீ.

573 **த**னத்திற் படாதார் தனத்தைநம் பாரிந்
தனத்திற் படாதுயர்வர் சாமீ பரஞ்சோதீ.

574 **மா**தவற்கும் பொன்னனுக்கும் வாசவற்கு மாலோற்கு
மாதவற்குந் தேநீயம் மானே பரஞ்சோதீ

**562.** * தீமையே "திண்மை" எனவாயிற்று. இவ்வாறாதலை "நன்மையுஞ் செல்வமு நாளு நல்குமே – திண்மையும் பாவமுஞ் சிதைந்து தேயுமே" எனும் இராமாயணச் செய்யுள்கொண் டறிக.

575 **ந**ச்செவ்வேள் கார்வேளே நல்லமுத மாவதெவ்வே
ணச்செவ்வே ளென்றறகு ஞாயம் பரஞ்சோதீ.

576 **பூ**க்கு மருங்காவுய் பொன்னடியர் மேயவொரு
பூக்கு முயர்ந்ததெவன் பொற்பா பரஞ்சோதீ.

577 **பா**க்கு மிலையுமுறாப் பல்ல ருனைப்பாடு
பாக்கு முயர்ந்ததெவன் பண்டா பரஞ்சோதீ.

578 **பா**க்குரிய தேநீயென் பண்பெழா மேபடர்ந்துண்
பாக்குரிய வன்பிற் படராய் பரஞ்சோதீ.

579 **மா**சுவையம் மென்றொருவி மன்னுபே ரின்பமெனு
மாசுவையம் மென்றுறுவேன் மஞ்சா பரஞ்சோதீ.

580 **வ**ன்பா லணைந்து வருந்தினுநா ணஃகாத
வன்பா லணைத்தருடி மஞ்சா பரஞ்சோதீ.

581 **வ**ருங்கருப்பைப் பேழை கறித்தருள வல்ல
வருங்கருப்பைப் பாழியருண் மஞ்சா பரஞ்சோதீ.

582 **மா**கந்தா காவெனன்பர் மட்டிலா மேமருவு
மாகந்தா நானுமுய்வான் மஞ்சா பரஞ்சோதீ.

583 **வ**ஞ்சத்தா னாகவுலாய் மாளா தரிற்குமிக
வஞ்சத்தா னல்லருள்செய் மஞ்சா பரஞ்சோதீ.

584 **வா**னந்தா வத்துவித வல்லா ரவாம்பெரிய
வானந்தா வென்மிடிமை மாறப் பரஞ்சோதீ.

585 **கோ**ணைக்குஞ் சின்மையிற்குங் கூட்டு மிருவினையாங்
கோணைக்குஞ் சித்தணையக் கோடி பரஞ்சோதீ.

586 **வ**ள்ளிக்கு நேர வருங்கருணை காட்டியருள்
வள்ளிக்கு நாதாவென் மன்னே பரஞ்சோதீ.

587 **சா**மிக்கார் தொண்டிழையாச் சத்துணர்ந்து சாகாது
சாமிக்கார் யாணரெற்குந் தாராய் பரஞ்சோதீ.

588 **வி**டகண்ட னெற்றிவந்து வேறாங் கிநிலா
விடகண்ட னெந்தையன்றோ விண்ணா பரஞ்சோதீ.

589 **வே**றாங்கி யாளரசை வேண்டா ரியல்பினுக்கு
வேறாங்கி யாதிதந்து மேவாய் பரஞ்சோதீ.

590 **கா**யமண்ணி லேவீழ்முன் கட்டறிவ தாமோரா
காயமண்ணி லேசறுமே காளாய் பரஞ்சோதீ.

591 **தீ**ங்கரும்பு வாழ்வுவக்குஞ் சித்தமினித் தேங்காது
தீங்கரும்பு வாழ்வளித்தாள் சேயே பரஞ்சோதீ.

592 **ச**த்தான சாமியுனைத் தானடைந்துய் பாக்கினிய
சத்தான யாவுநந்தத் தாடா பரஞ்சோதீ.

593 **சா**ரமற்ற புல்லறிவு தானே நினைத்தொடர்வி
சாரமற்ற சீவரகஞ் சாரும் பரஞ்சோதீ.

594 **பு**ல்லறிவை வீட்டியருட் பூரணவிண் ணாயநினைப்
புல்லறிவை யீகுதியென் பொன்னே பரஞ்சோதீ.

595 **பொ**ன்னம் பலமெனச்சூழ் புந்தியறி யாதவொரு
பொன்னம் பலந்தாராய் பொன்னே பரஞ்சோதீ.

596 **பொ**ன்னம் பலந்தகைசால் புந்தியினு முண்டோசொல்
பொன்னம் பலந்தயங்கும் பொன்னே பரஞ்சோதீ.

597 **ப**லகை யுடையார்க்கும் பாதலர்க்குஞ் சங்கப்
பலகை யுடையார்க்கும் பதிநீ பரஞ்சோதீ.

598 **க**ண்ணிலா தார்க்குள்ளக் கண்ணுமறப் புள்ளுவத்தார்
கண்ணிலா வண்ணலுநீ கந்தா பரஞ்சோதீ.

599 **சோ**தித்தா ளாண்மகனார் தொண்டனா மென்மலங்கள்
சோதித்தா ணன்கடியர் தோன்றால் பரஞ்சோதீ.

600 **ம**ருவாருந் தண்கடப்ப மாலையன்றாட் கீழ
மருவாருந் தோன்றுவரோ மண்ணிற் பரஞ்சோதீ.

601 **ம**ருவாரு மோதிவள்ளி மன்னவனா ரன்பின்
மருவாரு மோதியிப்பூ வாரார் பரஞ்சோதீ.

602 **மா**லையா னேறிதன்னை மான்மகனை யாளுமெட்டு
மாலையா னேபதியம் மானீ பரஞ்சோதீ.

603 **கா**க்கை யருங்கருணைக் கண்ணேயஃ தொன்றிடினா
காக்கை யருங்கதிகா ணாரோ பரஞ்சோதீ.

604 **அ**ஞ்சக் கரத்தானு மந்தணனுங் காண்பரிய
வஞ்சக் கரத்தான்மெச் சன்பீ பரஞ்சோதீ.

605 **இ**றுமாப்பி லாதுகலு ழேழா யினிச்சூ
ரிறுமாப்பி லென்றருளாய் கொல்லோ பரஞ்சோதீ.

606 **எ**ன்பணி யீசனெனு மியவு ளுங்களிக்க
வென்பணி கொண்டா ளிணையில் பரஞ்சோதீ.

607 **இ**னியசத்தை நானடையி னிவ்வுலகு மெள்ளு
மினியசத்தை யேயளித்தா ளெந்தாய் பரஞ்சோதீ.

608 **அ**னுபூதி பெற்றினிய வாறுபுகல் கந்த
னனுபூதி சொற்றா னருளீ பரஞ்சோதீ.

பரஞ்சோதிக் கண்ணி முற்றிற்று.

---

மூன்றாவது மண்டலத்துள் முதற்பகுதி

காசியாத்திரை ஸம்பூரணம்.

---

குமரகுருபரன் றிருவடிவாழ்க.

---

## குறிப்புகள்

உ

சிவமயம்.

ஓம் குஹப்ரஹ்மணேநம:

அத்தியாச்சிரம சுத்தாத்துவைத

வைதிக சைவசித்தாந்த ஞானபானு

**குமாரசுவாமி யென்னும்**


**பாம்பன் ஸ்ரீமத் - குமரகுருதாச சுவாமிகள்**

அருளிச்செய்த

# பரிபூரணானந்த போதம்.

**மூன்றாவது மண்டலம்**

இரண்டாவது பகுதி



சற்சீடன். **பரிபூரணானந்தபோதோபதேசம்.** சதாசாரியப்பெருந்தகை.

# பரிபூரணானந்தபோதச்
# செய்யுள் முதற் குறிப்பகராதி.


| பாட்டு | பக்கம் |
|---|---|
| **அ** | |
| அக்கநோக் | 121 |
| அக்கினியாத் | 83 |
| அங்கண்மா | 92 |
| அங்கியை | 81 |
| அசனக்குழிசி | 123 |
| அச்சமய | 120 |
| அச்சூர | 117 |
| அஞ்சு | 86 |
| அட்டாவ | 105 |
| அணிமாதி | 108 |
| அதனா | 100 |
| அத்திறத் | 118 |
| அத்தீ | 99 |
| அந்தநுட் | 87 |
| அந்தமா | 120 |
| அந்தவி | 115 |
| அப்பொருளை | 83 |
| அப்போதந் | 801 |
| அமலம | 114 |
| அயர்துரி | 94 |
| அயலார் | 119 |
| அரியவிவ் | 109 |
| அருவவுண் | 88 |
| அருவமெனு | 84 |
| அருளுண் | 118 |
| அலல்கடி | 116 |
| அவித்தியா | 102 |
| அவ்வாயு | 120 |
| அறிவித் | 100 |
| அறிவுநிமிர் | 85 |
| அற்பமா | 121 |
| அனக | 95 |
| அன்னவ | 113 |
| **ஆ** | |
| ஆக்கை | 90 |
| ஆணவ | |
| ஆதரான | 96 |
| ஆதலா | 92 |
| ஆதியந்த | 87 |
| ஆத்துமன் | 94 |
| ஆத்மாக்கள் | 104 |
| ஆரியன் | 123 |
| ஆற்றலாரவ் | 91 |
| ஆன்மாவுக் | 84 |
| ஆன்றவாரிய | 91 |
| **இ** | |
| இக்கெனு | 80 |
| இச்சனனம் | 109 |
| இச்சைக் | 103 |
| இதனா | 99 |
| இதுபுரைய | 117 |
| இந்தச்சீவன் | 103 |
| இந்தஞாய | 103 |
| இந்தவாற | 89 |
| இந்தவாறி | 90 |
| இந்தவு | 114 |
| இந்தவைந்து | 91 |
| இந்நூலுக் | 81 |
| இப்பெரிய | 82 |
| இம்மலஞ் | 93 |
| இம்மூன்று | 100 |
| இம்முறை | 114 |
| இம்மொழி | 122 |
| இல்லறத்து | 105 |
| இவ்வகந்தை | 117 |
| இவ்வாறு | 97 |
| இவ்விதமி | 112 |
| இறப்பொடு | 113 |
| இனையவா | 120 |
| இன்றுளர் | 110 |
| இன்னண | 108 |
| இன்னவாறு | 98 |
| **ஈ** | |
| ஈதனைய | 122 |
| ஈயுஞ்செய | 118 |
| ஈன்றாரை | 106 |
| **உ** | |
| உடம்புள் | 98 |
| உட்கருவி | 82 |
| உட்டுறவு | 105 |
| உணர்வி | 121 |
| உயிரில் | 96 |
| உயிர்களைக் | 91 |
| உருவமனத் | 99 |
| உலப்பி | 98 |
| **ஊ** | |
| ஊகமோது | 89 |
| ஊனுடை | 112 |
| **எ** | |
| எண்ணிலாத | 91 |
| எந்தாயிது | 99 |
| எவ்வறங் | 112 |
| எனதெனக் | 90 |
| என்றான் | 99 |
| என்றுகுரு | 104 |
| என்றுசொற் | 87 |
| என்றோதுதி | 118 |
| **ஏ** | |
| ஏசறு | 113 |
| ஏசுடைப் | 90 |
| ஏர்க்கரம் | 105 |
| ஏறும்வெறி | 119 |
| **ஐ** | |
| ஐந்துகுறிப் | 80 |
| ஐயவென் | 86 |
| **ஒ** | |
| ஒப்பில் | 94 |
| ஒப்புறு | 115 |
| ஒருதலத்திற் | 83 |
| ஒன்றிரண் | 79 |
| ஒன்றென்னி | 101 |

| பாட்டு | பக்கம் |
|---|---|
| **ஓ** | |
| ஓத்துரைத்த | 91 |
| ஓருஞான | 97 |
| **க** | |
| கட்டுரை | 113 |
| கட்டையி | 86 |
| கட்டையுள் | 96 |
| கண்டிதக் | 94 |
| கண்ணிமையா | 108 |
| கண்ணைப் | 121 |
| கயிறுதனி | 84 |
| கரவொண் | 118 |
| கரிசுள்ள | 108 |
| கருத்திற் | 98 |
| கரும்பினைத் | 110 |
| கருவிகளை | 108 |
| கல்விபொன் | 88 |
| கன்மமுள் | 98 |
| **கா** | |
| காட்டுமவ் | 120 |
| காதுமுத | 119 |
| காப்பினைக் | 90 |
| காமம் | 79 |
| காமியமி | 122 |
| **கி** | |
| கிரியைக்கு | 801 |
| **கு** | |
| கும்பகத்தி | 801 |
| **கே** | |
| கேவலமிதுவே | 93 |
| **கொ** | |
| கொள்ளிகொடு | 115 |
| கொள்ளிகொடே | 114 |
| **ச** | |
| சச்சிதா | 85 |
| சத்தெனச் | 79 |
| சத்தே | 100 |
| சத்தோ | 100 |
| சமரநெடு | 81 |

| பாட்டு | பக்கம் |
|---|---|
| சம்புமார்க் | 88 |
| சரியைக்கு | 106 |
| சவிரதக் | 92 |
| **சா** | |
| சாரூபமே | 801 |
| **சி** | |
| சித்தெனுஞ் | 95 |
| சிந்தையு | 123 |
| **சீ** | |
| சீடர்க | 111 |
| சீரேறு | 79 |
| சீர்பெற்ற | 81 |
| சீவரித் | 92 |
| சீவர்கட்க | 87 |
| சீவர்கட்கி | 89 |
| **சு** | |
| சும்மாவி | 101 |
| சுழுத்தியி | 93 |
| **செ** | |
| செம்பெனுஞ் | 93 |
| **சே** | |
| சேதனர்க்க | 90 |
| **சை** | |
| சைவத் | 88 |
| சைவம்வை | 87 |
| **சொ** | |
| சொற்றமல | 84 |
| சொற்றவெளி | 104 |
| சொனசுத்த | 101 |
| சொனவணங் | 110 |
| சொனவிரண் | 89 |
| **சோ** | |
| சோதி | 95 |
| **த** | |
| தண்டுலத் | 92 |
| தற்போத | 108 |
| தன்செயல் | 122 |
| தன்னைத்தா | 120 |

| பாட்டு | பக்கம் |
|---|---|
| **தி** | |
| திக்கோடந் | 108 |
| திருமலிந்த | 82 |
| **து** | |
| துறவறத் | 110 |
| துன்புசேர் | 90 |
| **தே** | |
| தேகத்தை | 119 |
| தேகியென்பா | 98 |
| **தொ** | |
| தொங்குநன் | 88 |
| **ந** | |
| நனவும்பள் | 121 |
| நன்றுந்தீதுந் | 91 |
| **நா** | |
| நாஞ்சொன் | 117 |
| **நி** | |
| நிகமங்க | 102 |
| நிகழ்த்து | 121 |
| **நீ** | |
| நீயறியு | 120 |
| நீரிலாது | 89 |
| **நெ** | |
| நெஞ்சா | 102 |
| **ப** | |
| பணிதியென் | 116 |
| பதிசத் | 100 |
| பத்தியந் | 111 |
| பந்தமாகி | 121 |
| பலமலர் | 81 |
| பன்னிறப் | 88 |
| **பா** | |
| பாசம் | 99 |
| பாரமார்த் | 111 |
| பார்த்த | 122 |
| பானுசன் | 89 |
| **பி** | |
| பிதிர்பூசை | 106 |
| பிரளயர்க் | 96 |
| **பீ** | |
| பீமணம் | 114 |

| பாட்டு | பக்கம் |
|---|---|
| **பு** | |
| புத்தான | 106 |
| புருடவுடற் | 85 |
| **பே** | |
| பேதமற்ற | 89 |
| **பொ** | |
| பொய்யாத | 801 |
| பொல்லாத | 106 |
| பொன்றானே | 116 |
| **போ** | |
| போற்றிய | 113 |
| **ம** | |
| மங்குபுற் | 86 |
| மடமது | 110 |
| மடமுடைப் | 109 |
| மரணஞ் | 80 |
| மலநசிக் | 97 |
| மலமகன் | 92 |
| மறையந்த | 101 |
| மனைமக்க | 106 |
| மன்றலாற் | 118 |
| **மா** | |
| மாசிகந்த | 119 |
| மாயையென் | 97 |
| **மி** | |
| மிச்சையா | 94 |
| **மு** | |
| முகிலுழி | 93 |
| முக்குணங் | 119 |
| முதனூலி | 102 |
| முதனூல்க | 116 |
| முந்தைய | 374 |
| முப்பத்தா | 88 |
| முற்றுணர் | 122 |
| முனருரைத்த | 85 |
| முன்னரஞ் | 92 |
| முன்னைச்சஞ் | 98 |
| **மூ** | |
| மூச்சடக்கும் | 801 |
| மூர்த்திபேத | 87 |
| **யோ** | |
| யோகுக்கு | 801 |
| **வ** | |
| வடிவமற் | 87 |
| வலிதிலே | 123 |
| வலியகாட் | 95 |
| **வா** | |
| வாசனை | 111 |
| **வி** | |
| விரும்பி | 118 |
| விழுமிய | 123 |
| **வீ** | |
| வீணான | 106 |
| **வே** | |
| வேடம | 113 |
| வேதநன் | 93 |

உ

சிவமயம்.

குஹப்ரஹ்மணேநம:

திருச்சிற்றம்பலம்.

# பரிபூரணானந்தபோதம்.

## பாயிரம்.

### ஓங்காரதேவ வணக்கம்.

***நேரிசைவெண்பா.***

**சீ**ரேறு நான்மறையுஞ் செப்பரிய தந்திரமும்
ஏரேறு நூல்பலவு மேசறவே - நாரோ
டுணர்ந்தா ருளத்திலில கோங்கார தேவின்
தணந்தா ளிணை நினைவாஞ் சார்ந்து. 1

### ஆனந்தவத்து வணக்கம்.

***கலிவிருத்தம்.***

**ச**த்தெ னச்சொலுந் தாவில் சிவத்திலுஞ்
சித்தெ னச்சொலுந் தேவி யிடத்திலும்
புத்தி ரப்பெயர் பூண்டில கானந்த
வத்து வின்கழல் வாழ்த்தி வணங்குவாம். 2

### குகப்பிரம வணக்கம்.

**ஒ**ன்றி ரண்டென வோதற் கிடங்கொடுத்
தொன்றி ரண்டென வோதவொண் ணாததாய்
நின்ற சஞ்சல நின்மல மாய்மிளிர்
பொன்றி டாக்குகப் பிரமத்தைப் போற்றுவாம். 3

***அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.***

**கா**மம் வெகுளி மயக்கமெனக் கழறு முக்குற் றங்கடிந்து
சாம மறையின் சிரப்பொருளைச் சங்கை யறவே யுய்த்துணர்ந்த
சேம வறிஞர் பெறும்பேறாய்ச் சிறியேற் கருளுந் தைவதமாய்
ஓமெய்ப் பொருளாங் குகப்பிரமந் தன்னை யுள்ளத் துள்வைப்பாம். 4

**ம**ரணஞ் சனனம் பொருந்தார்நன் மதிசே ராக்கம் பெறுவானுண்
பொருணன் கார்ந்த திருப்புகழ்தான் புகன்ற வெந்தை யருட்கடலாம்
அருண கிரியா னகத்தமர்ந்த வகண்ட வரிய குகப்பிரமப்
புரண வடியை யெஞ்ஞான்றும் போற்றிப் பரவி வழிபடுவாம். 5

## பரமகுரு வணக்கம்.

*எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.*

**ஐ**ந்துகுறிப் பினின்மூன்றை நீத்தி ரண்டை
யகலாது சேர்த்தறுவ ருணரக் காட்டி
ஐந்துமுகத் தவற்கினிய தார வுண்மை
யன்றருளி யின்றெனையு மாண்டு ளான்மா
பைந்தனநேர் கூச்சிரங்கொண் மொய்ம்பு மன்னும்
பரமவடி விலங்கியவு ளம்பி கைக்கு
மைந்தனெனுங் குமரகுரு வென்றன் றீர்த்தன்
மலரடியைப் பரசியிதை வழங்க லுற்றேன். 6

## நூலருளிச்செய்த காரணம்.

*அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.*

**இ**க்கெனு மொழியைத் தானே யிரும்பஞ்ச தாரை யென்று
நக்கிய நினைவைப் போல ஞானநூ லோதித் தேய்ந்த
பொக்கர்கள் புகலுங் கூற்றைக் கணித்துநான் பொறாம லிங்ஙன்
திக்கெலாஞ் சுடர விந்தத் திருமுறை விளம்பா நின்றேன். 7

## நூற்பொருள்.

**மு**ந்தைய நூல்க ளென்று மொழியரு மறைக்கும் யாணர்த்
தந்திரந் தனக்கு முள்ள சமரசப் பொருளைக் கூறி
அந்தமி லாத மோக்க மடைதிற மார்க்க மெல்லாஞ்
சுந்தர மாக விந்தத் துகளினூல் விளக்கா நிற்கும். 8

## நூற்பயன்.

**அ**ங்கியை யணுகி னார்க்குக் குளிருமா வம்பன் மாறிக்
கங்குலிற் சென்றா ருக்குக் கதிரவன் றோற்றத் தாலே
பங்கமா மருட்டு மாய்ந்த பண்புபோ லிந்த நூலை
மங்கிடா மதியிற் றேர்வார் மனமய றீர்ந்துய் வாரே. 9

## நூற்சிறப்பு.

**ப**லமலர் தோறுங் கள்ளைச் சிறையளி பருகு மாபோல்
இலகுமெய்ஞ் ஞான நூல்கள் பலவுளு மெடுத்த சாரம்
சொலுமுறை பொலிந்து நிற்பச் சுருக்கமாச் சொற்ற தாலே
மலர்மடற் கைதை யாகா வகுளம தாகு மிந்நூல். 10

## நூற்பெயரும், நூற்கதிகாரியும்.

*அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம் ; சந்தம் வேறு.*

**சீ**ர்பெற்ற சுருதிபதி யாகம புராணமிரு திகளாதி முறைகளோரற்
கோர்பெற்ற வுலகிலுள மக்களி லபேதநிலை யெய்தமுயல் வார்தத்துவப்
போர்பெற் றுறுங்களி விளக்கலா லீதுபரி பூரணா னந்தபோதப்
பேர்பெற்ற தாகுமிது பெத்தருட் டீவிரம் பெருகறி வுளர்க்காகுமே. 11

## அவையடக்கம்.

*அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம் ; சந்தம் வேறு.*

**இ**ந்நூலுக் கறிவிலிக ளேசுரைக்க வேலாதுள் ளீடுள் ளோராய்ப்
பன்னூலுந் தேரறிஞர் களும்பழுது பகரார்கள் பாலர் தாமே
தந்நேயத் தந்தைமுனர் வழுவுடைய குதலைமொழி சாற்றுஞ் செவ்வி
இன்னேறு மமுதமெனக் கொள்வார்க ளதுபோல விதையுங் கொள்வார். 12

## ஆக்கியோன் பெயர்.

**ச**மரநெடு வேற்றடக்கை வேந்தரெலாந் தன்னடியைத் தாழ்ந்து போற்ற
அமரர்தவர் வாழ்த்தெடுப்பப் பெருஞ்சீர்த்திப் பெருந்தகையா யமர்கா குத்தன்
மமதையிலா ரகம்போல வனைந்ததிருச் சேதுவிடை வயங்கு பாம்பன்
குமரகுரு தாசனிதைக் குயிற்றினான் குமரகுரு தகவான் மன்னோ. 13

பாயிர முற்றிற்று.

நூல்.

# பதிபசுபாசயதார்த்தவிளக்கப்படலம்.

## 1. சற்சீடன் கடாவுக்குச் சற்குரு விடையிறுக்கத் தொடங்கல்.

*எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.*

**தி**ருமலிந்த மகிதலத்தின் மானு டர்க்குட்
சிறப்புடைய வொருமனுடன் முன்னை நோன்பாற்
கருமலிந்த பிறப்புநோய்க் கஞ்சி நல்ல
கல்வியொடு தவப்பேறு முதிர்ந்து மின்னும்
அருண்மலிந்த வோரிறைவன் றன்னைக் கண்டெம்
மையபொழி லண்டநிரை களையு மூத்தை
உருமலிந்த வுயிர்களையுந் தந்தோ ரேவ
ருரைத்தியென வக்குரவ னுவந்து கூறும். 1

## 2. வத்து நிச்சயம்.

**உ**ட்கருவி புறக்கருவி யாகக் கூறு
முடம்பினுக்கு ளோருயிரே யிருத்தன் மான
மட்பொலிவி னானிறுவு முலகுக் கெல்லா
மகத்தாய பரம்பொருளொன் றுளதஃ தேதான்
நிட்களநி ராலம்ப நிருவி கார
நிரதிசய தத்துவமா யீறில் லாத
கட்கருவிக் கெட்டாத வகண்ட ஞான
ககனமென வேயெங்கு நிறைந்து நிற்கும். 2

**இ**ப்பெரிய பரம்பொருளுக் கனாதி யென்று
மீசனென்றும் பரமபதி யென்றும் யாருஞ்
செப்பரிய பிரமமென்றுங் கடவு ளென்றுந்
தேவனென்றும் பரமசிவ மென்று மொன்றை

ஒப்பிடற் கொணாதபர தெய்வ மென்று
முணர்வான பரமான்மா வென்று ஞான
விப்பிரர்க ளகத்திலொளிர் சுப்ர மண்ய
மென்றுஞ்சொல் பலபெயரும் விளங்கு மாலோ. 3

**ஒ**ருதலத்திற் கனந்தம்பே ரிருத்தல் போலவ்
வொருபொருட்கே யளப்பிலாப் பெயர்க ளுண்டு
வருகையுட னிறுதியிலா வப்பொ ருட்கு
மார்த்தாண்ட னுழியொளிபோ லருளொன் றுண்டு
பிரிதலிலா வவ்வருளுக் கபினை யென்றும்
பிறங்குசிவ சத்தியென்று ஞான மென்றும்
கருதரிய சித்தென்றும் பல்பே ராகக்
கழறுவகை யினையுநன் மகனே யோர்தி. 4

**அ**ப்பொருளை யகண்டமென நுவலுங் காலை
யாருயிரு மாயையுந்தா மிருத்த லெங்ஙன்
செப்பிடுக வெனவினவுஞ் சங்கை யிங்கே
செனிக்குமது தீருமா றுரைக்கக் கேட்டி
துப்புடைய வக்கினிபோ லான்மா வாண்டுச்
சூடதுபோற் சிவந்தேசு போல மாயை
ஒப்புமுறை யாமிவற்றுட் சூடா யுள்ள
துளும்புறமும் பிரிவறவே செறியா நிற்கும். 5

**அ**க்கினியாத் தேசாகக் கணிக்கி லந்த
வழலுக்குப் பூரணமெவ் வாறே யென்று
தர்க்கமிடு வார்க்குநீ நோக்குக் கெட்டாத்
தாபமெனுஞ் சூடருவ மாத லாலே
சக்கதனுக் கெட்டினவை களினு நீக்கந்
தானின்றி நிறைந்திருக்கு மச்சூ டின்றி
அக்கினியு மதனொளியுந் துலங்கா விந்த
வடைவாலே பூரணமென் றதிர்க்க லாமே. 6

## 3. பதி பசு பாசங்க ளுளவென்றகு வேதாகமங்களின் சம்மதம்.

அருவமெனு நிட்களம தன்றி யாது
மகண்டமென வமையாது சகள மான
உருவனைத்துங் கண்டமென வமைத றிண்ண
முரைத்தவழ லாதியொரு மூன்று மொன்றாய்
மருவுமுறை போற்சிவந்தா னுள்ள வன்றே
வளருயிரு மாயையுமுண் டென்று தீர்த்தல்
இருவகைக்கு மொவ்வுதலி னனாதி யென்றீண்
டியம்புவது சரதமென வுணர லாமால். 7

கயிறுதனி லரவதுதான் றோன்றல் போலக்
கனபிரம மதின்மூன்றும் பொய்யென் றாலுங்
கயிறான பிரமமது வுள்ள போழ்தே
காணவுள்ள வரவான சகசீ வேச
நியதிகளு முளவென்று தேர்த லாலிந்
நேர்மைநவின் மறையீறும் பதியு மாசார்
உயிரோடு பாசமது மனாதி யென்றே
யுணர்த்தாக மத்தீறு மொன்றே யன்றே. 8

ஆன்மாவுக் கஞ்ஞான மனாதி யென்று
மதுதானே யவித்தையென்றும் பாச மென்றும்
நான்மறையின் முடிவுரைப்ப தானு நன்கார்
ஞானநவி லாகமந்தா னுயிர்க்க முக்காய்த்
தான்புகலு மலமதுதா னனாதி யென்றுந்
தவிடுமியங் குரம்போல வுளதே யென்றும்
பான்மையுடை யம்மலத்தே மாயை யென்றும்
பாசமென்றுஞ் சொலலானு மிரண்டு மொன்றே. 9

சொற்றமல மாயையையொன் றிரண்டு மூன்றாச்
சொல்லினுமே விகற்பின்றிக் கருத்தொன் றேயாம்
பற்றுமல மாயையற்ற சுத்த மென்னாப்
பசுவான வான்மாவைப் பகர்வே தாந்தம்

முற்றுறுநன் முத்தியினி லொவ்வு மன்றே
முன்னுவலற் கொவ்வாது நுவல்வ தெற்றேல்
அற்றமறு முடிவான தீர்ப்பைத் தானே
யாரம்ப மதினும்வைத் தறைந்த தாமே. 10

**அ**றிவுநிமிர் தேசிகனே முன்னஞ் சொன்ன
வக்கினியா மான்மாவிற் சூடாந் தெய்வம்
நிறைவிடுத லுண்மையெனி னொன்றுக் கொவ்வு
நினைப்புறுதொண் டான்மாக்க ளளப்பி லாமற்
செறிதலினா லவற்றுளந்த வேக தெய்வஞ்
சேர்ந்திருக்குஞ் சரதமதை விளக்கிப் பின்னும்
நிறைவுநவில் விபுவாக நிற்கு நேரு
நெறியாகத் துலக்கியருள் புரிதி யென்றான். 11

**பு**ருடவுடற் காதார மாக வுள்ளும்
புறம்புநிறை வெள்ளிடையுங் காலும் போல
உருமருவு முயிர்தோறு முள்ளுக் குள்ளே
யுளபிரமந் தனையந்த ரான்மா வென்றும்
பெருவெளியாம் புறத்திலுள்ள வத்துத் தன்னைப்
பேசரிய பரப்பிரமம் பரமான் மாவென்
றருமுறைகள் சொல்லுமந்த விரண்டு மொன்றே
யண்டவெளி பிண்டவெளி போலுந் தேரே. 12

**ச**ச்சிதா னந்தபரப் பிரமந் தானே
சாக்கிரசொப் பனசுழுத்தி களுக்கு நேரே
உச்சமுறு சாட்சியா யிருக்கும் போழ்தா
முணர்வாய சீவான்மா வந்த ரான்மா
நிச்சயமாம் பரமான்மா வென்று சின்னூ
னிகழ்த்துவதை யீண்டதிர்த்த சீவ னோடே
அச்சமறு முள்ளான்மா பரமான் மாவென்
பவற்றிற்கு மருத்தமிட்டுக் கொள்ளொ ணாதே. 13

**மு**னருரைத்த வக்கினிசூ டொளியே யாய
மூன்றும்விற கிடைத்தோன்றல் போல வோது
கனசிவமும் பசுபாசங் களுமெச் சார்பிற்
காணுமெனக் கடாவிடுதற் கிடனிங் கில்லை

எனையென்னி லனலாதி மூன்று மட்டி
லெடுத்தபிர மாணத்தை யனாதி யாக
உனலன்றி மேற்போக வொண்ணா தேற்ப
வுரைத்தளவி லுவமானங் கொளலே ஞாயம். 14

**க**ட்டையிலே கள்வனென்று சொனதைக் கொண்டே
கனபிரம விலக்கண மெலாமங் கோதற்
கொட்டாது பின்னுமதற் காதிக் கட்டை
யோதெனலு மரபன்று தீயாம் பூதஞ்
சுட்டின்றி நீர்வாயுக் காட்டத் துள்ளுஞ்
சூக்குமமா யிருந்தெங்கு நிறைவாய் மன்னுந்
திட்டமுடன் மேற்சொற்ற தேசுந்தீயுஞ்
சேர்ந்திருக்கு மதிசூக்க மாயென் றான்கோ. 15

## 4. மூர்த்திபேத நிச்சயம்.

***கலிநிலைத்துறை.***

**ஐ**ய வென்றனிறை யேசொன வாறுய ரமல
தெய்வ மானதுரு விலதெனிற் பற்பல தேவர்
மெய்யி லங்கவுள ரென்பதென் விளக்குதி யென்னாப்
பையி லங்குமகன் வினவின னாரியன் பன்னும். 16

**ம**ங்கு புற்கலர்தம் மாசறுத் தாண்டுகொள் வானோர்
ஐங்கி ருத்தியமுஞ் செயப்படு மவட்பிர மாதி
ஐங்க ருத்தர்களு மாவரவ் வைவரு மந்த
அங்க மற்றபிர மத்தின தங்கிச மறிதி. 17

**அ**ஞ்சு பேருருவு மாயையி னிடைவெளி யாகும்
அஞ்சு கேத்திரமு மவர்க்குள வவத்தையு மஞ்சாம்
அஞ்சு பூதியமு மவரது தத்துவ மாகும்
அஞ்சு பேர்வினையு மீசுரன் றன்வினை யறிதி. 18

**எ**ன்று சொற்றவிடை யேற்றசற் சீடனு மீடில்
வென்றி யுள்ளவரன் விட்டுணு வென்றிரு மூர்த்தி
யின்றி றம்பரவி யொன்றனை யொன்றுகொ லெள்ளற்
கன்றெ ழுந்தமுறை பற்பல வறைதலெ னென்றான். 19

**அ**ந்த நுட்பமதை யிங்ஙனங் கேட்டியென் றாசான்
நிந்தை யின்றி நுவல் கின்றன னவர்களி னீர்மை
தந்தம் வாதிகளும் விளக்கிடு காலொரு சாங்கம்
அந்த மாகிய வுபாங்கமின் றென்னவு மறைவார். 20

**ஆ**தி யந்தநடு வற்றறி வாம்பரப் பிரமம்
ஈதென் றோதிடுவ ரிவைகளை யூகிக்கி னவர்க்கே
ஏத மற்றதெய்வ மொன்றுள தென்னுணர் வெழலால்
வாத மொன்றுமிலை வடிவ மிலாதது பொருளே. 21

**வ**டிவ மற்றபர வத்துவி னிலக்கணந் தன்னை
வடிவர் கட்குரைத ராவிடின் மாண்புமின் றவர்க்கால்
வடிவ மற்றதுசம் பூரண மாகலின் வாதம்
வடிவ மட்டிலல துண்மையி லின்றெனன் மரபே. 22

**சை**வம் வைணவ மிரண்டி னுஞ்சகள த்தைநீத்து
மெய்ம்மைகூறி யுனிலோவந்த மேதகப்பொருளைப்
பொய்ம்மையின்றி வழிபடலென வாமிந்தப் பொருத்தம்
மைம்மனத் தவர்கடோர்கிலர்ம தியினர்தேர்வர். 23

**மூ**ர்த்தி பேதகமு ளொன்றனுக் கொன்றதி முரணாய்
வார்த்தை யாடுமுறை முறையுள வேவிதி வழங்கச்
சாத்தி யஞ்சிறிது மின்றுர வோரதைத் தவிர்த்துப்
பூர்த்தி செய்யவுள மூர்த்தியைப் புந்திசெய் வாரால். 24

**சீ**வர் கட்கருளும் வானுயர் மூர்த்தியைச் சிந்தித்
தாவி யுண்மைதனை யறிவிக்க வேயறிந் தீறில்
ஓவி லொன்றுகள மொடுங்கிய வந்தர முறழ்ந்து
மாவி லாசவருட் பிரமத்தை யெய்துவர் மதியோர். 25

**அ**ருவ வுண்மையறி விக்குமம் மூர்த்தியை யன்றி
அருவ மிற்றெனவுள் ளறிவதில் லாகலி னாசான்
உருவ மாயிலக லுண்டந்த வொழுங்கினை யீசன்
மருவு நல்லளியி னாலவ்வவ் வடிவுக்கு வடிவாய். 26

**சை**வத் தச்சுதனை யுயிரெனச் சாற்றினுந் தாவில்
மெய்வத் தாயசிவ சத்தியின் மேனியிஃ தென்றுந்
தொய்யற் றூயசிவ பேதமு ளொன்றென்றுஞ் சொலலாற்
பொய்வத் தன்றுவிது வென்றுரன் கோடலும் பொருந்தும். 27

*எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.*

**ச**ம்புமார்க்கமேய்ப்ப வேசனார்த்தனன் னெறிக்கணும்
அம்பரத்தைமேவுஞானவான்க ளோடுய்யன்பரும்
உம்பர்வாழ்த் தவேயுளாரென்றோ துநூலுணர்ந்துளோர்
வம்புபேசிடார் மெய்ஞ்ஞானவாழ்விற் பேதமில்லையே. 28

**ப**ன்னிறப் பசுக்களிற் கறந்த பாலின்பான்மையே
என்னமூர்த்திபேதந் தானனந்தமுள்ள வென்னினும்
வின்னமற்றவுண்மை யால்விகற்பமின் றெனத்தெளிந்
தென்னையாளுமீசுரன் பதத்தை நாடுவார் நலோர். 29

**மு**ப்பத்தாறுண்மன் னுபன்மதங்கடந்த மோனவாழ்
வைப்பற்றொண்மையா த்தரிம்மதச்சழக்கின் மாழ்கிடா
தப்புமுப்பும் போலவே யமர்ந்திருந்த வாணையிற்
றப்பிடாத தீதசற்சமா திமேனிலாவுவார். 30

**தொ**ங்கு நன்னர் முலையி னுண்ணி துத்தம் விட்டுச் சோரியே
அங்கம் விம்ம வுண்ணல் போ லனேக நூல்க ளாயினும்
உங்கள் கத்த னெங்கள் கத்த னென்று வாத மோதுவோர்
பங்க மற்ற ஞான மின்றஞ் ஞான மேப டைப்பரால். 31

**க**ல்விபொன்னிரண்டு நற்கருத் துளர்க்கு நன்னரும்
வல்விடத்தை யொத்தவர்க்கு மல்கு தீதுநல்குமால்
ஒல்கிடாதபேதவாதமோ துவார்தங்கல்வியும்
நல்குமாவரந்தை யென்றுஞான நூலிசைக்குமால். 32

**நீ**ரிலா துசந்துரைத்த நீள்கரங்க ணோதல்போல்
ஏரிலாவிவேகமின் றிவாதுபேசி யெய்க்குமுட்
சீரிலாரிணக்க நீசெயாதிருந்து தேவர்வாழ்
ஊரிலுள்ள டங்கவேயுயர்ந்த நிட்டை செய்குதி. 33

**பே**தமற்ற போதவட்டை பேதபந்த மானுடர்க்
கேதுமில்லை யென்பதுண்மை யென்னநூல்கள் பன்னுமால்
மாதர்புத்தி யேய்ப்பவே மதங்கள்பேசி வாயுறழ்
வோதுவாரவ் வூகவாழ்வு றாரென்றோதி னானிறை. 34

## 5. பஞ்சகிருத்திய நிச்சயம்.

**இ**ந்தவாற திர்த்த யாவு மேசிலா தசீடனோர்ந்
திந்தஞாய மொவ்வுமுன்னி சைத்தசுத்த வத்துவுக்
கெந்தவூழுமில்லையே யெவ்வா றுபஞ்சகிருத்தியஞ்
சொந்தமாய் நடக்குநன்கு சொல்லவேண்டுமென்றனன். 35

**பா**னுசன்னிதிக்கண்யாணர்ப் பங்கயங்கள் விள்ளல்போல்
ஆனியில்சிவத் தின்சன்னிதா னசத்தியாலெலாம்
ஊனமின் றியாமுனேயுரைத் தவைங்கிருத் தியம்
ஏனெனக்கடாவுவார்க்கியா னுரைப்பதென் னெனின். 36

**ஊ**கமோதுவேதமார்க்கியி லீலையென் றுரை த்திடும்
ஆகமம்வண்ணானை யேய்ப்பவாத் துமாக்கடீட்டெலாம்
ஏகவென்றுஞுற்றலாகு மென் னுமவ்விரண்டையும்
பாகமாகவூகஞ்செய் துபார்த்த ஞாயம்பன் னுவேன். 37

**சீ**வர்கட்கி தாகி தஞ்செய்தோவி லீலைசெய்வனத்
தேவனென்னொர்கேள்வி தான்செனிப்பதா லஃதொவ்விடா
சீவர்கட்கமுக் கொழிக்கத் தேவனுக்குமி த்துணைத்
தாவுடைப்பிரமாதமோ சொலென்னலுஞ்சனிக்குமே. 38

**சொ**னவிரண்டிலா கமந் துலக்கலீரமாவதால்
உனருமத்தைமேலதென் றுரைக்கலாம்பசு க்கடாம்
அனகஞானமின்றனாதி யாமலத் தவாகலின்
இனையஞாயமொவ்வுமென் றங்கீ கரிப்பதே ற்றமால். 39

**ஏ**சுடைப்பசுக்களுக்கவாவியற்கையாதறொட்
டீசனாசைவழியிலே நடத்தியந் தவேட்டையை
நாசமேசெய் துய்த்தல் செம்பைந ல்லசெம்பொனாக்கல் போல்
ஆசிலாவருட்டயாவ தாமெனற்கு மொவ்வுமே. 40

**சே**தனர்க்ககாமியஞ்சு தந்த்ரமாகச்சேரலால்
நீ தனானவீசனந் நிதானங்கண்டுபிரேரி த்தல்
சீதவீரமாகு நல்லதெட்பமார்மருத் துவர்
வாதைவீயச்செய்யுபாயமா னுமென்ன லாமரோ. 41

**து**ன்புசேர்பி றப்பையீகன் மம்மிரண்டுந் தொல்லையென்
றன்பிருத்தி வீடுகூட வுன்னுஞான்றவ் வாண்டவன்
தன்பெருத் தவின் பருத்தறக்க தேயவ்வெல்லையும்
நன்கொடேதுபோக்குவானடத்துமா தியென்ன லாம். 42

***கலிவிருத்தம்.***

**இ**ந்த வாறிறை யோன்புரி மாதொழில்
ஐந்துட் சிட்டியெ னாள்வினை மாயையின்
பந்திப் பிற்கிடந் தோவு பசுக்களின்
பந்த நீப்புடல் பண்ணுவ தேயரோ. 43

**ஆ**க்கை யாற்றொழிற் பட்டுணர்ந் துய்யுமா
றாக்க னைத்தையு மன்புசெய் தங்கங்குக்
காக்குங் கன்மந் தனைத்திதி யென்றரன்
வாக்கெ னுந்தந்தி ரங்கள் வழங்குமே. 44

**கா**ப்பி னைக்கரு தாதுபுன் காதலால்
மாப்பி ணிக்குள் வருந்தி யழுங்குபொல்
லாப்பு விட்டிளைப் பாறும் பொருட்டருந்
தூப்பி ரானற் றுடைத்த னடக்குமே. 45

**எ**னதெ னக்கொள் குலத்துக்கோ ரிஞ்சிபோல்
வினைநு கர்ந்திடு வானதில் வேண்டுவ
நினைவு கூரற் களந்து நிறுத்துமோர்
வினையை யேதிரை யென்று விளம்புவார். 46

**ந**ன்றுந் தீதுந் துலாவொத்த ஞான்றிறை
என்ற ஞானபட் டாரக னின்புடன்
தொன்று மாமல மைந்துந் துடைத்திகல்
இன்றென் றோத லனுக்ரக மேயரோ. 47

**ஆ**ற்ற லாரவ் வனுக்ரக நல்கருள்
தேற்ற மாமதி தீக்கையைச் சீடனுள்
ஊற்ற மேவு முளத்தினு மாரியன்
ஏற்ற மெய்யினு மாநின் றிழைக்குமால். 48

**இ**ந்த வைந்து மியங்குயிர் கட்குறும்
பந்த முத்தி யிரண்டினும் பையுளின்
றந்த வீச னருளி னடக்குமென்
றுந்து நெஞ்சுழி யுன்னருண் மைந்தனே. 49

**ஆ**ன்ற வாரிய னவ்வருண் மேனியாத்
தோன்ற லாலவன் றொல்சிவ மேயெனா
ஊன்று ஞாயமுண் டாவது மோர்தியென்
றான்ற யாவுடை யையனென் பானரோ. 50

**உ**யிர்க ளைக்கதி சேர்க்க வுஞற்றிடும்
அயர்வி லாவைங் கிருத்திய மன்னணம்
உயிரெ லாங்கதி யுற்றபி னோவுங்கொல்
செயிரி லோய்சொல் கெனக்குரு செப்புமால். 51

**ஓ**த்து ரைத்த வணந்துணை யொப்பனை
நீத்த வத்துவு மாயையு நிற்குமட்
டாத்து மாவு மளப்பின்றி யார்தலால்
நாத்தி கூறற் கொணாதெந்த ஞான்றுமே. 52

**எ**ண்ணி லாத பசுக்களென் றோர்நுதற்
கண்ணு ளான்சொன் னொடித்திடல் காண்டலிற்
பண்ணு பஞ்ச கிருத்திய நித்தமென்
றெண்ண லாமுயிர்க் கூத்திவை யேயரோ. 53

**சீ**வ ரித்துணை யென்றந்தத் தைவத
மாவ தோரற் கொணாதுகொ லென்பையேல்
ஓவி றெய்வந்தன் மாண்வரம் புள்குமேற்
சீவர் தந்தொகை யுந்தொகை செய்யுமால். 54

## 6. பஞ்சபாச விவரம்.

*அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.*

**ஆ**தலா லிதுவிங் கோதற் கமைவதின் றறிதி யென்னா
ஓதலுஞ் சீடன் றீர்த்த னொளிமுக கமல நோக்கி
ஏதமாம் பாசஞ் சீவற் கியற்கையே லகல்வ தெவ்வா
றாதவ மனவைச் சுட்டா லகலுமோ தவள மென்றான். 55

**அ**ங்கண்மா வத்தன் கூறு மறிவுடை மகனே கேட்டி
இங்கணே பொருந்தா தந்த வெழின்மன வுவமா னந்தான்
செங்குருச் செம்பின் மாசு நாற்றஞ்செந் நிறமும் போலத்
துங்கமின் மலமோர் மூன்றுந் தொல்லுயிர் மாட்டுண் டன்றே. 56

**ச**விரதக் குளிகை யாலே தாமிரங் களங்க நீங்கிப்
புவிபுகழ் பொன்னா மாறோர் பொருவிலா வருளா லந்த
விவிதமா மலங்க ளெல்லாம் விலகிய பின்ன ராதன்
துவிதமில் சிவமே யாகித் துவிதமற் றிருப்ப னன்றே. 57

**த**ண்டுலத் தனாதி யாகத் தவிடுமி முளையுண் டேனும்
விண்டிடுந் துவைக்குங் காலவ் விதமல மனாதி யேனுங்
கொண்டிடு மருளால் வீயுங் குயின்றது சரத மென்னற்
கெண்டிகை யேத்த வுள்ள விகலரு ளாளர் சான்றால். 58

**ம**லமகன் றறிஞ ராகி மகத்துவம் புரித லானும்
நிலமிசை யுலப்பு நீங்கி நிமலனை யடைத லானுஞ்
சொலுமிந்த வுவமை யாவுந் துகளற்ற வுவமை யென்னா
இலகிய வாக மங்க ளியம்புதல் பொருந்து மாதோ. 59

**மு**ன்னரஞ்ஞான த்தாலுண்மூடுண்ட வேழைச்சீவன்
பின்னர்மெய்ஞ்ஞான த்தாலுட்பி றங்கிடக்கண்டதக்கார்
பின்னவெம்மலந்தான் சேர்க்கையியற்கையோபேசிடாயென்
றென்ன காரண த்திற்காகவினவுவரிருந்தேறாதே. 60

**செ**ம்பெனுஞ்சீவற்குள்ள திரிமலவிவரங்கூறிற்
செம்பினிற்காளி தம்போலாணவஞ்செறி ந்துநிற்குஞ்
செம்பினினாற்றம்போலச் செனிக்கிறகன்ம நிற்குஞ்
செம்பினிற் செம்மை போன்மாயாமலஞ்சிறந்து நிற்கும். 61

**ஆ**ணவமான தந்தகாரமாய றிவாலன்றிக்
கீணமதாகா தாகிக்கிள ர்சித்தைமறைத் துச்சீவர்
காணொணாவண மேசேர்ந் துகலந் துளேயிருப்பதாகி
ஆணவப்பெயருக்கேற்பவ ணுக்களைய ணுவாயாக்கும். 62

**இ**ம்மலஞ்சீவர் தம்மாட்டிரு த்தலிற்க றிவுமாண்ட
மம்மர்சேர்மூலத் தூக்கமூர்ச்சையுஞ்சான் றுமாசார்
எம்மலங்களுக்குமே லாயிருக்குமிம்மலத்தை நீத்தார்
மும்மலவ ணுக்களாகார்முத் தராய்ப்பரமாவாரே. 63

**கே**வலமி துவேயாகுங்கிளரருட் கலையாற்கிஞ்சில்
வீவுறாதகலுஞ்செவ்வி சகலமாம்விரவுமந்தக்
கேவலந் தானேயல்லாங்கிள க்கியசகலமெல்லாம்
ஆவியாமுயிர்கட் கெல்லாமறைந் தவிரண்டுமுண்டால். 64

**வே**தநன் னுணுக்கந் தேரார் மிளிருயிர்க் காண வந்தான்
ஏதெனக் கடாவு வாரஃ தினையஞா யங்க ளாலோர்
போதுமொவ் வாதஞ் ஞானம் பொழுதைச்சீ மூத மூடு
மாதிரி பெனிற்றன் னுக்குண் மறதியேன் மருளேன் மன்னோ. 65

**மு**கிலுழி மறைந்த வென்றூழ் மூதொளி யிறாது தன்னுட்
புகரற விலங்கன் மானப் பூரண வாத்து மாவுந்
துகண்மலஞ் சூழ்ந்தா லுந்தான் றுலங்கிட வேண்டு மிந்தத்
தகவெது மிலாமை யாலத் தளைமல மிருத்த றிண்ணம். 66

**சு**ழுத்தியி லிருந்தோ னந்தச் சுழுத்தியை விளக்க லானல்
விழுப்பொரு ளாய வான்மா வினுக்குமே லறிவுண் டென்னும்
வழக்கினைக் கணித்தீண் டாய்ந்த வண்மையுந் தெரிப்ப லாண்டுச்
சுழுத்தியி லுணருஞ் சித்தந் தொலைவின்றி யுளதா லொவ்வும். 67

**அ**யர்துரி யத்து மேலு மறியறி வின்மை யானும்
மயலுறு சுழுத்தி யேய்ப்ப மதித்தொரு காறு கூறற்
கியல்வதில் லாமை யானு மிவைகளைக் கூடிச் சீக்குந்
துயிலுணர் சுழுத்தி யூகஞ் சுயம்புவென் றிடலொவ் வாதே. 68

**ஆ**த்துமன் றனக்கெஞ் ஞான்று மறிவிருந் திடுமேன் முன்னர்ச்
சாற்றிய மூர்ச்சை வேலை தனினுமஃ திருத்தல் வேண்டுந்
தேற்றிய பின்பல் லாது சிறிதுமஃ தின்மை யாற்பொய்
வேற்றுமை காட்டஞ் ஞான மிகைமல மிருத்தன் மெய்யே. 69

**மி**ச்சையா முயிர்க்கெஞ் ஞான்று மிளிருணர் விருப்ப தாநாம்
நிச்சய நொடிக்க வில்லை நிசபரம் பொருளைத் தானே
சொச்சமா மான்மா வாகச் சொல்லினே மதற்கெஞ் ஞான்றுங்
கொச்சையி லறிவுண் டென்னுங் குறிப்பையு மாய்வா மிங்ஙன். 70

*எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.*

**ஒ**ப்பில் வத்துவை யகண்ட மென்னினது
கண்ட மென்றறையொ ணாதுமா
துப்பி லங்குமது துரிசு டம்புள்வர
ஞாய மின்றறிவு சோர்வெனின்
ஒப்பு றாதிவை யுயிர்க்க தற்கிலென
வோதி னுஞ்சுருதி யாலினும்
எப்ப டிப்பகரி னுங்க டத்துளஃ
திருத்த லென்பதுபொய் யாதரோ. 71

**க**ண்டி தக்கடமு மலமு முள்ளள
வகண்ட மாவதிலை கண்டமே
கண்டி தக்கடமு மலமுஞ் செல்பொழுது
கண்ட மற்றுள வகண்டமே
கண்டி தக்கடமு மலமு முள்ளள
வகந்தை மூடுபசு வாகுமே
கண்டி தக்கடமு மலமுஞ் செல்வுழி
யகந்தை நூறுசிவ மாகுமே. 72

**அ**னக மானபர மூர்த்தி கட்குமறி
வாள ருக்குமுட லுண்மையின்
சொனவ ணம்புலறி வுங்கொ ழிப்புமவர்
கட்கு முள்ளனகொல் சொல்லெனா
வினவொ ணாதவர்கள் வெண்ப ளிங்குநடு
வுள்ள தீபமென வொளிர்தலாற்
கனக மாமுரு விருந்து மின்மையது
காண லானிழலி லாததால். 73

**சோ**தி தன்னையிருள் சேரு மென்னலியை
யாமை போலுயிர்கள் சுத்தமென்
றோதி மாழையொடு கூடு மென்பதுமொவ்
வாத னாதிநனி யுள்ளதாய்
நீதி கூறுவதொவ் வாது போவதிலை
ஞெகிழி யானதை யனாதியே
ஏது மின்னிட விடாது செய்தமுரு
டென்ன மாழையையு மெண்ணிடின். 74

**சி**த்தெ னுஞ்சரத வத்து வின்புடை
யசித்தெனுங் கொடிய வாணவம்
பெத்த மாகவுள தென்றல் விண்ணனி
பிறங்கு சூரியனின் மங்குறான்
நித்த மாகவுள தென்ப தொக்குமென
நெறியி கந்துசொ லுதாரணம்
ஒத்த தாவதிலை மேன்மொ ழிந்தவண
மொத்த துள்ளெரியு முருடுமே. 75

**வ**லிய காட்டமத னத்தி லேமுளரி
மல்கி யேயெழுதல் போற்றமுள்
மெலிவு றாதசிவ யோக நிட்டையில்
விளங்கு முண்மையுணர் வாரினே
சொலுவ ராகலி னனாதி பந்தவிரு
டொலைவி லாதுமுனி ருப்பதும்
நலிவு றாநிலையி லேபின் னம்மல
நசிப்ப துஞ்சரத மைந்தனே. 76

**க**ட்டை யுள்வசு மறைந்த மட்டுமது
கட்டை யென்றறைதல் போலவே
கட்டு மாணவ மறைத்த மட்டுமுயிர்
கறைய றாதபசு வென்னலாங்
கட்டை யில்வசு வெழுந்து சூழ்பொழுது
கட்டை யன்றுகன லென்னல்போற்
கட்டு மாசிலருண் ஞான மேவுழியொர்
கறையு மற்றபர மென்னலாம். 77

**உ**யிரில் வன்மல மிருக்கி லத்தையுணர்
வுள்ள சித்தென வனந்த நூல்
பயிற லெற்றெனின் விடாத பந்ததசை
தனிலு ணர்த்தவுணர் வுறுவதுஞ்
செயிரின் முத்திதசை தனின்மு துக்குறைவு
திகழ நிற்பதுவு முயிர்களுக்
கியல்பெ னுந்துணிவி னாலவ் வாறுசொலு
மென்ம னாருணர்வு ளார்களே. 78

**ஆ**த ரானசக லர்க்கு முய்பிரள
யர்க்கு ஞானகல ருக்குநல்
ஏது வாகநிகழ் கிரியை ஞானமுய
ரிச்சை யத்தனையு மாவரித்
தேத மாகவிளை சீவ போதமு
ளிரண்ட றக்கலவி யெண்ணற
ஓத ணுக்கடொறு நின்று மொன்றென
வுரைக்க வேயுளதிவ் வாணவம். 79

**பி**ரள யர்க்குமிழி சகலர் கட்குநவை
பேச வுஞ்சுகமு முறுகணும்
புரிவ தாகவு மனேக பேதவலி
புகல வுங்கடலி னலையெனா
வருவ தாயழிவ தாக வும்படிவம்
வாக்கு நெஞ்சினிரு வினைகளாய்
விரிவ தாகவு மிருப்ப தேகரும
மலமெ னச்சொலிடு மெய்யனூல். 80

**மா**யை யென்னுமல மேசி றந்தசுசி
மாயை மற்றையது மாமரோ
காய மார்சகலர் பாலி ருக்குமித
னோடு முன்சொலிய கன்மமும்
ஆய புற்கலனில் வெளியி ருக்குமென
வறையு மாதிபதி யாகமம்
நாய பூருவ திரோதை கூறின்மு
னவின்ற வண்ணமல மைந்துகாண். 81

**ம**லந சிக்கும்வண மம்ம லத்தொடு
விராவி யேபொருளை மறைவுசெய்
திலதை யேயுள தெனத்தி ருத்திபணு
வித்து மும்மல வியற்கையை
உலவ வேவியிறை தனையு னாதவர்க
ணிருள தாயுனுமுள் ளொளியதாய்
நிலவி நிற்பது திரோதை யாமிதை
நிகழ்த்து வார்களரு ளென்றுமே. 82

**ஓ**ரு ஞானகல ருக்கு முய்பிரள
யர்க்கு முடல்கரண புவனமோ
டார்சு போகமென வேயி ருப்பததி
சுத்த மாயைசக லர்க்கவை
சேர நின்றிடு மசுத்த மாயைகலை
செப்பி ரண்டனையு முறைமையே
வீர மாகநிமிர் விந்து மோகினியெ
னச்சி வாகமம் விளம்புமே. 83

## 7. கன்மத்திரய ஆசங்கை நிவர்த்தி.

*அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.*

**இ**வ்வா றுரைத்த வெல்லாநன் மாண வகன்றா னிதமாயோர்ந்
தெவ்வா தத்திற் கும்விடைதா னிறுக்கு மைய கன்மமலந்
தெவ்வாய் நிற்க வுளோர்க்கிங்கே யோது முறழ்வு சேர்தலெவ்வா
றவ்வா றில்லை யெனிலென்போல் வார்க்கீ தோதி லென்னென்றான். 84

**க**ருத்திற் கினியோய் நீகுயின்ற கருத்தெ னக்கு வெளியாயிற்
றருத்தம் பெண்மண் ணெனுநசையா லாடுங் கால மாடிவிடும்
பொருத்த மான வவ்வமையந் தானே வீயும் போதமெனாத்
திருத்தம் பேசிச் சோம்புறுவார் திட்டத் துணிவிங் கொவ்வாதே. 85

**க**ன்ம முள்ள காலளவக் கன்ம வழியே நாமென்றெக்
கன்ம முஞ்செய் யாரோசொல் காமுற் றேற்ற படிதிரிந்தே
இன்மை காணா விறப்புதிப்பா மின்னா நிமிர வுழல்வார்தங்
கன்ம மேன்மே லும்பைங்கூ ழிடுவா ராற்று கணக்காமால். 86

**மு**ன்னைச் சஞ்சி தத்தானி யத்திற் கிஞ்சின் முடிவுவிதி
என்னும் பிராரத் தப்புசிப்புக் கெடுத்து நுகர்கா லிச்சையினாற்
பின்னும் விளைக்க விதையாமா காமி யத்தை யேபெய்து
துன்னும் பலனை முன்னெடுத்த சஞ்சி யின்மேற் சொரிவாரால். 87

**இ**ன்ன வாறு தொலைவின்றி யெடுத்தும் புசித்தும் விளைவித்துங்
கன்ன லிருக்க வேம்பருந்து வார்போற் செய்யுங் கரிசொழித்தல்
உன்னு மாகா மியவிதையை யோம்பா தெடுத்த வெலாமுண்டு
முன்னைச் சஞ்சி தமுமாய்க்கின் முடியு மென்றுவ் வுளரோர்வார். 88

**உ**லப்பி லுணர்வா மழலுதிக்கி லொழியு மாகா மியமெல்லாம்
நிலைப்பாய் நின்ற சஞ்சிதமு மன்றே நீறும் பிராரத்தம்
பலக்கா தேநின் றறுதிபெறும் பகர்ந்த துண்மை யெனற்குகமேல்
நலத்தா லுய்ந்து சிவமடைந்த ஞான பரர்கள் கரிகண்டாய். 89

**தே**கி யென்பா னொழிகாலஞ் சிந்தை நைந்த வவன்குலிகள்
ஆகு மாகா மியமாதி மூவர் கைம்மை யாவரன்றிப்
பாக மாகப் பிராரத்தப் பாவை சுமங்க லியாயுய்தற்
கூக மொல்லு நடுவிலையென் றோது நூலு முளவன்றே. 90

**உ**டம்புள் ளளவும் பிராரத்த மொழியா தாத றொட்டதனை
உடன்கொண் டுய்யுஞ் சீவன்முத்தர் கட்கு மஃதுண் டென்பதுமுண்
டிடங்கொண் டிலகும் புந்தியுளோ யிவ்வி ரண்டு மொவ்வுதலைக்
கடந்த முத்தர் மனதருவாய்க் காணு மாற்றா னறிமன்னோ. 91

**உ**ருவ மனத்தர்க் காம்விடய முருவ மாகு முருவமிலா
அருவ மனத்தர்க் காம்விடய மருவ மாகு மாதலினால்
மருவி மருவா திருக்குமந்த மாசில் சீவன் முத்தர்புசிப்
பருளின் செயலா நிற்குமென்றே யத்தன் விளக்கி யருளினனே. 92

## 8. முத்தியிலு மும்முதல்களுளவெனற்கு வேதாகமங்களின் சம்மதம்.

***கலிவிருத்தம்.***

**எ**ந்தா யிதுபோ லெழிலார் விடைநீ
தந்தா ளமுதந் தனின்மும் முதலும்
தொந்தா துளவென் றரனூ னுவலின்
வெந்தே றிடுமொற் றுமையெவ் விதமாம். 93

**எ**ன்றான் மதிசேர் மகனின் படிகள்
நன்றா யிதைநீ தெளிநா னவில்வல்
பொன்றா வரணிக் கனலைப் பொருமென்
குன்றா முடிவைக் குறிசெத் தறுமே. 94

**அ**த்தீ யிடைவெப் பனல்போல் விரவிக்
கத்தா வுமிறா வணுவுங் கறையின்
றெத்தே வருமே தொழுமா றிலகும்
வித்தா ரநயன் மிளிர்வீ டிதுவே. 95

**பா**சம் பகலோன் முனரே திமிரம்
நாசம் பெறல்போ னயவா லருண்முன்
பாசங் கையிலா தழியா தழிவுற்
றீசன் றருமின் பெனநின் றிடுமே. 96

**இ**தனா னிசமுப் பொருளென் றிடலுஞ்
சதமா யொருமைத் தகையோ திடலும்
இதமா கவொவும் புகல்வே னினமுஞ்
சுதனே யுணரென் றுரியன் சொலுவான். 97

**ச**த்தோ டறிவுந் தகையின் பமதுங்
கத்தா நிலையுண் டெனவே கரிசில்
சித்தா கமமுந் திகழா ரணமும்
ஒத்தோ துதலுண் டெனவே யுணர்வாய். 98

**இ**ம்மூன் றுமொருங் கிலகும் மிதுவே
பெம்மான் றருபே ரமுதென் றிடுமோர்
செம்மே னியடங் கிடுமா தெளிவிற்
சும்மா வமருஞ் சுசியத் துவிதம். 99

**ச**த்தே பதியச் சததம் பிரிவில்
சித்தே பசுவத் தினவின் பதுவே
மத்தா கியபா சமனப் பிமரஞ்
செத்தா லிவணந் திகழுந் தெளியே. 100

**ப**திசத் தெனவெம் மறையும் பறையும்
மதியற் றபுமான் வளர்சத் துமலன்
இதமுற் றறிவித் திடினும் மறியா
அதமக் குணபா சவசத் துமலன். 101

**அ**றிவித் திடினே யறியும் பரிசால்
உறுகட் பெறலிற் சதசத் துயிரென்
றுறுதிப் பவனூல் சொலுமவ் வுரையால்
அறிவுக் குரியோ னணுவென் றிடலாம். 102

*எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.*

**அ**தனா லியங்கு மறிவான சீவ
னகல்சித் தெனற்கு ரியதாம்
உதவாத பாச மொருபோது மின்ப
மெனலொவ்வி டாது தெரிவீர்
சதமாக வென்னு மறையோரு மீது
சரிதா னெனச்சொ லிடநான்
இதமாக விம்பர் நவில்வே னெனக்க
ணிறைவாய் மலர்ந்து நவில்வான். 103

**ம**றையந்த நூல்க ளணுநின்ற கார
    ணவுடம்பை மல்கு சுகமென்
றறைகின்ற வின்ப மயகோச மென்று
    மறியா வுபத்த மதனை
உறுமின்பு கொண்டு களிசெய்யு மென்று
    முபயந் துறந்த நிலையில்
அறிவுந்தி யாவு மதுவென்று மோது
    மதனா லசித்து மகிழ்வாம். 104

**சொா**னசுத்த சச்சி தானந்த வண்மை
    துவிதத் தினுக்கு மொவிடும்
முனலற்ற வேக மெனுநிச்ச யத்தின்
    முடிவுக்கு மொவ்வும் விவரம்
பனுமித் துவந்து வமுமின் றெனச்சொல்
    பதமற்ற தற்கு மொவிடும்
எனதுத்த மச்செந் நெறியோய் முடிந்த
    விதன்வாய்மை யின்னு மறைவல். 105

**ஒ**ன்றென்னின் முத்தி பெறுவானு மின்பு
    மொழியும்வெவ் வேறு மொழியிற்
சென்றுவரு கின்ற பதமுத்தி யல்ல
    தைக்கியஞ் செப்ப விசையா
தென்றிவ் விரண்டு மல்லாத சுத்த
    வியல்பான சற்ச மரசம்
பொன்றலறு மௌன முடிவென்று தந்தி
    ரத்தினது சென்னி புகலும். 106

**சு**ம்மா விராது சும்மா விருப்ப
    தேயிந்த வாய்மை யிதுவே
சம்மார நாதர் கல்லாலி னல்ல
    தடவங்கை வைத்த குறியால்
மும்மா சகற்றி யிம்மா திறத்தெம்
    மொடுநின்மி னென்ற முடிவும்
இம்மூக வர்த்த மல்லா திசைக்கு
    மெல்லா மவத்த மகனே. 107

**நெ**ஞ்சா னினைக்க வாக்கா லுரைக்க
வொண்ணாவொர் நீர்மை யெனவே
செஞ்சீர்கொ ணூல்கள் சொலியுஞ் சழக்கர்
தேறார் வழக்கி லுழல்வர்
அஞ்சோறு துய்த்த லின்றே யழிந்த
வசனத்தை யும்ப லரியை
மஞ்சோ டருந்த வுனுநீர்மை யென்ன
மதியொன் றிரண்டெ னலையே. 108

**மு**தனூ லிரண்டி லரனூ லசங்க
மொழியாத வின்ப முனுநீ
அதுவாவை யென்னு முடிபா யிருக்கு
மறவோ ருவந்த சுருதி
அதுநா னெனச்சொன் முடிபா யிருக்கு
மதனா லிரண்டு மழியாப்
பதமான சுத்த வனுபூதி முன்பு
பகையா தொருங்கு படுமே. 109

**நி**கமங்க ணாலு ளுயர்சாம வுச்சி
நிகழ்கின்ற தத்து வமசி
பகருஞ் சுருக்க மதுசோக மஃது
நாலே ழெனச்சொல் பதிநூல்
புகலந்தம் வாது ளத்தோய்வில் வந்த
புரைதீர் சிவோக மதுவும்
உகளங் கடந்த வோமென்ப தன்க
ணொருசேர நிற்ற லுணராய். 110

***கட்டளைக்கலிப்பா.***

**அ**வித்தி யாகத மான வுயிர்ப்புன்மை
யாக நானென் றெழுந்திறன் றானிறந்
துவக்குங் காலவ் வுயிர்க்குநற் சாட்சியா
யுள்ள தைவிக மாதலு மாணவக்

கவிப்ப தான வுயிர்ப்புன்மை தோன்றவே
காட்டி நானென் றெழும்பகந் தானிறந்
தெவைக்கு மாண்டவ னாஞ்சிவ மாதலு
மேச கன்றவொன் றென்றுகொ ளன்பனே. 111

இச்சைக் காமனப் போதகந் தானிறந்
தேக மாயறி வுக்கறி வாய்நிலா
வச்சி வத்தினை நீங்கலின் னீர்மையு
மாடுஞ் சீவத்து வந்தணந் தங்கணோர்
அச்ச மின்றறி வுக்கறி வாயுவந்
தறிவித் தாலறி சிற்றறி வாச்சுடர்
சொச்ச வத்துவை நீங்கலின் னீர்மையுந்
துகடு றந்தவொன் றென்றுகொள் செம்மலே. 112

இந்த ஞாயமிவ் வாறிருக் கப்பசு
வேறு வோன்பதி நூலினர் சாகையைப்
பந்த நூல்பசு நூல்கன்ம நூலெனப்
பன்ன லும்மறை யோர்பதி நூலினை
அந்த மாகிய மோகன மென்னலு
மவ்வி ரண்டினும் பூருவ பக்கமாய்
வந்த வென்பர்கண் ணாளர் சடந்தமும்
வழுவொ ழிந்தவொன் றென்றுகொண் மைந்தனே. 113

இந்தச் சீவன் கெடாவந்தத் தேவனே
ரேறுஞ் சேவடி யெய்துதன் முத்தியென்
றுன்றன் முன்னுவல் வார்க்கினி யவ்வடி
யோத ருஞ்சிவ னைப்பிரி யாதவா
நந்த மாமரு ளென்றறி வாளர்நூ
னவிலு மாதலி னாலதை யெய்தினால்
அந்தச் சின்மய பூரண வத்துவை
யடைந்த தன்மையு மாமென் றதிர்ப்பையே. 114

**ஆ**த்து மாக்கள் பரத்தொடு கூடியோ
ரழுங்க லின்றுள வென்னி லகண்டமில்
கேத்தி ரம்பல வங்குள வோவெனுங்
கேள்வி நூறக் கிளக்குவ லென்னெனில்
ஊத்தை யார்மட் கடங்களின் காலெலா
மோர்விண் ணெய்திடல் போலொரு பேதமின்
றேத்து மைந்தொழி லின்றி யகண்டமா
மின்ப மேநுகர்ந் துய்வதஃ தாமரோ. 115

பதிபசுபாச யதார்த்தவிளக்கப்படலம்
முற்றிற்று.

# துறவறவிளக்கப் படலம்.

## 1. சார்பறுத்தல்.

*எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.*

**எ**ன்றுகுரு சொற்றமொழி முற்றுநனி கேட்டோ
னெம்மிறைவ வம்முடிவை யெய்துநெறி யாது
நன்றருளல் வேண்டுமென நல்லடி பணிந்தான்
ஞானபர னவ்வமைய மோமனை நினைந்தே
ஒன்றறிவு மைந்தவெளி யென்றவொரு பற்று
முள்ளெனுமொர் பற்றுமற நின்றிடிலென் னாணை
சென்றுவர லற்றநிலை சேர்வையிது தானே
திவ்யசுக ஞானிக ளடைந்தநெறி மன்னோ. 1

**சொ**ற்றவெளி யுள்ளது பிதாமனைவி மக்கள்
சொத்துட லகத்துளது பற்றுபுல னைந்தோ
டுற்றகர ணங்களென வுள்குதி யிவற்றை
யோட்டிடல் புறத்துறவு ளுட்டுறவெ னாநூல்
கற்றவர் நொடிப்பர்முறை யேவிடுந ருய்வர்
கந்தனை வழங்கிறை கலானிழ றுறந்தே
நற்றவர் களுக்கருள வந்தநடை யாலே
ஞாலமுளர் தள்ளவொரு ஞாயமு மெழாதே. 2

உட்டுறவு கூடிடில் வெளித்துறவ தேன்வே
ரொன்றுகளை யிற்றளிர் தளிர்ப்பதிலை யென்னின்
முட்டுதைய நின்றசெடி மூலம தகைக்க
முன்னர்வெளி யுள்ளதழை வத்தனையு மெற்றல்
பெட்டின்முறை கண்ணசன காதியரை மானப்
பெட்புடைய முப்புரையு மற்றுவரு நல்லார்க்
கொட்டுமது மற்றவர்க ளுக்குவெளி வீக்க
மொருவினல துட்டுறவு வாய்த்திடுவ தின்றால். 3

அட்டாவ தானம துளுற்றுந ருறழ்ந்தே
யவ்விருமை யும்புரியொ ணாதுகொ லெனிற்கேள்
ஒட்டாதவ் வட்டாவ தானம்வெளி வேலை
யொன்றாக நின்றே யுளுற்றவிய லுஞ்சூர்
விட்டேகு மாறுற லிரண்டென் பவற்றுள்
வெளியொன்று முள்ளொன்று மென்றிடலி னென்றோர்
கெட்டாலு மேதுறவு கீழன்று வேழங்
கெம்பீர மதமுற்ற பண்பென்ன வாமால். 4

இல்லறத்து ஞானம திரும்பின்மணி யாமவ்
வில்லொழித்த ஞானமது பொன்னின்மணி யாமிந்
நல்லறத்தை நாடுநர்க ணில்வருத்து செல்ல
னண்ணுவதில் வண்பரம விண்கதி விழாவுக்
கல்லலற்ற வீதுரிய காப்பெனொரு கட்டா
மாக்கையுள தேலிதுந லச்சனன மாகும்
வல்லரக்க ருந்துறந்து நன்னரடை வாரேன்
மாணுறு கதிக்கிது வலாதுபுக லேதே. 5

ஏர்க்கரம் வளார்வசி பரித்தவர்கள் கொல்லா
ரென்பதிலை யன்னண மிழுக்குவிட யந்தான்
பார்ப்புல மருந்துநரை நீத்தவ ரெனார்காண்
பண்புடைய தக்கவர் பராபரவின் பத்தைத்
தீர்க்கமொடு சேர்தறனி யாகுதுற வாலே
செப்புமதை விட்டவர்கள் பற்றொழிய மாட்டா
தூர்க்குருவி போற்பெணி னுடம்புவெறி கொண்டே
யூழூ ழெனச்சொலி யுழன்றுதிரி வாரால். 6

*கலிவிருத்தம்.*

**வீ**ணான விடயத்தை யும்பந்த மேவா
மாணாரு மமுதத்தை யுங்கருது மாந்தர்
நாணாதன் வெயிலுக்கு மிருளுக்கு நசைசெய்
கோணான புல்லுணர்வு கொண்டவரை யொப்பார். 7

**பொ**ல்லாத கழுதுள்ள தெனுமிற் புலத்தை
அல்லான பின்னெவரு மடையார்க ளதுபோற்
கொல்லாது கொல்லும் பிறப்பைக் குறிப்பார்
எல்லாரு மதன்மூல விழிவிற்கு ணுழையார். 8

**ஈ**ன்றாரை விடலாவ தோவென்னி லீன்றாள்
நான்றா னெனச்சொல்ல நடுவேது முண்டோ
சான்றான வருண்மெய்த்த தாய்தந்தை யாகும்
ஆன்றோ ரடைந்தபய னத்தனையு மோர்தி. 9

**ம**னைமக்க ளென்செய்வர் துறவுக்கு வந்தால்
எனையொப்ப வவண்யாரு மிலையென்னி லெம்மான்
தனைவிட்ட வறிவீனர் தமைமெச் சகந்தை
யினையொக்கு மதுதீர்வை யிலையே குழந்தாய். 10

**பு**த்தான நரகேக வேவந்த புத்ரர்
செத்தார்கள் கிரியைபல செய்வார்க ளென்னிற்
கத்தாவை யடையாத கன்மபல மெல்லாம்
வித்தார வார்வீசு வெண்டிரையை யொக்கும். 11

**பி**திர்பூசை யிலதேல்வெல் பிதிர்சாப மெய்தும்
அதினாலொர் சன்யாச மாகா தெனிற்கேள்
அதியோக சிவஞானி யைத்தென் புலத்தார்
பதியாக நினைவார்கள் பணிதேவர் பணிவார். 12

**ச**ரியைக்கு ணின்றே சதாமுத்தி பெறுவேன்
குருசொற்ற வணமென்று கூறத் துணிந்தாற்
புரிவுற்ற வதனாலொர் புலராத மோக்கம்
வருகைக்கு வழியின்று சாலோகம் வருமால். 13

**கி**ரியைக்கு ணின்றே கெடாமுத்தி பெறுவேன்
விரகற்ற துறவெற்கு வெகுதூர மென்னிற்
பரிவுற்ற வதனாலொர் பவமற்ற மோக்கம்
வருகைக்கு வழியின்று சாமீபம் வருமால். 14

**யோ**குக்கு ணின்றேமெய் யோர்முத்தி பெறுவேன்
தேகத்தை யழியாது செய்தென்பை யேனீ
பாகிக்க விடனற்ற பரமுத்தி யதனால்
ஏகப்ப தவையின்று சாரூப மேய்வை. 15

**சா**ரூப மேஞான சாயுச்ய மென்னிற்
சீராய கிரியையினர் செப்பார்கொ லதுபோற்
பேராயி ரப்பரமர் பேசாது பேசித்
தாராத பொருடந்த தன்மைதனை முன்னாய். 16

**பொ**ய்யாத வறிவொன்றை யேயோர்தல் பொருளென்
றையான னற்கினிய வறுமா முகத்தே
மெய்யா யுரைத்தவகிர் மேலென்னின் மந்தஞ்
செய்யோக மெவ்வாறு திணிமுத்தி நல்கும். 17

*அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.*

**மூ**ச்சடக்கும் யோகதனா லுடலூக்க மாய்நெடுநாண் முடிவின் றெங்கும்
ஆச்சரியஞ் சொலவுயினுஞ் சடமதனா லொருகாலத் தழியும் பின்னும்
பூச்சனனம் வருமிஙனம் புசுண்டர்கதை புகலவெனிற் போக்கு மீட்சிப்
பேச்சும்வரு மவர்நிலைமை வேறெனவும் வாசிட்டம் பேசு மன்றே. 18

**கு**ம்பகத்தி னின்றறிய பரவெளியைக் காண்பலெனக் கூறு வாயேற்
றம்பதியி னிறுவியுணர் தற்போத மங்கில்லை சகல மாய
கம்பிதமின் றஙனந்தப் பரவெளியைக் காணறிவு காண மாட்டா
தம்பரிச தாய்நின்றங் கறிவலெனிற் றற்போத மடங்கா தந்தோ. 19

**அ**ப்போதந் தனையடக்க வுன்னாலே யாகாநல் லருளைச் சாரின்
எப்போது மடங்கியறி வேயுறுவா யதனான்மெய் யிறையைக் காண்பாய்
துப்பேறக் குறங்குகுத்தி யுடன்மறந்த தாய்நினையிற் றுயில்வா ராபோல்
ஒப்பாத வளியோகி லறிவான வானந்த வுறக்க மின்றே. 20

**அ**ணிமாதி யட்டசித்தி யதிலுளவென் றுயர்த்துவையே லவற்றான் மோகம்
பணியாதோ ருருமறைத்தோ ருருக்காட்ட லாதார பதுமந் தோறும்
மணியரவு போலேறி யொன்றிழிய வொன்றடைதன் மாயை யாக்கை
நணுகனன வாதியுறல் காண்டலா லெக்காலு நலனா காதே. 21

**க**ருவிகளை நேதிசெய்து திருவருளாற் றனையறியுங் கருத்தை நீத்தக்
கருவிகளிற் பிராணனையு மனத்தினையுங் கனவாதை புரிந்து மேலே
மருவுபிர மத்தொளையி னிறுத்தியதின் மறையிலறி வாக வென்றும்
நிருமலசம் பூரணவெள் ளிடையாக நிறுவொரு சமாதி யாமோ. 22

**க**ரிசுள்ள சடத்தையுறிற் சடமயமன் றருண்மயமாக் காண்ப துண்டோ
புரிதிறவத் துயர்க்கரும யோகதனாற் பொலிசடமாம் விந்து நாத
தரிசனமன் றதிகமிலை யவைசுத்த மாயைவயிற் சனித்த வாகும்
பெரியபொரு ளவையென்று பேசிடிற்சித் தாந்தங்கள் பிழையென் னாவோ. 23

**தி**க்கோடந் தரமுழுது மறையவிழி மூடாது திரையிட் டென்னாந்
தக்காரொத் துறுபோத மொடுக்காது வாயுவினைத் தடைசெய் மார்க்கம்
எக்காலு மொவ்வாதந் நிலைவிட்ட பின்சகல மெழவே செய்து
முக்காடிட் டுறங்கலெனக் கருவியுளே மறைத்து முற்போன் மூடா நிற்கும். 24

**க**ண்ணிமையா நாட்டமுறல் கருத்தையொரு தானத்திற் கருத வைத்துப்
பண்ணன்முத லத்தனையு மனமிறவா நனவாமுற் பகர்போ தந்தான்
எண்ணமதை யொடுக்கிடவு மதையெண்ண மொடுக்கிடவு மியைவ தின்றால்
விண்ணெனவே யொன்றோடுந் தாக்கற்று விகற்பொருவ நிற்கி லாகும். 25

**இ**ன்னணநிற் பதுதானே யெழின்ஞான சிவயோக மென்பார் நீத்தோர்
பன்னெடுநா ளிருக்குதுமென் றடயோகப் படுகுழியுட் படுத்த தற்காத்
தின்னுமருந் துண்டுழல்வ தெல்லாம்வீ ணிச்சைநடை சிவஞா னிக்கெந்
நன்னயமு மெண்சித்தி முத்திகளு முளவருளா னனிதேர் வாயே. 26

**த**ற்போத மிரியாதே லுட்டுறவு சார்வதில்லை சாரா யோகி
பொற்பாய துறவியல்ல னீயந்த யோகமதைப் பொருந்திப் பின்னர்
நற்பாதை யடைகுவலென் றதிர்ப்பையே லபக்குவர்க ணாடு வானஞ்
சிற்பரமன் விதித்தசோ பானமது வதினிற்கிற் றேற லெந்நாள். 27

இச்சனனம் போய்மீண்டு வருசனனந் தனின்ஞான மெய்தி யிச்சூழ்
இச்சையிற நிற்பலெனி னிம்மதியன் றுறுங்கொல்லோ வெளியோ யிஞ்ஞான்
றச்சமற நில்லாது போவையெனின் விரைந்தோடு மாற்றி லோர்கால்
வெச்செனவே தவறிவிழு வோன்சுழலு மாறுடலை மேவி மாய்வாய். 28

*எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்*

**அ**ரியவிவ் வூக மானுட யாக்கை
யழியுமுன் றுறவற மடைவேன்
விரிமய னுகரிப் பருவம தொழிந்தாம்
விருத்தமுற் றிடுபொழு தென்னின்
நரியுவர் வறளுங் கானறு மீனை
நசையற வருந்துவ லென்னாத்
திரைகட லோரங் காப்பதொவ் விடுமித்
தீழ்ப்புடை மதியையும் விடுதி. 29

**ம**டமுடைப் பாலை தனிலறி வின்மை
மருவிடுங் காளையிற் கடனோர்
தடநெடுங் கண்ணார் மயல்வெறி யலைக்குஞ்
சரைதனிற் றாங்கிய குடும்ப
விடயவன் காப்பான் மெலிவுறு மிவற்றுண்
மிழற்றிய பின்னிரண் டனையுந்
திடமனத் தவர்நீத் திறையடி நாடுந்
திறனுள தகையினிச் சேராய். 30

**இ**ன்றுளர் நாளை யிருப்பரென் றுள்கற்
கெனதுணி வுளதெஃது மயக்கம்
என்றறி முனையுவ் வாலுள வாணா
ளிறைவனைக் கருதலின் றொழியிற்
பின்றவ நோற்க வருவதுண் டோவிப்
பிழைநினை யேகுறு காதின்
றென்றடை யிருப்பி னுந்துற வோம்பி
யிருநயத் திருந்துயர் வாயே. 31

**சொ**னவணங் குடும்ப மொழித்திவண் டானே
சுகதவ வேடமே பூண்டு
கனவெழில் குலவ மடாலய மமைத்தக்
கருணையை நாடுவ லென்னின்
மனையறந் துறவு மிலாவிடை யாகி
வருந்துவை விடயமும் வாட்டும்
முனைநலர் செய்தா ரென்னினன் னோரு
முடிவினி னிவிர்த்தியை நயந்தார். 32

**க**ரும்பினைத் தேனைக் கண்டினை யிமுதைக்
கனியினை யமிழ்தினைப் பழித்த
அரும்பரை போக மருந்தியச் சிவத்தை
யடைவது பெரியபெ றென்னா
இருந்துற வுறுவர் நுண்டெளி வுடையா
ரேனையர் தீழ்ப்புடை மலத்தை
மருந்தென வயிலு மெறுழியைப் போல
மாயையின் போகமே துய்ப்பார். 33

**ம**டமது வும்பற் றெனவுனி யேயென்
மனைசுதர் தமரையுந் துறப்பின்
இடம்பொரு ளேவற் கெதுபுரி வேனீ
யிசையெனி லிருமகி யுண்டு
படர்புரி வடியா ருளரிவைக் கெல்லாம்
பாரமார்த் திகவரு ளுண்டு
மடமக ளுதரத் துனைத்திதி புரிந்த
மகிமையை மறந்துமற் றறையேல். 34

**து**றவறத் தானோர் திருவருண் ஞானத்
துலக்கமற் றிருக்கவுங் கண்டேன்
அறுதியிட் டெனையத் துறவற மடையென்
றருளினென் னாகுமென் பாயேற்
செறியுமுட் செடியைக் களைந்துழி யதன்வேர்
தேர்ந்தரி யாததைக் கடுப்பப்
பொறியகல் விரத்தி யடைந்துமுட் டுறவு
பொருந்தலில் குறைவின ரவரே. 35

**வா**சனை நறும்பூப் பணியலங் காரம்
வனப்புறு தழுவணைப் படுக்கை
போசனப் பிரீதி யறுசுவை வேட்கை
புலையுண விலகரி யடைக்காய்
பேசிடு குறிசோ திடமருத் துவம்வீண்
பேச்சதி சயம்பெரு நகைப்பின்
னோசையென் பவற்றை விரும்பினுட் டுறவாங்
கோங்குவ தின்றென வுணர்தி. 36

**சீ**டர்க ளீட்டந் தேசமொ டமையந்
திகைமதம் வருணநொ னாமை
ஏடணை யைம்பா தகமக வற்ற
மெதுவுமி லாநிவிர்த் தியினின்
றாடர னடியா ரயருப சார
மனைத்தையு மீசுரார்ப் பணஞ்செய்
தீடறு கைகாட் டாங்குறிப் பதிலே
யிருப்பது துறவிக ணிலையால். 37

**பா**ரமார்த் திகத்தே வொன்றையே யுளத்திற்
பதித்துயுந் துறவியை யோம்பு
சீரிய சமுசா ரியும்பொறி யடையத்
திருவருள் கூட்டிடுங் கள்ளூன்
ஆரமு தெனவுண் போரருங் கலைசித்
தடைந்தவ ரென்னினு மவரை
வாரவு வந்தார் பெறுநல னென்னே
மதியில ராத்திகைப் பாரே. 38

## 2. வக்கிரநிருவிகற்பவசன கண்டனம்.

**ப**ந்தியந் தீர்ந்து சுகமடைந் ததற்பின்
பாகலுண் டிடிலெனை யென்று
குத்திரம் பேசு கபடசன் னாசக்
குணுங்குக ணாப்பறை யடங்கச்

சித்திர மாய்நான் மிழற்றுவ லீங்கே
சிறுகறு நிருவிகற் பந்தான்
ஒத்துறின் மண்கூ ழினும்வெறுப் புவப்பின்
றுண்பதற் குடன்படல் வேண்டும். 39

**ஊ**ணுடை யல்லால் வேறெஃது மேற்கா
வுபேட்சையி னுட்டெளி வோடு
நாணுயிர்ச் செயலே விடுத்தவன் செயலி
னயவுப சாந்தியை யெய்தி
ஆணவ நீலங் கடிந்தருண் மயமா
யருந்துவ வருந்திநின் றிடுதல்
மாணவர் கூடுந் திருவருட் டுறவு
மற்றவை கிடைநசை மயக்கே. 40

## 3. மெய்த்துறவில், மூலமலநிவிர்த்தியிலார் பெறும் பலம்.

**எ**வ்வறங் களுக்கும் வியனற மாக
வியம்பிடு துறவறங் குறுகி
வவ்வுல மரன்மா சொன்றுற வேகன்
மட்சயம் வந்துளார் களுமுண்
டவ்வியல் புடையா ரருங்கதி யடைதற்
கருகரன் றாயினுங் கடையிற்
செவ்வைவிஞ் ஞான கலப்பிராத் தியினைச்
சேருவ ரவலமெய் தாரே. 41

## 4. சாத்திரபடனஞான சரதம்.

***கலிவிருத்தம்.***

**இ**வ்வித மிறைசொல வெழுந்து சீடனுஞ்
செவ்வென வுணர்கலைச் செல்வர் தாமுமிவ்
வுவ்வுறு துறவை யுறாத வுண்மையெற்
கொவ்வுற வறைகென வுரைத்தன் மேயினான். 42

**அ**ன்னவ ரருங்கட வையரும் பாதைசெம்
பொன்னிதி காத்திடு பூதம் போல்வரென்
றுன்னுதி வாயுறழ் வோதி லுள்ளொளி
மின்னுமோ வினையது வேட்கை யார்ப்பரோ. 43

**வே**டம தாலருள் விளங்கு மாயினாப்
பாடம தாலுமே பலிக்கு மென்னலாம்
மூடமி லாயிதன் முடிவைத் தேரெனக்
கேடிலி யாரியன் கிளக்கி னானரோ. 44

## 5. சற்சீடன் வெளிப்பற்றகற்றி வினாதல்.

**க**ட்டுரை யுடையவெங் கருணைப் பண்ணவ
விட்டுள னுரைப்படி வெளிப்பற் றினையினி
உட்டுற வடைகுவ லுன்றண் ணளிகொடு
சிட்டனென் றாளெனச் சீடன் போற்றினான். 45

**போ**ற்றிய பினரவன் போத நூல்பயின்
றேற்றவா றுழலுந ரேது பிறப்பிறப்
பாற்றிடு செயலுமி லமல நாமெனச்
சாற்றிடு நிலைமையெத் தகைமைத் தென்றனன். 46

## 6. கபடஞான கண்டனம்.

**ஏ**சறு மைந்தகே ளிதுவு முன்சொன
ஆசுறு கபடசன் னாச வலகைகள்
பேசிடு கூற்றிவட் பெருக்கிக் கூறுவல்
நீசெவி கொடுவென நிகழ்த்தன் மேயினான். 47

**இ**றப்பொடு பிறப்பிலை யென்பர் கீரிஙன்
மறப்பொடு நினைப்பிலா வத்து வாயொரு
குறிப்பற நிற்கினொவ் வும்பொய் யாயிடின்
அறக்கடை போந்தவ ரறைகொன் சொல்லதாம். 48

**அ**மலம தேற்பசித் தசனந் துவ்வுமோ
திமிரம துட்கருள் சேர்பு நிற்குமோ
எமதுட னொந்ததென் றிரங்கி வாடுமோ
குமரமும் விருத்தமுங் கொண்டு வீயுமோ. 49

**பீ**மணம் போக்கவார் வாங்கிப் பெய்யுமோ
காமநோய் கழிக்கமென் றோள்கள் புல்லுமோ
நாமரூ பங்களை நணுகி நிற்குமோ
ஓமெனி லமலமெங் கொவ்வு மன்மையே. 50

*எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்*

**இ**ந்த வுபாதியெ லாமெமக் கிலையவி
ரிரவியின் சன்னிதி மரைமலர்போல்
எந்த மபேதசன் னிதிமா யாசகி
தற்குள வென்றிறுத் திடுவாரேல்
அந்தவெய் யோனுறழ்ந் தொன்றினுந் தாக்கற
வலங்கிட லவர்மாட் டுளதாயிற்
பந்த வுடம்பினி லேகொள்ளி கொடுசுடிற்
பாதை யுறாநிலை வேண்டுமரோ. 51

**கொ**ள்ளிகொ டேசுடு காற்றுயர் கூர்வது
குற்சித பாச னகோசரமாம்
ஒள்ளிய பிரமமெ னாமல்ல மென்னுரை
யோதுவ ரென்னினவ் வுயிராக
உள்ளவ ரல்லதப் பிரமம தாகா
ருண்டெனின் வெள்ளறி வாளருமே
எள்ளுவ ரிம்மதி யகந்தைய தாமங
னெண்ணுறு சண்டனு நகைத்திடுமால். 52

**இ**ம்முறை நொடிக்குநர் மரிக்கினம் மறல்விளித்
திரும்பொரு ளாமுமைத் தண்டமிடேம்
மம்மரி லுமக்கொ ரரந்தையு மின்றுமுன்
வாய்மை யிலாதது நாமெனவே

விம்மிய வகந்தைபொய் சொனவுயிர்க் கேயிவண்
வெய்துற னல்குது மென்றிடுகால்
நம்முரை வழிநமை வருத்துமிப் படரிலை
நமக்கெனப் புலம்பலு மவர்க்கழகே. 53

ஒப்புறு தத்வ விசார மிலாதவ
ரோதிய வணமிவ னுவல்வாரேற்
செப்பிய வகந்தைபொய் யுடைமைகொண் டந்தகன்
றீர்வையை யடைகுவ ருணர்ந்தார்தாம்
எப்படி நரகடை வாரடை யாரென
வியம்பிடு வாரெனிற் சொனவணமே
துப்பொடு தத்வ விசார மடைந்தருட்
டூவெளி கண்டவர் துனியிலரே. 54

அந்த விசாரநல் லரம்பையை யுரித்தத
னகத்தெழு தண்டினைக் கண்டிடல்போற்
பந்த நளிமுழுதுங் கழற்றியுண் ணிற்குமொர்
பரம்பொரு ளினையறிந் துய்ம்மினெனா
அந்த மறையறையு மனுபவ மிலரிதை
யடைவொடு சொல்லல் விசாரமெனின்
எந்த விதமமையுஞ் சருக்கரை யென்றசொல்
லினிப்பதின் றாகலின் வெறுங்கூற்றே. 55

தரவுகொச்சகக்கலிப்பா.

கொள்ளிகொடு சுடுவதெது
கொள்ளிச்சூ டேற்பதெது
கொள்ளியென விருந்ததெது
கூறரிய வதுவென்னிற்
கள்ளமிலா வத்துவுக்குக்
கண்டமின்மை சொலற்கொவ்வுங்
கள்ளவுயிர்க் கோதலொரு
காலுமமை யாதஙனே. 56

**பொ**ன்றானே பணியாக
விருப்பதென்று புகறலுண்டேற்
குன்றாத வப்பணிதான்
குகைவாயிட் டுருக்காமற்
பொன்றானே யாகுங்கொல்
புகல்பணிதிப் பெயர்போங்கொல்
நன்றாநா முருக்கிவிட்டோ
மெனுநினைவா னகைபோங்கொல். 57

**ப**ணிதியென்ப தேயில்லை
பசும்பொன்னே யிருப்பதெனிற்
றுணிவுநவி லிக்கதையுந்
தோன்றிடவோ ரிடனின்றால்
கணிதமிலா வம்மௌனக்
கடைகாணில் விகாரமுண்டோ
தணிவுடைமை தான்காணி
லசத்தியத்தி லசத்தியமே. 58

**அ**லல்கடிவோய் பொன்னலக்குந்
தீதினுக்கு மாமந்நேர்
மலம்விரவு தற்போத
மாய்ந்திடுவா னத்துவிதஞ்
சொலுமறையா கமமுடிவு
துலக்கமுள ஞானிகட்கு
நலனையுமஞ் ஞானிகட்கு
நடலையையு நல்கிடுமே. 59

**மு**தனூல்கண் முடிவுணரார்
தத்தநினைப் பின்படிபன்
மதமாக விரித்திடவம்
மானூல்க ளிருந்தமைபோற்

சதமான வறிவிலிக
டந்தசைக்காக் கிக்கெடற்குந்
நதமான வனுபூதி
ஞானிகள்வாக் கிருந்தனவே. 60

**இ**துபுரைய வெல்லாநீ
யாம்பிரம மெனச்சூர
பதுமனுக்கு வெள்ளிசொலப்
பவமறங்க ளெண்ணானாய்ச்
சதமகனா தியர்க்கிடர்தான்
றந்தவனற் றிருவிழந்த
விதமிவரு மகந்தைசொலி
வேட்கைநெறித் திரிந்தவிவார். 61

**அ**ச்சூர பதுமன்றொல்
லமரரிரும் பகைமைபொறா
தச்சோக வத்துவிதந்
தனையகந்தை வழிக்காக்கிப்
பொச்சாப்பிற் பொறிதுறந்து
போனதுபோ லிவர்பிறர்செய்
அச்சுறுத்தல் கண்டார்த்தவ்
வத்துவிதஞ் சொலியவிவார். 62

***வஞ்சி விருத்தம்.***

**இ**வ்வ கந்தையி லேபிரான்
அவ்வி யத்த மடைந்துசூர்
வவ்வு தேகி வயங்கலாற்
றெவ்வர் நாத்திகஞ் சேருமால். 63

**நா**ஞ்சொன் ஞான நிரந்தரற்
காஞ்சொ லன்றெனி லன்றெனா
ஏன்சொ லானொழிக் கானெனின்
நான்சொன் ஞாயமெய்ந் நாட்டரோ. 64

**ம**ன்ற லாற்று மணாளனை
அன்றி வேறணைந் தங்குருந்
தொன்றை யீனுவ தும்பிரான்
றன்றொ ழிற்றிறந் தானரோ. 65

**அ**த்தி றத்தையங் கீகரித்
தொத்துக் கொள்ளினிங் கோதலும்
ஒத்துக் கொள்ளுமிவ் வுண்மையிற்
கத்தன் சம்மதங் காண்பிரால். 66

**வி**ரும்பி நீரயர் வெவ்வினைப்
பெரும்பல் காழ்தழை பெற்றமேற்
றரும்ப லன்றரத் தாணுவாம்
அரும்பி ரான்புரி வானரோ. 67

*கலி விருத்தம்.*

**எ**ன்றோதுதி யினுமன்னவ ரியல்பாவன வறைவேன்
ஒன்றேயெனு முடிபானதை யுணராமுர ணாலே
நன்றாயசு கருமந்தனை நணுகாவிதி கூறிப்
பொன்றாவிழை வாலேகறை போகாவினை புரிவார். 68

**ஈ**யுஞ்செய் றனிலேயிவ ரிருசெங்கையு மிலராய்
மாயந்தர மேற்றுண்புழி மழுராமனை யீன்றான்
ஓயும்படி செய்தாரிறை போலுங்கர முளராய்
மேயன்சொன வில்லந்துற வில்லாததுள் விழுவார். 69

**க**ரவொண்மதி மகனேயிவர் களையும்புலை மலமூத்
திரமுண்பவர் தமையுந்திமிர் சீவக்கொலை ஞரையும்
உரனின்றிழி பாசங்களை யுனிவாழுநர் தமையும்
பரதந்திர மனுவிற்கெடு பதரேயென மதியே. 70

**அ**ருளுண்டெனி னருளாளரை யொத்தேயொரு புதுமை
புரிகென்றிடி னதுசித்தென வெள்ளித்திரி புவனம்
தரவந்தபி னினியென்செய வென்னுஞ்சக சாலத்
திருடன்றனை மதியாதுயர் தெளிவேறிய சுதனே. 71

**ஏ**றும்வெறி வடியுண்டவ ரெவணேகினு மவர்வாய்
நாறுந்திற மொளியாதது போலொண்டிரு ஞானப்
பேறுண்டென றோன்றுங்குக பெருமானடி யார்கண்
கூறுந்திற னறிவோயவர் கூற்றுக்கரி தெவனே. 72

**அ**யலார்புரி யஞரே துமெய் யருளாளரை யணுகா
துயர்வாரென நாவுக்கர சுடைமான்மிய சரிதம்
வெயில்போலுள கோரக்கர்கை வீசேதியின் வெட்டாற்
றுயரேதுமு றாவல்லமர் தூநீர்மையு முளதே. 73

## 7. உட்டுறவின் *மானவு.

*வெண்டளையான்வந்த தரவுகொச்சகக்கலிப்பா.*

**மா**சிகந்த பேரறிவான் மல்குமருட் பானுவெனுந்
தேசிகன்பொய் மெய்யிரண்டுந் தேரவிவ்வாறோ திடலும்
பாசமக லுட்டுறவிற் பண்ணுபதி நிட்டைநிசம்
பேசியருள் கென்னுமகன் பெற்றியுணர்ந் தோதுமிறை. 74

**தே**கத்தை யுள்ளபடி தேர்ந்துநீங் கிற்புறம்ப
தாகச்சைம் பூதத்தின் காரியமோ ரையைந்தும்
மோகப்பொய் யேடணையோர் மூன்றுநிமிர் நாடிபத்தும்
ஏகக்கண் டேகொளலா மென்புரிவுக் காமதலாய். 75

**கா**துமுத லிந்தியமோ ரைந்தனையுங் கண்டேகின்
ஓதைமுத லைந்துஞ்செய் யிந்திரிய மோரைந்தும்
பூதமுமல் வாக்காதி யோரைந்தும் பொன்றுமன
மாதிநான் காய்ந்தகலின் வாக்கென்னு நான்குமறும். 76

**மு**க்குணங்க டேர்ந்தகலின் மூலச்சு பாவம்போம்
அக்கணமி தாகிதகன் மஞ்சீவி யாததனாற்
பொக்கமெனப் போநியதி காலமிவை போயபின்னர்ப்
பக்குவவான் மாநுகராப் பண்பணைந்து நிற்குமன்றே. 77

* மானவு = தெளிவு ; "தெருளு மானவு முணர்வுந் தேறலுந் — தேற்ற முந் துணிவுந் தெளிவின் றிறத்த." என்பது **பிங்கலநிகண்டு.**

**அ**ச்சமய மிச்சைஞா னங்கிரியை யாடாவே
மிச்சையெனப் போயிடுங்க லாதிமே லேயவைதூண்
டுச்சிதங்கொள் சுத்ததத்வ மோரைந்து நீங்குமங்ஙன்
நிச்சலன மின்றசைபி ராணனொன்று நின்றிடுமால். 78

**அ**வ்வாயுத் தன்னையுள்ள வாறறிந்து நீங்கிடின்மற்
றெவ்வாயு வுந்துஞ்சு மேங்கசபை நாதமும்போம்
அவ்வாயு வைய்யறிந்த சித்தேதா னச்சித்திற்
கிவ்வாறு தான்காட்டி நின்றதரு ளென்றறியே. 79

**நீ**யறியு மவ்வருளி னீநிற்கி னவ்வாயுப்
போயடையும் போதமலம் பொய்த்திடும்பின் போதைநனி
மேயநலின் பேறுகர்ந்து வீடுபெத்தத் தும்விலகா
ஞேயசிவத் தோடணவி நிற்றலுயர் முத்தியரோ. 80

## 8. நிமலஞானநிட்டானுபவ நியதி.

***கலிநிலைத்துறை.***

**கா**ட்டு மவ்வரு டன்னைநீ நோக்கினுங் காணும்
வீட்டு வத்துவை நாமென வுள்ளினும் வேறா
நாட்டி முன்னினு மிரண்டறு மைக்கிய நணுகா
தீட்ட மாந்திரி புடிகெடுத் துண்மையை யெய்தாய். 81

**த**ன்னைத் தானறி யாப்பதங் கேவல சகலந்
துன்னல் போற்சிவ தசையினு முண்டவை சொல்லிற்
றன்னைத் தானறிந் திட்டபின் றோன்றருட் காட்சி
தன்னை யேமுத்திச் சகலமென் பாரருட் சான்றார். 82

**அ**ந்த மாசக லங்கழ றலுமங்ஙன் றோன்றும்
நிந்தை தீர்பரை யோகினைக் கேவல நிலையென்
றிந்து ஞானிகண் மிழற்றுவ ரிவ்விரண் டையுநீத்
தந்த மாஞ்சுகா தீதசுத் தமுறலே யைக்கம். 83

**இ**னைய வாறரு டன்னைமுன் னிட்டுற லின்றுன்
மனதி னாலறி வேனெனி னம்மன மறதி
நினைவு மாமது கண்டதை நினைவுறு மதனாற்
கனவி னுங்கணு றாச்சிவங் கருதவொண் ணாதால். 84

**அ**ற்ப மாமுயிர்ப் போதமு மதிலெழு மனமும்
ஒற்க மானபின் பெழும்பர வுணர்வதை யுணரும்
ஒற்க மாகவென் றொடுக்கிட வுன்னிலுன் னிழலைப்
பொற்கை யான்மணல் போட்டு மறைப்பது பொருவும். 85

**க**ண்ணைப் போலுள நீசிவ மாம்பிறை காணத்
திண்ணப் பேரருள் விரலைமுன் னாக்கொடு தெரிசி
எண்ணெய்த் தாரையொத் தேய்ந்திடு மவ்வரு ளுன்னுள்
விண்ணைப் போனிலை கொண்டுள புறஞ்செல வேண்டா. 86

*அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.*

**நி**கழத்து மாறுயர் தத்துவ நேதி செய்துன துணர்வினைச்
செகுத்தி டாது செகுக்குமோர் திறத்தி னின்றிட லப்பெரும்
பகத்த ருள்வச மாவதாம் படரு மந்தர விருளிலாழ்ந்
தகத்தை நீங்கிடு நிலைமையஃ தாவ தன்றென வோர்வையே. 87

**உ**ணர்வி றந்தது முத்தியென் றோதின் மூர்ச்சை யுறக்கமும்
உணர்வின் மாகதி யாகலா மூக மற்றுள பாறையொத்
துணர்வி றப்பது முத்தியென் றுரைசெய் வாதம தாகுமீ
துணர்வி வேகிகள் கொண்டபே ருணர்வ தாதலு மெங்ஙனம். 88

**ந**னவும் பள்ளியு நண்ணுறா நாப்ப ணாவது முள்ளதோ
எனவி னாவிடி லரிசியு மேற வெந்தழி கூழுமன்
றனம்வி ளங்குதல் போலவே யமல நிட்டை யலங்குமீ
தெனது நானெனல் வெந்துசித் தேறு வாரக முண்டரோ. 89

**அ**க்க நோக்குளர் பானனா வறிதி கண்படை கொண்டுளார்
பக்க னித்திரை பாரிரு பண்பு நந்திய நாப்பணைத்
தொக்க கத்தில் விழாதவா தூய விண்ணென வேநிறீஇ
எக்க ணுங்கொள வுள்ளதா யிலகி னாருழி யறியரோ. 90

**ப**ந்த மாகிய தசையிலே பரத்தையேமறந் துகத்திலே
சொந்த மாக்கொடு நிற்றல்போற் சுத்த மாமுயிர் வீட்டினும்
நிந்தை சாலுக நினைவுதா னீங்கி மேலருள் வசத்திலே
சந்த தம்வதிந் தீட்டலே சச்சி தானந்த வாழ்க்கையே. 91

**பா**ர்த்த யாவையு மேபரா பரமெ னும்படி தோன்றிடும்
பார்த்த தன்னிச மதுவலாற் பரமெ னச்சொல வாயிலை
பார்த்து நீயது சேரெனாப் பரம சற்குரு சொலமகன்
பார்த்து றற்கிய லாமணோர் பண்ண லும்பக ரென்றனன். 92

## 9. உபாயநிட்டை விவரம்.

*அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்; சந்தம்வேறு.*

**மு**ற்றுணர்வை நாடுமத லாய்வலிய கட்டுமல மூல வுடலைப்
பற்றியுள தன்னையு முகத்தினையும் வேறெனுமொர் பண்பி னொருவி
நற்றலைமை யுள்ளவது வென்றுணர் விசாரமங ணண்ணு றின்மனம்
அற்றநிலை கூடுமத னாலரிய நிட்டையுறு மற்ற மிலையே. 93

**த**ன்செயல்வி டுத்தொரு சிவன்செயலி னிற்பினுமெய் சாரு மதுதான்
புன்செயல்வி டாதநசை யிற்பகிர்மு கத்திலலை புந்தி யைமறித்
தின்சிவமு ணெஞ்சுழை யிருப்பதென வந்தர்முக மெண்ணெய் நடைபோல்
வன்செயல்பி றங்கநிலை நிற்பினு மனோலயசன் மார்க்க முறுமே. 94

**ஈ**தனைய போத நுவ னூல்களுயர் கேள்வியினு மென்று மனதைக்
கோதுகெட வைத்தொரு குகேசனுடை நாமமது கொண்டு ளிடமே
போதொடுசெ பிக்கினுமொ ரைந்தனையு மோதினும்வெல் போத மொருகாற்
சாதலுறு மேனமறு மாசறுசன் மார்க்கநிலை தான மையுமே. 95

**கா**மியமி லாதுகுரு தேவடிய ரென்னுமெழில் காணு முருவைச்
சாமியெனு நிட்கள பராபர மெனப்படர்பு சந்த தமுநல்
நேமமொடு பூசனை புரிந்திடி னடங்குமன நேர்மை குறுகும்
நாமிதை யுணர்ந்தபடி சொல்லின மெனப்பதி நவின்ற னனரோ. 96

## 10. சற்சீடன் சுவானுபூதியடைதல்

*அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்; சந்தம் வேறு.*

**இ**ம்மொழி யெலாமா ணாக்க னிருசெவிப் புழையுள் வாங்கி
அம்மநான் பிழைத்தே னிந்த வகன்மயல் வாரி நீந்திச்
செம்மைசேர் பொருளைக் கண்டேன் றிருவரு ளாக்கம் பெற்றேன்
மம்மரி லாவிக் கோமான் மாணருட் டகவா லென்றான். 97

**வ**லிதிலே ணகியைக் காந்தம் வலிக்குமா றெனைக்கிஞ் சித்தும்
விலகொணா வணஞ்செய் தோதி மிகைச்சமு சார பந்த
வலையெலாந் தடிந்து காத்த மாணருட் கென்கைம் மாறென்
றிலகருட் குரவன் றாள்க ளிறைஞ்சினன் சீடன் மாதோ. 98

**ஆ**ரியன் சீடன் றன்னை யகங்களி கூர நோக்கிச்
சீரிய வாசி கூறிச் சிவத்தவஞ் செய்த பின்னர்
நீரமர் சலச பன்ன நீரென விரண்டு பேரும்
பூரண நிலையி லென்றும் பொருந்தியுய்ந் தார்கண் மாதோ. 99

## வாழ்த்து.

**வி**ழுமிய பொருளாய் நாளு மிளிர்குகக் கடவுள் வாழ்க
குழுமிய தொழும்பர் வாழ்க குருவுடன் சீடர் வாழ்க
தொழுகுலத் தவர்கள் வாழ்க துகளறு தவங்கள் வாழ்க
வழுவறு மறையு மாக மமுஞ்சொன மு டிவு வாழ்க. 100

***கட்டளைக்கலித்துறை.***

**அ**சனக் குழிசியு மாடகப் பேழையு மேயணங்கென்
விசனத் தலைபவர்க் காணையைக் கூறுமிம் மேன்முறையும்
நிசநட் புடனிதைக் கேட்பவ ரோது நிபுணர்களும்
வசனித்து ளோரும் வரைந்திட்ட வன்பரும் வாழியவே. 101

**சி**ந்தையு ணின்று குகேச்சுர நாமந் திகழவுள்ள
எந்தை யருள்கொடு செய்தவிந் நூன்முடி விற்குக்கலி
ஐந்து சகத்திரந் தன்னி லிரண்டக லாயனத்தின்
வந்த விசய தசமியுந் தாரையும் வாழியவே. 102

(முடிவிற்கு வந்த கலி ஐந்து சகத்திரந்தன்னி லிரண்டகல்
ஆயனத்தின் என வியையும். ஆயனம் = ஆண்டு)

ஸுப்ரஹ்மண்யோம், ஸுப்ரஹ்மண்யோம், ஸுப்ரஹ்மண்யோம்.

***துறவறவிளக்கப்படல முற்றிற்று.***

ஆகப் பாயிரமுட்படச் செய்யுள் - 230.

***மூன்றாவது மண்டலத்துள் இரண்டாவது பகுதி***
***பரிபூரணானந்தபோதம் முற்றிற்று.***

குமரகுருபரன் றிருவடி வாழ்க.

திருச்சிற்றம்பலம்.

# குறிப்புகள்

உ

சிவமயம்.

ஓம் குஹப்ரஹ்மணேநம:

அத்தியாச்சிரம சுத்தாத்துவைத

வைதிக சைவசித்தாந்த ஞானபானு

**குமாரசுவாமி யென்னும்**

**பாம்பன் ஸ்ரீமத் - குமரகுருதாச சுவாமிகள்**

அருளிச்செய்த

# தகராலயரகசியம்.

**மூன்றாவது மண்டலம்**

மூன்றாவது பகுதி

# தகராலயரகசியப்பகுப்பு.


| | பகுப்பு. | | | பக்கம் |
|---|---|---|---|---|
| 1. | பாயிரம் | ... | ... | 141 |
| 2. | முதலாங்காண்டம் | ... | ... | 143 |
| 3. | இரண்டாங்காண்டம் | ... | ... | 152 |


## முதலாங்காண்டம்


| | | | | |
|---|---|---|---|---|
| 1. | நூல்வரலாற்றியல். 1 | ... | ... | 143 |
| 2. | பிண்ட தகரவித்தையியல். 2 | ... | ... | 144 |
| 3. | அண்டதகரவித்தையியல்.3 | ... | ... | 148 |


## இரண்டாங்காண்டம்


| | | | | |
|---|---|---|---|---|
| 4. | ஐயமறுத்தருளியல். 1 | ... | ... | 152 |
| 5. | தோத்திரவியல். 2 | ... | ... | 166 |
| 6. | முடிபியல். 3 | ... | ... | 167 |

## தகராலயரகசியச்

# செய்யுள் முதற் குறிப்பகராதி.


| பாட்டு | பக்கம் |
|---|---|
| **அ** | |
| அகமானதை | 142 |
| அக்காரிய | 159 |
| அக்குகனன் | 161 |
| அங்கிங்கென | 149 |
| அச்சிவ | 148 |
| அச்சுக | 152 |
| அஞ்சாகு | 149 |
| அண்டமன் | 151 |
| அத்துவாவெனு | 162 |
| அந்தஞான | 145 |
| அந்தவாரிய | 157 |
| அந்தவி | 152 |
| அபரஞான | 158 |
| அம்மனை | 147 |
| அருமறை | 168 |
| அருவமொரு | 142 |
| அவ்வம்போரு | 145 |
| அளப்பிலய | 148 |
| அற்றமில் | 146 |
| அன்புமீக் | 143 |
| **ஆ** | |
| ஆகம்வாக்கு | 163 |
| ஆசிலாச்சிவ | 157 |
| ஆதியாமு | 161 |
| ஆவரண | 147 |
| ஆனுடலி | 148 |
| **இ** | |
| இச்சவை | 150 |
| இட்டியனந்த | 151 |
| இதயபங்கய | 146 |
| இதுபொன் | 160 |
| இந்தலிங்கம | 161 |
| இந்நேர்மையி | 150 |
| இயல்பார்நடன் | 149 |
| இருநில | 165 |
| இருளின் | 156 |
| இனமும் | 156 |
| இனவாருண் | 167 |
| இன்னவா | 162 |
| **உ** | |
| உட்டுறவு | 152 |
| உயிரொடு | 167 |
| உருவந்தெரி | 155 |
| **எ** | |
| எனலும் | 159 |
| என்றறிஞனாங் | 161 |
| என்றறிஞனோ | 152 |
| என்றுதேசிக | 157 |
| என்றுமில | 147 |
| **ஏ** | |
| ஏமநாயக | 141 |
| **ஒ** | |
| ஒல்லைப்பசு | 157 |
| **ஓ** | |
| ஓலவாரண | 144 |
| **க** | |
| கண்ணானதி | 150 |
| கரிசறு | 151 |
| களவெனு | 160 |
| **கா** | |
| காமம் | 160 |
| காமியார்த்த | 157 |
| **கு** | |
| குலமுநாமமும் | 146 |
| குவ்வெனுங் | 162 |
| **கொ** | |
| கொலையென் | 159 |
| **ச** | |
| சரியைக் | 158 |
| சருவபூரண | 163 |
| சலனப்படு | 154 |
| **சி** | |
| சிட்டிதிதி | 147 |
| சிட்டியாதி | 164 |
| சிதமாகிய | 149 |
| சித்தெனும் | 145 |
| சிற்பர | 153 |
| **சீ** | |
| சீர்சிறந்தள | 143 |
| **சு** | |
| சுத்தப்பிரம | 154 |
| சுவ்வெனும் | 161 |
| **சூ** | |
| சூரசமாரா | 166 |
| **சே** | |
| சேலன | 166 |
| **சொ** | |
| சொலிய | 165 |
| சொற்றதல | 153 |
| சொற்றவைந்து | 160 |
| **த** | |
| தரிசித்திட | 148 |
| தள்ளற்பாலது | 141 |
| **தா** | |
| தாசமார்க்க | 158 |
| தாண்டவனைக் | 150 |
| **தி** | |
| திரிகுண | 165 |
| **தூ** | |
| தூயநனீரிடைத் | 151 |
| **தே** | |
| தேவர்காதை | 142 |
| தேனினு | 167 |
| **தை** | |
| தையலர் | 168 |
| **ந** | |
| நறாவென்னுங் | 160 |
| நறியபூ | 164 |
| நன்றென | 166 |

| பாட்டு | பக்கம் |
|---|---|
| **நா** | |
| நாதநிலை | 167 |
| **நி** | |
| நிருத்தனை | 150 |
| **ப** | |
| பசுவை | 164 |
| **பா** | |
| பாதகமொ | 152 |
| **பி** | |
| பிண்டமாமுரு | 144 |
| பிரமமென்னு | 144 |
| பிரமம்பரி | 149 |
| **பீ** | |
| பீடார்நால் | 166 |
| **பூ** | |
| பூரணகுகேச | 148 |
| பூரணசுக | 162 |
| பூருநடு | 153 |
| பூவலஞ்செய் | 151 |
| பூவார்செஞ் | 831 |
| பூவுதக | 147 |
| **பொ** | |
| பொருளுள | 162 |
| பொன்னவை | 150 |
| **போ** | |
| போகபூமிக | 158 |
| போதப்பொறி | 154 |
| போதமல | 153 |
| **ம** | |
| மனதிற்கரியது | 155 |
| மனமேசனன | 156 |
| **மா** | |
| மாபல | 166 |
| **மு** | |
| முனமேசொன | 149 |
| **மூ** | |
| மூக்குநுதி | 153 |
| மூடமலங் | 167 |
| மூர்த்தியாதி | 158 |
| மூவகை | 163 |
| **மெ** | |
| மெய்யை | 151 |
| **மே** | |
| மேலாயுள | 149 |
| **மொ** | |
| மொழிந்தமூ | 158 |
| **யா** | |
| யாதொரு | 163 |
| **வி** | |
| விடயக்கறை | 155 |
| விறலோங்கு | 142 |

**ஓம்**

**குமாரகுருப்யோநம :**

# நூலாசிரியர துரைப்பாயிரம்.

*"**போ**னகான் முயலே பெரிதெனப் பேசிப்*
*புலம்புதல் போலமுன் னாளில்*
*மானமின் றெழுதி வைத்தபுத் தகக்கோ*
*மான்களே பெரியரென் றுயர்த்தி*
*ஏனைவல் லவரை யிகழுமிந் நாளி*
*லேழையே னறைகடொன் னூலில்*
*தேனென வினிக்கு முடிபென வுனக்கே*
*தெரியுமெஞ் சிதம்பர சிவமே."*


(திருப்பா 10.6)

**த**கராலயரகசியமென்னும் பெயரிய நூலின் மூலத்திற்கு உரையாயுள்ள **சதானந்தசாகரத்தே** தொடக்கந்தோறும் பெரிய எழுத்து இடம்பெற்ற பொழிப்புரையின் அடியிலுள்ள விசேடவுரை நூலாசிரிய ராய எம்மாலேயே செய்யப்பட்டது. தன்னூலுக்குத் தகுமுரை செய்தோன் என்னும் பொருளினே "தகுமுரைகாரன்" என வரூஉம் விதியினைத் தழுவுதற்கும், நவில்வோர்க்கினிமை பயக்குமாறு மூலத்தை விதந்து கிளக்க வேண்டுழி வேண்டுழி அவ்வாறு கிளத்தற்குமே அவ்வுரை, பிறரொருவராற் செய்யப் பட்டதுபோல நிகழ்த்தப்படுவதாயிற்று. தன்னைத்தானே பிறன்போற் கூறிக்கோட லென்னு மொரு நியாயமும் -

"அருநெறியமறைவல்லமுனியகன்பொய்கையலர்மேய
பெருநெறியபிரமாபுரமேவியபெம்மானிவன் றன்னை
ஒருநெறியமனம்வைத்து**ணர்ஞானசம்பந்தன்னுரைசெய்த**
திருநெறியதமிழ்வல்லவர்தொல்வினைதீர்தலெளி தாமே."


எனவரூஉந் **திருஞானசம்பந்தப்பெருமானது** திருவாக்காகிய திருமறைநெறித்தாம். திவாகரர் முதலாயினாரும் இந்நியாயங் கொண்டுளாரே. மூலஞ் செய்தோனே யுரையுஞ் செய்தல் வடநூலார் வழக்காம். இதனை, "வடநூலார் தாமே பதிகமு முரையுஞ்செய்வார்" எனப் **பிரயோகவிவேக நூலுடையார்** கூறுதல்கொண்டு மறியலாம். (பதிகம் = பாயிரம்.)

பாயிரத்து 2-ன் உரையிற் பணித்தவாறு வித்தை பதினெட்டி லும் வேதமே சிறப்புடைப் பிரமாணமென்றல் பரதகண்டத்துப் பண்டை நூலறிவுடையார் யாவரு மொப்புமொரு முடிபினை யேன்று கொள்ளும் எம்மாலும் அச்சிறப்புடைப் பிரமாணங்களே இந்நூலுரை களிற் கொன்னும் பிரமாணிக்கப்பட்டன. ஞானமென்பது தகராகாச ஆன்ம அறிவாயிருத்தலின், அதன்வழியே அனுபவப் பிரமஞான மடையத்தக்கதென்னும் உண்மையை உபாசனை முதலிய பலவுபாயங்களாலும் விதிக்கும் (வேதத்தின் ஞானகாண்டமாகிய) **நூற்றெட்டுபநிடதங்களும்** பிரமஞானிகளுடைய திருவாக்குகட் கியைய மனோலயமொன்றே அங்ஙன் வேண்டற்பாலதென் றொருங்குறநின்று சாதிக்கு மவைகளினும் பெருநூல் பிறிதொன்றின் றென்பதூஉம் அறிவிலக்கண முணர்ந்தாரெல்லா மறியக்கிடப்ப தொன்றாம். சைவருள், இப் பிரமாண மொய்ம்பு புலங்கொளவறியாச் சிலர் பலர், வேதம் யஞ்ஞவாயிலாக உயிர்வதைசெய்து ஊனுங் கள்ளு முண்ணுமா றோதும்; ஆகமம் அவ்வாறோதாதென்றும், வேதம் பலதேவ வழிபாடுகளைப் பகரும்; ஆகமம் ஒருதேவழிபாடாய சிவாராதனையையே யுரைக்குமென்றும் பிரசங்கிக்கும்வழி வேதத்தை யிழித்துக்கூறுமொரு கொள்கையினையே தொழிலாக வுடையாரென்பது இத் திராவிடதேயத்தார் பலருமறிந்ததேயாம். இன்னோர், காமிகாகமம் -



ஸாமுத்ரம் ப்ருங்கராஜாய
மத்ஸ்யம்மத்ஸ்யோதநம் ம்ருகே, தத்யாத்)

"**பி**ருங்கராஜனுக்குச் சமுத்திரத்து மீனையும், மிருகர்க்கு மீனோடுகூடிய அன்னத்தையுஞ் சமர்ப்பிக்கவேண்டும்."



ருத்ராயமாம்ஸமந்நம்ஸ்யாத்...........................
ஆபாயமத்ஸ்யம்மாம்ஸஞ்ச சாபவத்ஸாயதாபவேத் |)

"**உ**ருத்திரனுக்கு மாமிசமும் அன்னமுமாம். ஆபருக்கு மீனையும், ஆபவற்சருக்கு மாமிசத்தையுஞ் சமர்ப்பிக்கவேண்டும்"

(𑌘𑍃𑌤𑌂 𑌮𑌾𑌂𑌸𑌂 𑌚𑌰𑌕𑍍𑌤𑍍𑌯𑍈𑌶𑍍𑌚 𑌶𑍂𑌲𑌸𑍍𑌥𑌾𑌯𑍈 𑌶𑌿𑌵𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑌾𑌃 ।

க்ருதம்மாம்ஸஞ்சரக்யைச சூலஸ்தாயைசிவாச்ரிதா : |)

"**சி**வனையடுத்திருப்போர் (= சிவபக்தர்), சூலத்திலுள்ள சரகிக்காக நெய்யையும், மாமிசத்தையுங் கொடுத்தல்வேண்டும்"

(𑌮𑌾𑌂𑌸𑌾𑌨𑍍𑌨𑌂 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌗𑍃𑌹𑍇𑌷𑍁

மாம்ஸாந்நம்ஸ்யாத் க்ருஹேஷு)

"**வீ**டுகளில் மாமிசஅன்னம் ஆம்"

(𑌅𑌷𑍍𑌟𑌾𑌨𑌾𑌂 𑌬𑌾𑌹𑍍𑌯𑌦𑍇𑌵𑌾𑌨𑌾𑌂 𑌮𑌾𑌂𑌸𑌾𑌨𑍍𑌨𑌂 𑌬𑌲𑌿𑌰𑍁𑌚𑍍𑌯𑌤𑍇।

அஷ்டாநாம்பாஹ்யதேவாநாம் மாம்ஸாந்நம்பலிருச்யதே|)

"**பா**கிய தேவதைகளாய எண்மருக்கும் மாமிசஅன்னம் பலியாகப் பகரப்படுகின்றது."

(𑌹𑌵𑌿𑌷𑍍𑌯𑌂 𑌦𑍇𑌵𑌭𑌵𑌨𑍇 𑌮𑌾𑌂𑌸𑌾𑌨𑍍𑌨𑌂 𑌰𑌾𑌜𑌮𑌨𑍍𑌦𑌿𑌰𑍇 ।
𑌮𑌦𑍍𑌯𑌂 𑌶𑍂𑌦𑍍𑌰𑌗𑍃𑌹𑍇 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌂 𑌅𑌨𑍍𑌯𑌤𑍍𑌰 𑌮𑌧𑍁 𑌕𑌲𑍍𑌪𑌯𑍇𑌤𑍍 ॥


ஹவிஷ்யம்தேவபவநே மாம்ஸாந்நம் ராஜமந்திரே|
மத்யம்சூத்ரக்ருஹேப்ரோக்த மந்யத்ரமதுகல்பயேத்||)

"**தே**வக்கிருகத்தில் அவிசும், இராசக்கிருகத்தில் மாமிச அன்னமும், சூத்திரக்கிருகத்திற் கள்ளுங் கொடுக்கும்படி கூறப்பட்டது. ஏனையிடத்திலே தேன்சேர்த்துக் கொள்ளலாம்" என வாஸ்துதேவ பலிபடலத்திலும்,

(𑌲𑌲𑌾𑌟𑌬𑌾𑌹𑍁𑌹𑍃𑌨𑍍𑌨𑌾𑌭𑌿 𑌪𑌞𑍍𑌚𑌸𑌨𑍍𑌧𑌿𑌷𑍁 𑌵𑌾 𑌭𑌵𑍇𑌤𑍍 ।
𑌶𑌿𑌵𑍇𑌶𑌰𑍁𑌦𑍍𑌰𑌕𑍃𑌷𑍍𑌣𑌾𑌤𑍍𑌮𑌭𑍁𑌵𑌾𑌞𑍍𑌚 𑌪𑍍𑌰𑍀𑌤𑌿𑌸𑌿𑌦𑍍𑌧𑌯𑍇 ॥


லலாடபாஹுஹ்ருந்நாபி பஞ்சஸந்திஷுவாபவேத்|
சிவேசருத்ரக்ருஷ்ணாத்ம புவாஞ்சப்ரீதிஸித்தயே ||)

"சிவன், ஈசன், உருத்திரன், கிருட்டிணன், (ஆத்மபுவம் =) பிரமன் என்னும் இன்னோரது பிரீதி சித்திக்கும்பொருட்டு நெற்றி, கைகள், இதயம், நாபி ஆகிய இவ்வைந்து சந்திகளிலும் பஸ்மதாரணஞ் செய்தல்வேண்டும்" என ஸ்நாநவிதிபடலத்திலும்,




கணபம்பாரதீமூர்த்வே நந்திநம்ஜாஹ்நவீயுதம் |
மஹாகாளேநயமுநாம் ஸவ்யேஸவ்யேஸமர்ச்சயேத் ||)

“**மே**லிடத்தே கணபதியையும், சரசுவதியையும்; சானவியோடு கூடிய நந்தியையும், மகாகாளனுடன் யமுனையையும் வலப்பக்கத்தும் இடப்பக்கத்தும் அருச்சித்தல்வேண்டும்”



மண்டலத்ரயமர்க்கேந்து வஹ்நயாக்யம்ஸ்வஸ்வரூபத :|
தளாந் தம்கேசராந் தஞ்ச கர்ணிகாந்தம்ப்ரகல்பயேத் |
ப்ரஹ்மாவிஷ்ணுச்சருத்ரச்ச மண்டலத்ரயதேவதா ||)


“**சூ**ரியன் சந்திரன் அக்கினி யெனப்பட்ட மும்மண்டலங்களை யுஞ் சுவசுவ ரூபத்தோடு இதழீறாகவும், கேசரமீறாகவும், கர்ணிகை யீறாகவும் (ப்ரகல்பயேத் =) தியானித்தல் வேண்டும். பிரமனும், விட்டுணுவும், உருத்திரனும் (அந்த) மும்மண்டல தேவதைகள்”



ப்ரஹ்மாணம் .......... த்யாத்வாபத்ரேஷுவிந்யஸ்ய
ஸர்வகில்பிஷநாசநம்)


“**எ**ல்லாப்பாவங்களையுங் களைபவனாயுள்ள பிரமதேவனைப் பத்திரங்களின் விந்யஸித்துத் தியானிக்கவேண்டும்”

“இந்திரன், அக்கினி, யமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானனென்னுந் திக்குப்பாலகர்களைப் பூஜித்தல்வேண்டும்”




சக்ரபாணிநம், ப்ரஹ்மாணம் ...........................
ஸம்யஜேத்ப்ராஜ்ஞ: ஸ்வஸ்வநாமாதிசாக்ஷரை:)

## நூலாசிரிய துரைப்பாயிரம்.



“**பு**த்தியுடையோன், விட்டுணுவையும் பிரமனையும் அவரவர் பெயர் முதலிய அக்கரங்களாலே (ஸம்யஜேத் =) பூஜித்தல் வேண்டும்”




பூர்வபாகேயஜேத்வஜ்ரம் பீதவர்ணம்ஷடச்ரகம்|
அக்நௌசக்திம்ஸுரக்தாபாம் க்ருஷ்ணந் தண்டந்து தக்ஷிணெ||
நிருதௌநீலகட்கந்து ச்வேதம்பாசந்துவாருணே|
சித்ரத்வஜந் துவாயவ்யாம் ஹேமாபாமுத்தரேகதாம்||)

“**பூ**ர்வதிக்கில் மஞ்சணிறமும் அறுகோணமுமாயுள்ள வச்சிராயு தத்தைப் பூஜித்தல்வேண்டும். அக்கினிதிக்கில் மிக்க செந்நிறச் சத்தியையும், தக்கிணதிக்கிற் கருநிறத் தண்டத்தையும், நிருதிதிக்கிற் கருநிறக் கட்கத்தையும், வருணதிக்கில் வெண்ணிறப்பாசத்தையும், வாயு திக்கிற் சித்திரத்துவசத்தையும், உத்தரதிக்கிற் பொன்னிறக் கதையையும் பூஜித்தல்வேண்டும்.” என அர்ச்சநவிதிபடலத்திலுங் கூறிய முறைமைகளானே ஊனுங் கள்ளு முண்ணுமா றோதலும், பலதேவ வழிபாடுகளை விதித்தலும் ஆகமத்திற்கு முடம்பாடே யென்பதையும், வேதம் ஆகமமென்னும் இவ்விருதிற நூல்களின் கன்மகாண்டங்கள் ஊன்முதலியன வுண்டற்குரிய கன்மங்களையும் கன்மசம்பந்தமான பலதேவவழிபாடுகளையும் விதிக்கினும் ஞான காண்டங்கள் அவ்வாறு விதியாவென்பதையும், நூன் முதலாங் காண்டத்து 39-ன் உரையகத்து விளக்கியபடி யஞ்ஞபதார்த்தங் களுஞ் செயல்களும் ஞானயோக அந்தரியாகத் தமைகின்றன வென்பதையும் இனியேனுமறிந்து வேதநிந்தை புரியாதிருத்தல் நலனாம். என்னை?

“ஒப்பிலி யனாதி முத்த னோதிய வேத மாதிக்
கொப்புயர் வுரைப்பார் நிந்தை யுரைப்பவ ருன்னு வாரும்
வெப்பெரி நிரயந் தன்னுள் வீழ்ந்துவெந் துருகி வீயா
தெப்பொழு தேறு வாமென் றிளைத்திளைத் தேங்கு வாரே.”

“என்றோதுமாற்றானே **சிவதருமோத்தராகமமானது** வேதநிந் தையாளர்க்கு எரிவாய் நரகானுபவம் விதிக்கின்றதாகலின். இங்ஙனம், ஆகமம் பலதேவ

வழிபாடுகள் பகரினும் பரமசிவனையே முதற்கடவுளாகக் கோடல்கூறு மென்பார்க்கு, பிரமம், சிவம், சம்பு, ஈசன், உருத்திரனென்பன முதலிய வாசகங்கட்கு வாச்சியனாயுள்ள பெரிய கடவுளையே சருவதேவர்கட்குந் தலைமைத்தெய்வமாக வேதம் விளம்புமென்பதை,



ப்ரஹ்மவிஷ்ணுருத்ரேந்த்ராஸ்தே ஸம்ப்ரஸூயந்தே
ஸர்வாணிசேந்த்ரியாணி ஸஹபூதைர்நகாரணம்
காரணாநாம்த்யாதாகாரணந்து த்யேயஸ்ஸர்வைச்வர்ய
ஸம்பந்நஸ்ஸர்வேச்வரச்சம்பு ராகாசமத்யே)

**“பி**ரமன், விட்டுணு, உருத்திரன், இந்திரனாகிய இவரெல்லாம் படைக்கப் படுகின்றனர். இந்திரியங்களெல்லாம் பூதங்களோடு பிறப்பிக்கப்படுகின்றன. ஆகலின், அன்னோரும் அவைகளுங் காரண மாதல் இல்லை. தியாதாக்களாய அன்னோராற் றியானிக்கப்படுந் தியேய னுஞ் சருவைசுவரிய சம்பன்னனுஞ் சருவேசுவரனுஞ் சம்புவும் பரமாகாசமத்தியி லிருப்பவனுமான சிவனே காரணன்.” என்று வேத முடிவிலுள்ள **அதர்வசிகோபநிஷதம்** அறைதரு மாற்றங்களிலறிய லாம். பந்தவிடுதலை நிமித்தம் “அன்னியமான யாவையும் விட்டுச் சிவபரம் பொரு ளொன்றே தியானிக்கற்பாற்று” எனவும், “எல்லாத் தருமங்களையும் விட்டுப் பிரமமொன்றனையே சரணமாகவடை” எனவும் பொருள்செய்தற்காஞ் **சுருதிவாக்கியங்களும்** நூன் **முதலாங்காண்டத்து** 4-ன் உரையுழியும், **இரண்டாங்காண்டத்து** 58-ன் உரையுழியும் வந்துள்ளன. இன்னன பிரமாணங்களும் பலப்பலவாமே. சிவனுடைய ஐம்முகங்களுண் மேலான ஈசானமுகத்திற் காமிகாதி ஆகமங்கள் தோன்றின; ஆகலின் அவை மேம்பா டுடையனவென்பது சிவனது திருவுருவம் பலபேத விகாரமுடைத்தெனல் காட்டுமேயன்றி அவிரோதநயங் காட்டாது. (ரௌரவம் ச்ரோத்ரமேவ) “ரௌரவம் ச்ரோத்ரமேவ” எனக் **காமிகாகம** தந்த்ராவதாரபடலஞ் சாற்றுகின்றபடி செவிகளாயுள்ள ரௌரவாகமம் - அச்செவிகட்கு மேனிலைக்களங்களாயுள்ள ஆகமங்கட்குக் கீழ்ப்பட் டிழிவெய்துமாகலின் இவ்வழிபிடித்தும் வேதத்தை யிழித்துக் கூறல் கூடாது. மேலே பிரமாணிக்கப்பட்ட **சிவதருமோத்தராகம** மறிவுறுத்தவாறும், “வாதத்தை விட்டு மதிஞர் வளமுற்ற - வேதத்தை யோதியே

வீடுபெற் றார்களே” எனத் **திருமந்திரந்** தெரித்தவாறும், அன்ன பிறவுங்கருதுக. **அக்காமிகாகம** அக்நிகார்யவிதிபடலம் (ப்ரு ஹூாவிஷ்ணு-ஶ்சுலொகெஸா) - “ப்ரஹ்மாவிஷ்ணுச்சலோகேசா” எனத் தோற்றுவாய்செய்து (வ்யாஸஸம் க்ஷெபகா “வ்யாஸஸம்க்ஷேபகாரிண:” என முடிக்குமிடத்தே “பிரமனும், விட்டுணுவும், உலோகேசர்களும், ஏனைத்தேவர்களாயிருப்போரும், (வ்யாஸ:) வியாசர் போதாயனர் ஆபத்தம்பர் ஆசுவலாயனர் சத்தியாசாட ரெனப்படுவாரும், மற்றையரும் பரமார்த்தமான (வெதாஷு-) வேதங்களையும் ஏனைய சாத்திரங்களையும், புராணத்தையும், மிருதியையும் என்பாற்கேட்டு (அவற்றைச்) சூத்திரங்களால் நியமிக்குநிமித்தம் விரிவு சுருங்கச் செய்தவர்கள்” என்று சிவன் கூறினனெனக் கூறுமாற்றானே வேதமுதலிய சாத்திரங்களுஞ் சிவனுடைய திருவாக்குக்க ளல்லாத இருடிகள் வாக்குக்களேயென்றற் கிடனின்று. உபநிஷத வாக்கியங்களுட் பலவுஞ் சிலவுஞ் சிவபெருமானுடைய திருவாக்குக்களே யென்றற்குரிய வுரைகளும் இந்நூலுரைக்கட் போந்தமையின் அவைகளு மிங்கு நன்கு கருதிக்கொள்ளத் தக்கனவே. வியாசர் முதலிய இருடிகளையும் அவர்களியற்றிய நூல்களையும் பிரதம ஆகமமான **காமிக**மெடுத்துக் கழறியாங்குப் (பௌ ஊ:ரஹ-த-ம்) பௌத்தம் ஆர்ஹதமென்னும் மதங்களையும் அது கழறுகின்றமையால் எல்லா வாகமங்களும் - அவ்விருடிகணூல்களாயுள்ள அனைத்துக்கும், அப்பௌத்த ஆர்ஹத ஆகமங்கட்கும் பின்னர்த் தோன்றியுள்ளன வெனத்துணித லேற்புடைத்தாகின்றது. இது பற்றி இங்கு விரிவாக விசாரிப்பது அனாவசியமாகலின் அதுவிடுத்தாம்.

யாதானுமொரு நூல், முன்னர்த்தோன்றியிருப்பினும், பின்னர்த் தோன்றியிருப்பினும், அஃது ஈசன்வாக்குத் தேவர்வாக்கு முனிவர் வாக்கென்பவற்று ளொன்றாக வெழுதப்பட்டிருப்பினும், எழுதப்படாதிருப்பினும் அதன்கணுள்ளனவெல்லாம் - வஞ்சகமற்ற நடுவு நிலைமையி லொருசிறிதும் வழாநெறியாய்க் காலந்தோறு மேம்பட்டு வந்த நல்லாசாரமான தன்ம கன்மங்களை விதிப்பனவாய் நவைதபு ஞானயோகங்களை அனுபவ வாயிலாக விளக்குவனவா யிருப்பினும், அவற்றுட் சில பல அன்னணமிருப்பினும் அவையற்றை அறிவு படைத்த அனைவருங் கொள்ளுரைகளெனக் கொள்ளலா மென்பதற்கே எமது சிந்தை இனிது விழைகின்றது. என்னை? நோயொழித்தற்குரிய நறுமருந்தை அனுபவவாயிலாக வறிந்து கொண்ட மருத்துவர், அம்மருந்து பலர்க்கும் பயன்படுமா றுரைக்கு முரையினை, இஃது ஈசன்வாக்கன்று, தொன்மையன்று, இப் பரதகண்டவாசிவாக்கன் றெனத் தள்ளிவிடுவார் யாரும் யாண்டுமிராராகலின். இனித்தோன்று நூல்களிலும் அந் நல்லன காணப்படின் அவையற்றைக் கோடலும்,

அல்லன காணப்படின் அவையற்றை நீக்கலும் உயர்நெறி யவாவுநர்க் கெல்லா முடம்பாடேயாம். **சிவப்பிரகாசத்தில்** -

“தொன்மையவா மெனுமெவையு நன்றாகா வின்று
தோன்றியநூ லெனுமெவையுந் தீதாகா.”

எனவருவதும் இவ்வுடம்பா டேற்புடைத்தெனச் சாதிக்க வுளதன்றோ.

இந்நூலுட் கூறப்பட்ட தகரவித்தையினை யாம், பிரப்பை யென்னுமொரு கேத்திரத் தொருசாராகிய காட்டின்கண் அகழப்பட்ட குழிக்கட் பங்குனித்திங்களி லுற்ற ஒரு சனிவாரந் தொடக்கமாக 35-நாள்காறுந் தனிநிட்டை சாதித்திருந்த ஞான்று கௌபீனதாரியாய் வெளிப்பட்ட இறைவன், எமக்கொருமொழியி னுணர்த்தியருளி மறைந்தனனென்பது *எம்முடைய பாடல்களிற் பல செய்யுள்களகத் தும் வந்திருப்பினும் 1101-திருப்பாட்டுக்க ளடங்கியுள்ள **திருப்பா** வென்னு நூலுட் **பராபர**மென்னும் பதிகமாய் -

“பூமிசை யஃறிணை யாதனைப் போற்புரி யாதுயர் நோக்கமுடை
மாமனு வாய்வகுத் துள்ளநற் காத்திரம் வௌவியு மெந்நெறிக்கும்
ஓமெனுஞ் சைவசித் தாந்தசன் மார்க்கமுற் றுன்னினை வேபோந்தும்
ஏமுற லின்றெனி னென்னுறழ் தோஷிமற் றேவர் பராபரமே.

நின்பரி வானுனக் கஞ்சு விவேகமென் னெஞ்சி லமர்ந்தமுதன்
மன்பதை பல்வகை யாக விறைஞ்சுதெய் வங்க ளெலாமுதலாம்
உன்பரி பூரணத் துள்ளவென் றேயுனை யுள்கெளி யேனையிந்நாள்
அன்பொடு நீயளி யாவிடி னார்துணை யாவர் பராபரமே.

பாரி மகாருற வாகர மாதிய பந்தமெல் லாமுயிர்த்துன்
பேரரு ளேதுணை யென்று திரிந்திடு பெற்றி யுளேனையணைத்
தோரரு ணீபுரி கில்லை யெனிற்புரி வோடெ னுளங்கருதி
ஆரரு ணல்குவ ரார்துணை யாகுவ ரைய பராபரமே.

தூங்கி விழித்திட லொத்த வுலப்பொடு தோற்றர வுக்கெளியேன்
நீங்கி நிரந்தர முன்னொடு தோய்ந்துய நித்த முனைக்கருதென்
பாங்குணர் வாரெவர் பண்டை வினைக்கடை பைதலி னின்றுமெனைத்
தாங்குந ராருனை யன்றி யருட்பிர சாத பராபரமே.

ஒன்று மறிந்தில னுக்குமெல் லாமறிந் தோற்கு மனந்தையுழை
நன்றிது தீதிது வென்றுணர் தன்மமெஞ் ஞான்றுமின் றுன்னடியான்
என்றுனு நானிடை யாதலி னுன்னரு ளின்றியெவ் வண்ணமுய்வேன்

* பரிபூரணானந்தபோதத்துப் பிற்படலத்துத் 94-ன் உரை காண்க.

**நூலாசிரிய துரைப்பாயிரம்.**

அன்றறறை தந்தவ ணம்புரி யென்னறி வாய பராபரமே.

நீயெனை யாண்முறை யாயளி காட்டியென் னெஞ்சையு முன்வயமாய்
ஈயவ லித்திது காறு மனேகவெல் லென்னை மறந்ததனால்
தூயவ னலனிவன் றீயவ னென்று துறந்தனை யோவெனவிங்
கேயக நைந்துக லங்குகின் றேன்புக லேது பராபரமே.

இப்படி மற்றுரு வப்பொருள் கட்கெலா மெப்படி யாதரவோ
அப்படி யெப்பொரு ளுக்குநி யாதர வாமதி லின்புதரா
முப்புடி விட்டருள் பெற்றணை வார்க்கெலா முக்கிய வாதரவாய்
எப்பொழு துங்கிளர் நீயெனை நீங்குவ தென்னை பராபரமே.

இத்தரு ணத்தெனை யாண்டருள் செய்கிலை யேன்மன மிக்குலைவாய்
எத்துணை யுஞ்சுக மின்றி யழுங்கிட லெய்துவ தோடெனையே
ஒத்தவ ரும்பினி டும்படி யாமைய வோகை சிறந்தருளாம்
மத்த முறும்படி செய்சிவ சுப்பிர மணிய பராபரமே.

கேட்ட னினைத்த றெளிந்திட லென்பன கீணமின் ஞானமதை
ஈட்டிடு மார்க்கமன் னாகு மலாலுதிப் பென்ப தகற்றிடுமோ
தாட்டிக நிட்டையி னால தகன்றிடல் சத்திய மாதலினால்
வாட்டமி லந்நிலை தன்னில்வை சுப்பிர மணிய பராபரமே.

**நிட்டை நிமித்தம தாகமு னுற்றவென் னீர்மையெல் லாநமுவ**
**நட்ட நடுத்தக ராலய மானதி னாட்ட மிடும்படிநீ**
**இட்ட வணம்பணி நானுய்ய நல்லரு ளென்பதை யீதியருள்**
**வட்டை விளக்கு புகழ்க்கவி நன்னிரு வாண பராபரமே."**

எனவருவது படித்தறிதல் நெறியுடைத்தாகும். யாம், துறவற நிலைபுக்க வாண்டிற் கடுத்துறு மாண்டிற்றானே **ஸ்ரீ சிதம்பர** மஹா க்ஷேத்ர எல்லைப்பாட்டிலுள்ள குயவன்பேட்டையிலே (அளியார்ந்த செல்வச்சிரஞ்சீவி கு.வே. இராஜா முத்துக்கிருஷ்ண நாயுடுவின் நல்லுபசரிப்பினை யேற்றுச்) சில திங்கள்களாக வாசஞ்செய்து வருஞான்று திருவருட் சகாயத்தினைக்கொண்டு யாஞ்செய்த நூல்க ணான்கு. அவை - பரிபூரணானந்தபோதம், **தகராலயரகசியம்,** கந்த ரொலியலந்தாதி, குகப்பிரமவருட்பத்து என்பன. இவற்றுள், தகராலயரகசியமே இந்நூன் மூலமாம். இம்மூல முடிவுக்குக் கலியுகம் (4998) நாலாயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற் றெட்டாம் ஆண்டென்பதற்கு நேராய சாலிவாகனசகாத்தம் 1819-ல், துர்முகிவருடத்து மார்கழித் திங்கள் 17-ல் (30.12.1896) ஏய்ந்த புதவாரமே யெய்திய காலமாம்.

இந்நூலுரைகளாய தமிழில், ஏற்புடைமை கருதி வடமொழி வழக்கிற்கியையவுந் தென்மொழிவழக்கிற் கியையவுஞ் சில வடசொற்கள் தெரிக்கப்பட் டுள.

இம் மெய்ந்நூலைப் பத்தியோடும் படித்துணர்வார்க்கு எம்மை ஆண்டருள் குகப்பிரமம் எல்லாநலனு மீந்தருளுக.

**ஸுப்ரஹ்மண்யோம்.**

இங்ஙனம் :

**குமரகுருதாசசுவாமிகள்;**

பாம்பன்.

புதுப்பாக்கம்,<br>
சென்னை.<br>
16.10.1916

சிவமயம் .
குஹப்ரஹ்மணே நம :

திருச்சிற்றம்பலம் .

# தகராலயரகசியம்.

## பாயிரம்.

முன்னோன்றுதி.

*அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.*

**பூ**வார்செஞ் சென்னியுடைப் புங்கவருந் தாபதரும் புகழ்ந்து போற்றுந்
தேவாகி யடியவருக் கனுதினமு மருள்கூர்ந்து சிறுகொன் றில்லா
மாவாழ்வு நல்குகுகப் பெருமானுக் கொருதுணையா வளர்முன் னோனை
நாவார வேவாழ்த்தி யிந்நூனன் முடிவுறுவா னயந்து கொள்வாம். 1

ஆறுமுகச் சிவபிரான் றுதி.

***கலிவிருத்தம்.***

**ஏ**ம நாயக னேர்மறை நாயகன்
சேம நாயகன் றேவர்க ணாயகன்
ஆமெந் நாயக னாறு முகச்சிவன்
பூம லர்ச்சரண் போற்றிப் பழிச்சுவாம். 2

**த**ள்ளற் பாலது சாதி விகற்பமே
எள்ளற் பால தெய்யாமையர் செய்கையே
உள்ளற் பால துறங்குமொ ரின்புநாங்
கொள்ளற் பாலது கொள்குகன் பாதமே. 3

ஸ்ரீ அருணகிரிநாதசுவாமிகள் துதி.

*அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.*

**அ**ருவமொரு நான்காகி யுருவமொரு நான்காகி யறையி ரண்டும்
மருவியுள வுருவருவ மொன்றாகி முத்திறமும் வழுத்த வொண்ணாப்
பெருவெளிக்கு மப்பாலா யுள்ளபொரு ளீதெனவே பெரிதுஞ் சேயோன்
ஒருவனையே புகழ்ந்தவரு ளருணகிரி சேவடிப்போ துளத்துள் வைப்பாம். 4

நூலின்பெயர்.

*வஞ்சிவிருத்தம்.*

**அ**கமானதை யடுநல வகநபமாம்
பகவானொடு பரம்விரி பகர்வரிதாந்
தகராலய ரகசியந் தனை நுவலீ
துகமீதந்தப் பெயருட னுலவுமரோ. 5

அவையடக்கம்.

*கலிநிலைத்துறை.*

**தே**வர் காதையைப் பாடியத் தேவரைக் கடுப்ப
மேவு வேடமிட் டாடுந ராட்டையும் விரும்பிப்
பூவி னன்கென மதிப்பது போலித னையுமேன்
பாவ லோருமுள் ளுவந்துகொள் வார்பழி பகரார். 6

ஆக்கியோ னாக்குவயம்.

*எண்சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.*

**வி**றலோங்கு மரக்கரிருட் படல மெல்லாம்
வீயவொரு விண்மணியி னுதித்த மாலின்
அறலோங்கு வாரிவளை சேது நாப்ப
ணமரிரா மேசனுறை நகரின் மேல்பால்
மிறலோங்கு நிலவளஞ்சேர் பாம்ப னென்று
விளங்குமொரு பதிவசித்து வெற்றி வேற்கைத்
திறலோனுக் காளடிமைப் பட்ட வன்றாள்
சேர்குமர குருதாசன் றெரித்தான் மன்னோ. 7

**பாயிரமுற்றிற்று.**

உ
குஹப்ரஹ்மணே நம :

திருச்சிற்றம்பலம்.

## முதலாங்காண்டம்.

# *1. நூல் வரலாற்றியல்.*

**மனசனாகிய சீடன் அறிஞனாகிய குருவைத்தரிசித்துத் தகர வித்தையை விளக்கியருள்கவென வேண்டல்.**

*எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.*

**சீ**ர்சி றந்துள விமய வோங்கலின்
றென்பு றத்தமிழ் நாட்டிலுய்
நார்சி றந்துள மனச னென்பவன்
ஞான வாழ்வுறு வான்கலைக்
கீர்சி றந்துள வறிஞ னென்னுமொர்
கேடி றீர்த்தனைக் கண்டையா
ஆர்சி றந்துள தகர வித்தையை
யறைதி யென்றடி பரவினான். 1

**மனசனது வேண்டுகோ ளங்கீகரித்த அறிஞனார், வழிபடு கடவுளை வாழ்த்திக் கூறுவனகூறத் தொடங்கல்.**

**அ**ன்பு மீக்கொளு மனச வன்னண
மறைகு வேமென வறிஞனுந்
தன்க ளிப்புமல் கிறையை நோக்கியென்
சரத மாயவிர் குருபரா
இன்ப மாமழை பொழியும் வானென
வென்னுண் மேவு குகேசுரா
உன்பொ ருட்டிற மோத நல்லரு
ளுதவெ னப்பணிந் தோதுமால். 2

தகரவித்தை யித்தன்மைத்தென்பது.

ஓல வாரண நான்கி னுங்கய
முற்ற சாம முணர்த்துமச்
சீல பூரண தகர வித்தை
தெரிக்கி லண்ட களேபர
மூல காரண மாயி ருக்குமம்
முறைமை தன்னி லிரண்டுமாங்
கோல மாக விளக்கி னன்குறு
குடில மென்பெயர் தோன்றுமே. 3

நூல் வரலாற்றியன் முற்றிற்று.

## 2. பிண்டதகரவித்தையியல்.

இருதய புண்டரீகபுட்பத் துள்ளிடத்தே பராசத்தியை நீங்காப் பரம்பொருள் சூக்குமமாயும், அகண் டாகாசமாயு முளதென்பது.

*எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.*

பிண்ட மாமுரு விற்கு நாநிலை
பேச வுள்ளவு ளிதயமாம்
புண்ட ரீக மலர்க்கு ளேயருள்
புரிப ரைப்பொரு ளாயிறா
அண்ட ருந்தெரி வரிய சூக்கும
மாய கண்ட வியோமமொன்
றுண்ட தைச்சிவம் பிரம மென்றுறழ்
வுடைய பாவல ரறைவரே. 4

தகராலய வெளி, உள் நாம விவரம்.

பிரம மென்னுமொர் சிவமி ருந்தொளி
பெருக லிற்புதை சிவபுரம்
பிரம மாபுர மென்று மாசறு
பேழம் போருக முண்மையால்

நரல லற்றொளிர் புண்ட ரீகபு
ரமென வுஞ்சொன விண்டையைப்
பரவு மப்புர மென்று மோதுவர்
பழியி லாவறி வாளரே. 5

**அ**வ்வம் போருக முண்ணி லாவி
டகண்ட வம்பர ஞானமாத்
தவ்வ லின்றதி நுண்மை மாண்பொடு
தானி ருத்தலி னாலதைச்
செவ்வி தாய சிதம்ப ரம்பர
தேசு றுந்தக ராலயம்
எவ்வ நூறுபொ னம்ப லங்குக
னெந்தை யாடரங் கென்னலாம். 6

**சி**த்தெ னும்பத ஞான மென்று
திராவி டத்தினும் வருதலிற்
சுத்த நித்த சிதம்ப ரஞ்சிவ
சோதி ஞானவிண் ணென்னுநல்
அத்த மேகொளு மாத றொட்டதை
யகல்வு றாநிச மானதே
நித்த லுஞ்சுக நிர்த்த னம்புரி
நிலய மம்பல மாமரோ. 7

பொன்னம்பலமென்னும் பெயர்க் காரணம்.

**அ**ந்த ஞானவி ணருளெ னும்பரை
யான்மண் விண்ணினும் விபுலமாய்
நிந்தை யில்பல வண்ட கோடிக
ணிறுவி வைக்கவொர் துறையதாய்
எந்த மானமு மற்ற பொன்மய
மென்ற சோதி சொரூபமாய்ச்
சந்த தத்தினு முண்மை யாலது
தங்க வம்பல மாகுமே. 8

பரம்பொருட்குக் குகனென்னும் பெயர்
போந்ததற்குக் காரணங் கழறல்.

**இ**தய பங்கய குகர மேகுகை
யென்ப தாரிய பாடையில்
அதனு ளாய சிதம்ப ரத்துளி
யமல ஞானவிண் மெய்யனாச்
சதத முஞ்சுக நடன மேபுரி
தம்பி ரானையொர் குகனெனாக்
கதறு மாமறை யவனை யன்றொரு
கடவு ணாமறி யோமரோ. 9

குகேசனுடைய சொரூபலக்கணம்.

**கு**லமு நாமமுங் குறிகு ணங்களுங்
குறிக்கொ ணாவதி சூக்கமாய்ப்
புலர்தன் மாறுதல் வருத லேகுதல்
புதுமை தொன்மை யிலாததாய்
மலமி லாதந லமல மாயொளி
மயம தாம்வெளி மயமதாய்
இலகு மேசொன மினிய சிற்சுக
மென்று முள்ள குகேசனே. 10

குகேசனாகிய பிரமத்தை, வேதம் வியோமவடி
வென்றதற்குக் காரணங் கழறல்.

***கலிவிருத்தம்.***

**அ**ற்றமில் குகேசுரன் வெளிக்குள்வெளி யாக
நிற்றலின லாரண நிறைந்தபிர மந்தான்
குற்றமில் வியோமவடி வென்றுறுதி கூறு
முற்றினையு நன்மனச முன்னியுண ரிங்கே. 11

சிதாகாசம் சீவனதறிவுக் கறிவென்பதும், அங்கு
நிகழ்கூத்து உயிர்க்கூத் தென்பதும்.

**எ**ன்றுமில கவ்வெளியை யிம்மண்முத லைந்துள்
ஒன்றென வலித்திட வொணாதருள் விணாய்நோ்
இன்றியுணா் விற்குணா்வ தாயொளிா்வ தென்றே
நன்றறிதி யங்குநிகழ் நட்டமுயிா்க் கூத்தே. 12

பஞ்சகிருத்தியக்கூத்து இன்னகாரணம்பற்றி
நிகழ்கின்ற தென்பது.

**சி**ட்டிதிதி நாசமறை வோடருளல் செப்புஞ்
சட்டவினை யைந்துநிகழ் சந்தத வணுத்தன்
கட்டமல முற்றுவகை காணவென வாற்று
நட்டமி லிரக்கமுடை நட்டமது மன்னோ. 13

சத்தாவரண விவரம் முதலியன.

**பூ**வுதக மாரலுயிா் புட்கர வியோமம்
ஓவலின் மகத்துவ மகந்தையெனு மோரேழ்
ஆவரண மெய்ந்நடு வலங்குறழ்வு மன்றிற்
கூவியனன் மாநடை குகேசனிடு வானால். 14

பஞ்சகிருத்தியக்கூத்து இத்தன்மைத் தென்பது.

**அ**ம்மனை யருந்துவது செம்மலுரு வாமா
தம்மனை யனுக்கிரக சத்திகளி கூரச்
செம்மலிடு மாட்டம துயிா்க்கசைவு செய்யும்
அம்முறையி லைந்துதொழி லாயது நிலாவும். 15

சிதம்பரநடனங் காணுங் கண்ணினையும்,
அதிகாரியினையும் விளக்கல்.

**ஆ**வரண மானதிரை யேழைய மகற்றிப்
பாவனமெய்ஞ் ஞானமிகு பாா்வையுடை யாா்கண்
கோவுயா் சிதம்பர குகேசனடை காணுங்
கேவல முளாா்விழி கெழீஇயறி யாவால். 16

**அ**ளப்பிலய னங்களி லயர்ந்தபுணி யத்தால்
விளக்கமிகு சற்பதி விளக்குமொழி யொன்றால்
உளத்தெளி வுதித்தவ ருலப்புறுமுன் ஞானத்
துளக்கமுள ஞானசவை சூழ்ந்துதரி சிப்பார். 17

**ஆ**னுடலி னல்லவ ரருந்தமிழ் திருக்குந்
தானமென மெய்ப்பரதர் சாருள ததிற்சேர்
மானுடரு ளூற்றவுரு மாத்திர முளாரவ்
வானவ னலங்குமணி மன்றுள்வெளி காண்பர். 18

சிதம்பரநடனங் காண்டற்கதிகாரியாவா ருறுபயன்.

**அ**ச்சிவ சபாபதியை யாசினய னத்தான்
மெச்சலொடு கண்டவர் மிழற்றரிய வீட்டை
நிச்சலன மாயடைத னிச்சய மலாலோ
ரெச்சமென வாவதிலை யெந்தவுயி ருக்கும். 19

சிதம்பரநடனங் காண்டற்கதிகாரியல்லாதா ருறுபயன்.

**பூ**ரண குகேசனுறை பொற்பொதியை நோக்கார்
ஆரெனினு மொண்மையரு ளாகுமென வேத்துஞ்
சீரண வரூபமன சீவகதி நண்ணார்
ஆரண வரும்பரம முத்தியையு மண்ணார். 20

பிண்டதகரவித்தையியன் முற்றிற்று.

## *3. அண்டதகரவித்தையியல்.*

அண்ட தகராலய நாமாதி விவரம்.

*அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.*

**த**ரிசித்திட முத்தியெ னும்பொறியார் சவையிப்படி யென்றுமொ ழிந்தவணங்
கரிசற்றிவ ணோர்முறை யீதிறையாங் கடநற்பெயர் கொண்டத கரவித்தை
தெரிமற்றைய வண்டத கரவித்தைத் தெளிவைப்பகர் கின்றன மென்றுரியோன்
பரிவுற்றுள நன்மன சன்முகமாம் பதுமத்தினை நோக்கிமி ழற்றுவனால். 21

**பி**ரமம்பரி பூரண மாதலினாற் பெரிதென்றறை யண்டம தற்குளுமே
கரவம்பர மாயசி தம்பரவான் கரையின்றுள தாகலின் முன்சொனசெம்
புரமன்றுள பேர்களு மிங்ஙனமே புகலண்டம தற்குள வேநல்விராட்
புருடன்றன தாகம தாமதிலே புருடன்பதி நள்ளித யச்சுமமே. 22

**மு**னமேசொன பிண்டமு றைப்படியே மொழியண்ட வபேதசி தம்பரவான்
எனுமோர்சவை தன்னினு மேழ்திரையோ டியைபான வெலாமுள பேருருவோன்
தனதேரக வாரிச மவ்விணைனாச் சாற்றுந்தெளி ருக்கர விந்தநபத்
தினையேயது வென்னுமி ரண்டதர்வந் திகழும்பொனி ரண்மய கோசமெனும். 23

**அ**ங்கிங்கென லென்பதி லாதுநிரம் பத்தற்றொழு வார்தரி சித்துயுமா
றெங்கும்புகழ் ஞானவி னோதவனை யின்பங்கொள வாமம ருங்கினிலே
துங்கங்கொளு ரூபம ரூபமுமே சுடருந்திரு மேனிய னாயொளியோன்
தங்குந்திற மென்னவொ ளம்பலமுட் டானாடுமெ லாவுயி ருங்கொளுளோன். 24

நடேசன் றிறம்.

**இ**யல்பார்நடன் ராசச முற்றயனா யேணாரக முண்ணிமிர் தாமதமோ
டுயர்வாகிய சத்துவ மும்வெளியே யோவாதுறு சீதர னாயகமுண்
ணயமாகிய சத்துவ மும்வெளியே ஞாட்பாரொரு தாமத முங்கிளர்மாச்
செயலாரர னாயொரு மூவினையுஞ் செய்தேயவர் கட்குமெ லேயுளனே. 25

**மே**லாயுள மெய்யரு ளேவடிவாய் மீயாந்தக ராலய மன்றிடைமா
மாலாய்விளை யாணவ மாமலமாம் வாளேந்திய வோர்குறண் மேனியன்வெந்
பாலேவல வங்கிரி யூன்றியிடப் பாதாம்புய மானதை யேதூக்கிக்
கோலாகல மாயதி தாண்டவஞ்செய் கோனாம்பர னேகுக னென்பவனே. 26

சிதம்பரத்தை, இன்னாரிவ்வழியாய்த் தரிசிப்பரென்பது.

**அ**ஞ்சாகுகி ருத்திய மங்குளதா லதிரேகவ னாரத வாதிசதா
எஞ்சாதும றைத்துள தாதலினா லெச்சம்புரி தானசு சீலமுடன்
துஞ்சாவிர தாதியி ழைக்குநருந் தூய்தாயகு கேசனை யேயறியார்
முஞ்சாதமு துக்குறை வுள்ளவரே மூடாவிழி யாலறி வாரறியே. 27

**சி**தமாகிய வண்டநன் மன்றமதைத் தெளிவானனி கண்ணுற வெம்பெருமான்
இதமாகிய பேரரு ளாலுடலா மிதயாம்பர நோக்கம தாமுகுரம்
அதையேபெற வேண்டுமெ னுந்துணிபே யறையுந்திரு வாரண மாகமமாய்ந்
துதியா நிலை வேறிலை வேறிலையென் றொளியாது மொழிந்தது மன்னணமே. 28

**க**ண்ணானதி லாதவன் வெள்ளிடையுங் காணானது மானவி ராட்டுருவோன்
தண்ணாரித யாம்பர மன்றமதைத் தம்வாளித யாம்பர மன்றினையே
உண்ணாடிந லோர்விழி தானடையா ரோர்போ துமெய் யாயறி யாரறிவாம்
விண்ணாயக மாயவி ரெம்பெருமான் வீயாவரு ளாலதை யேயறியே. 29

அண்டபிண்டவடக்க இரகசியமும், அதனையறிய
நடேசனைத் தொழு வென்பதும்.

**இ**ந்நேர்மையி லண்டமு ளேசிறுபிண் டமுமேயத னுள்ளிறை யண்டமுமே
எந்நாளிலு முண்டிவி ராசியநே ரேநீயறி தற்குந டேசனையென்
மன்னாகிரு பாகர வானவனே மாதேவகு கேசப ராபரனே
தன்னேரிலி யேயடி யார்நலனே தாதாவடி யென்றுதொ ழாய்தினமே. 30

பொன்னம்பலத்தைப் புகலாநூலும், விழையா
ஏனையவு மின்னனவா மென்பது.

*கலிவிருத்தம்.*

**இ**ச்சவை யைக்குறி யாநூ லிழைநூல்
மச்சுறு தண்டா மரைநூன் மயிர்நூல்
நச்சுளர் நச்சி டுலண்டா டிடுநூல்
பச்சிலை வாழைப் பலநூ லெனவாம். 31

**பொ**ன்னவை யைப்புக ழாவாய் புழுவே
துன்னுடல் சூர்விடு வாய்செய் திடாவாய்
இந்நில மீதிழி வாய்வா யினராற்
பன்னுபல் வாய்பழி வாய்வா யெனவாம். 32

**நி**ருத்தனை யுள்கிந னீர்சொரி யாக்கண்
குருட்டழி கண்ணிழி கண்கோ மடியார்
கருக்கணி டுக்கண் ணுகிர்க்கண் மயிர்க்கண்
பெருக்குநுங் கின்கண் பீலியின் கண்ணே. 33

**தா**ண்டவ னைக்கரு தாதுள சிந்தை
மாண்டலின் மாடடை மந்தை யகந்தை
காண்டக மாவில் கறங்கு பிறந்தை
நீண்டுள நிந்தை யரந்தை யுடந்தை. 34

நடேசனைநீத்த நோன்பு முதலியன
பயன்படா வென்பது.

**அ**ண்டமன் றாய வரும்பொதி யுள்ளும்
பிண்டமன் றாய பெரும்பொதி யுள்ளுங்
கண்டவர் துன்பு கடிந்துய வாடுஞ்
சண்டனை நீத்த தவங்களு முளவோ. 35

**க**ரிசறு நூற்பல கற்கினு மதுபோற்
றிரிபற வோது திடம்பெறி னுங்கார்
சொரியுறை போற்கவி சொல்லினும் வெந்நோய்
அரிகுக னைப்பர வாவிடி லவமே. 36

**பூ**வலஞ் செய்யினும் பூவுத கங்கொண்
டாவலொ டர்ச்சனை செய்யினு மசபா
மாவல மந்திர மோதினு மன்றார்
தேவனை யினிதெண் ணாமை யசிவமே. 37

**தூ**யந னீரிடைத் தோயினு மங்ஙன்
ஆயபஃ றான மளிப்பினு மார்வம்
ஏயுயர் விரத மிழைப்பினு ஞானா
காயம தைக்குறு காவிடில் வறிதே. 38

**இ**ட்டி யனந்த மிழைக்கினும் பள்ளி
கட்டினு மானமில் கற்பம துண்டோர்
திட்டம தாய்மெய் திருத்தினு மோவா
நட்டனை யுள்ளு ணணாவிடில் வறிதே. 39

**மெ**ய்யை வெறுத்து விரத்தி யடைந்து
கையை விரித்தொரு கட்டைய தென்ன
மையடர் கானி லிருப்பினு மன்றா
டையனை நாடி யுனாவிடி லவமே. 40

அண்டதகரவித்தையியன் முற்றிற்று.

முதலாங்காண்ட முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

# இரண்டாங்காண்டம்.

## *1. ஐயமறுத்தருளியல்.*

இனி, அந் நடேசனை யறிந்துய்யுமாற்றினை விளக்கி யருள்கவென வேண்டிநிற்குஞ் சீடனுக்கு ஆசிரியர் கூறுவன கூறியருளல்.

### *அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.*

**எ**ன்றறிஞ ேனாதிடலு மேதமினன் மானச னிதந்தர வுணர்ந்துசிதவான்
மன்றுழி நடம்புரி பரம்பொரு ளிருந்தநிலை மாண்பினை யுணர்த்தினமைபோல்
நன்றறி விலங்குமரு ளாளவினி யந்நய நடேசனை யறிந்துமதிபோற்
சென்றுவரல் போயொளிரொ முங்கையருள் கென்னவது செப்புமிறை செப்பமுடனால். 1

**பா**தகமொ ரைந்தையு நணாதுகுரு லிங்கமதி பத்தருயர் பத்திதனினின்
றேதமுடை யேடணையொர் மூன்றொடுற வென்பது மிகழ்ந்துபுற நீப்பையணவி
வாதைதரு நானெனும்வ லாணவமு மென்னதெனு மாயையொடு நானலனெனும்
பேதமுள கன்மமு மடங்கவுனு முட்டுறவு பேணிலருண் மன்றடையலாம். 2

**உ**ட்டுறவு தத்துவ நிரோதனம தாமங னொடுங்குநிரை கண்டமனமாஞ்
சட்டகமில் வாயுவொ டதற்குரிய போதவெளி தன்னையு மடக்குமுறைகேள்
நட்டவிறை நட்டமிடு மத்தியி னிணைப்பையொரு நாட்டமுடன் வைக்கிலவணின்
றெட்டியெழு மானச மெழாதயரு மவ்வுழி யிருக்குமன விண்டெரியுமால். 3

**அ**ந்தவி ணடங்கவெளி னன்கருளி னீமறை யளாவஙன முன்னையறிவாய்
இந்தவித மென்றுனறி விற்கறிவு செய்தவரு ளென்பதையு மங்கணறிவாய்
சிந்தைசிறி துஞ்சலன மற்றபரை யோகது திளைக்குமதன் மேலதுவிடுத்
துந்துநிலை யிற்கருணை யானபரை போகமஃ தொழிந்திடல் சுகாதீதமே. 4

**அ**ச்சுக வதீத நிலை யானது சிதம்பர சிதாகாச தெய்வமதையே
மச்சறு வியோமமத னிற்பவன மொன்றுவது மானவொரு மையிருமையும்
மிச்சையு முரைக்கவிசை யாவண மளாவிடுதல் வீடென விசைப்பர்முதியோர்
நிச்சயம தாகவிது வேதமுட னாகம நிகழ்த்தமல வத்துவிதமே. 5

### தகராலய தாரணையே சிரேட்டம்.

**மூ**க்கு நுதி நாபிநுதன் மத்திகள முச்சிவிழி மூலநிலை நாட்டிமனசை
ஊக்கமொடு நிற்கவென வோதுமுறை மேலென வுரைப்பினு முனக்கிவணறை
ஆக்கைநடு வாயுள மலர்த்தல சிதாகாச மானவிது முக்கியமெனாத்
தூக்கியறி யோர்மனுட னானென்று சுட்டுநிலை தொக்கிலதை யன்றியிலையால்.6

**சொ**ற்றதல முன்னுமன சிற்கிடன தாயரிய சுத்ததக ராலயமதாய்க்
குற்றமறு சந்திநடை நட்டமலி காளிநடை கோடபு மகாநடையெனும்
வெற்றிநட மூன்றையு மிழைத்தகுக னாடல்புரி மேதையவை யாயிலகலான்
உற்றவொரு நாட்டமிட வத்தல முரித்தென வுரைத்தவுரை கட்டுரையரோ. 7

### புலியூ ரின்னவிட னென்பது.

**பூ**ருநடு வைக்கொடு வரிச்சரணன் வந்தனைசெய் புலியூ ரெனப்படுமொரு
பேருறு சிதம்பரம தென்றுசில ரேடுறுதி பேசுமது பாவனையினாற்
சீருடைய வத்தல மெனப்படுவ தன்றறை சிறந்தமறை சொற்றதிலைநாம்
ஆரமுதன் வைகுமக மேபுலியி னூரென வதிர்க்குமறை சத்தியமரோ. 8

### ஆரணத்தினு மாகமத்தினு முள்ளமுடி பொன்றே யென்பது.

**சி**ற்பர சிதாகாச முத்தியடை மார்க்கமொரு தீர்வையற வேபனுவல்கள்
பற்பல விசைத்திடினு நற்பரன் விதித்தமறை பன்னுவண மாழையதனை
ஒற்கமற நிற்குமொ ரகந்தையினை யாகம முரைத்தபடி போதமதனை
அற்பமு மிலாதற வடக்கன்முடி வென்பதிலொ ரையமிலை யையமிலையே. 9

### போதத்தினதுதயமு மொடுக்கமும் இருதயதாமரை யின்கண் ணென்பதும், அஃதெங்கணு முள்ள சிதாகாச மென்பதும்.

**போ**தமல தாங்கார மென்றதெழ நின்றவொர் புலம்புருட னின்றதலமே
ஆதலி னடங்குமிட னங்ஙன மலாதுபுற னாவதிலை யந்தவிதய
சீதமல ரின்வெளி சிதம்பரம தாயிடை சொலாவண நிறைந்தொளிர்தலால்
யாதொரு தலஞ்சொலினு மங்குமது வாகுமத னாலிதய மேநிலயமே. 10

சிதம்பரத்தையடைவா னுரியவுபாய முணர்த்தல்.

*எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.*

**போ**தப் பொறிவெளி மறையிற் குகனுள
பொதியைத் திரையிடு திரையேழும்
நாதத் துடன்விடு மலகிர்த் தியநட
நணுகா தருணட மதுமேவும்
வாதப் படுபல சமயக் குழுவுளு
மறையா வெறுவெளி பொதுவேபோற்
கோதற் றுளவொரு கனகப் பொதிவெளி
குறுகிற் பெருவெளி மயமேயாம். 11

**சு**த்தப் பிரம புரத்திற் குகனொரு
சொருபா கலமது வுளதாகச்
சித்தத் துழைமு னினைத்துக் குருவுட
றிகழும் படிமதி நனிபாவித்
தத்தற் குரிய வெழுத்தைப் பரவியு
ளலையா வணமனி யதன்மேலந்
நித்தப் பெருவெளி பொற்சிற் பரவொளி
நிகழுந் தரமென வவண்முன்னே. 12

இந்நெறி, விடயப்பிரியர்கட்கமைவ தரி தென்பது.

**ச**லனப் படுநினை வொழிவிற் பரவெளி
தனையுற் றிடுபர நினைவான
துலைவற் றெழுமது தனையிற் றெனவரு
ளுதவித் திறல்கொடு நனிகாணும்
மலமற் றுளவரு ளையுமிற் றெனவுணர்
மருவிப் பெருவெளி தனைமேவுஞ்
சொலுமித் தகைநெறி விடயத் தலைவுறு
துரிசர்க் கமைவது மரிதாமால். 13

இன்னருளை யடைதற் கிருக்கின்ற மனமே சாலு மென்பது.

**ம**னதிற் கரியது பிரமப் பொருளென
மறைகூ றியதுர முளதேனும்
நனவுற் றறிவிழி தனையுற் றறிநிலை
நலனார் தெளிவுள விழியாடி
தனையுற் றறியும தெனநற் றிருவரு
டனையே பெறமன மதுசாலும்
பினையப் பரநினை வதையுற் றருளொடு
பிரிவற் றுளநிலை பெறலாமால். 14

உருவமனம் இனையதற்குரித்து; அருவமனம்
இனையதற்குரித் தென்பது.

**வி**டயக் கறைமன முருவப் பொருளுணர்
விழியைக் கொடுதெரி யுருவாகுங்
கடமுற் றவிர்திரு வுருவைக் கருதுதல்
கடனக் கறைமன முளகாறும்
அடைநற் பரமன மருவப் பொருளுண
ரருளைக் கொடுதெரி யருவாகும்
அடமற் றொளிர்பெரு வெளியைக் கருதுத
லறையப் பரமன வியல்பாமே. 15

மனத்தின் றிறம்.

**உ**ருவந் தெரிமன முருவந் தொழுபல
னுறவே யதுபர மனமாகுங்
கருதிந் தமனசை யலதிந் தமனுல
கதிலே யுரியவ ரெவராவர்
மருளென் றிடுநசை தனினின் றிடிலது
வலியார் பகைதுனி களையீயும்
அருளென் றிடுநசை தனினின் றிடிலது
வழியா நலமுழு வதுமீயும். 16

மனமே சனனமு மனமே மரணமு
மனமே யுலகும லதுமாகு
மனமே யபலமு மனமே சபலமு
மனமே மதியொடு விதியாகு
மனமே சமலமு மனமே நிமலமு
மனமே வளியொடு வெளியாகு
மனமே சிறுமையு மனமே பெருமையு
மனமே யிருமையு மொருமையுமே. 17

**தகராலயத்தில் அந்தர்முகத்தில் உஞற்று தொழில்.**

இருளின் றிறமற வருமந் திரகுரு
வெனுமோர் நிருமல பதிதானே
அருளென் றவுருவ முளவங் குகனென
வனுமா னமதற முனரேநாங்
கருதும் படிசொன நிலையின் புடையவர்
கழலே யனவர தமுநாடுந்
தெருளொன் றினைமுன மடைபின் சொனபடி
திறமா கியநிலை பெறுவாயால். 18

**பகிர்முகத்தினும், அந்தர்முகத்தினும் உஞற்றுதொழில்.**

இனமும் பகிர்முக மதினுந் தெரியுரு
வெதையுங் குருவடி வெனவேநீ
மனனஞ் செயுரிய மனமொன் றியபினர்
மதியின் புலமுறு சடரூப
கனமென் பவைகளை யருவென் றுணர்வுறு
கமனம் பணிநிறை விபுவாய
உனரும் பெருவெளி யிதுவென் றுனியதி
லுனையுங் கரையருண் மயமாவை. 19

இவ்வதி சுலபமான முத்திமார்க்கத்தை மானுடர் பாவத்தான்
விட்டு வேறுமார்க்கத் தலைவா ரென்பது.

**ஒ**ல்லைப் பசுவருள் புல்லற் குறுநெறி
யுகமீ தளவற வுளவேனும்
எல்லைக் கருவிக ளுள்ளுக் குளயர
விதுவே யதிசுல பமதாகுஞ்
சொல்லற் கரியவொர் சொல்லைத் தருமொரு
சுகதே சிககர நெறிகாணிங்
கல்லற் படுபவர் தொல்லைக் கொடுமற
மதனால் வரைகுவ ரலைவாரால். 20

மூர்த்தி, தலம், தீர்த்தமென்னும் மூன்றானும் மோக்கமாமென்ற
தெத்தன்மைத்து? என்ற சீடனை, ஆசிரியர் நோக்கிக் கூறுவன கூறல்.

*கலிநிலைத்துறை.*

**எ**ன்று தேசிக னியம்பலு மேசகன் மனசன்
மன்று ஞானமின் றார்கதி யின்றென வழுத்திற்
சென்று நீர்படிந் தாலயந் தொழுவது சிவமென்
றன்று மாதவ ரதிர்த்ததெற் றறைகென வறைவான். 21

**ஆ**சி லாச்சிவ புண்ணிய வண்ணலி னாலோர்
மாசி லாச்சிவ ஞானமுண் டாமதை மண்மேல்
தாசர் பாலருண் மூர்த்தியுந் தீர்த்தமுந் தலமும்
ஈச னாணையி லேதர வுள்ளன வென்றும். 22

**கா**மி யார்த்தமுட் கருதுநர்க் கவைசுவர்க் காதி
பூமி மீதணை போகம துதவுமஞ் ஞான
பூமி நீங்குபு சிதம்பர சிவத்தினைப் புணரற்
கேமி குந்திழைப் பவர்க்கருட் குரவனை யீயும். 23

**அ**ந்த வாரிய னளக்கரின் மானுட னாக
வந்து கூடினுங் கூடுவ னலதருண் மன்றுட்
குந்தி யாடிறை மானுட வடிவினைக் கொண்டே
பந்த மாயெதி ரெய்தினு மெய்துமிப் பாரில். 24

**போ**க பூமிக ளாந்துறக் கங்களின் போகந்
தேக நேர வழிந்தெழு தன்மையைச் சிவனும்
ஏக நாயக னொடுவதிந் திடுநய னிறவா
தாக லாலதற் குரியமெய்ஞ் ஞானமே யதிகம். 25

**மூ**ர்த்தி யாதியொர் மூன்றினு மாயநல் வினையாற்
சாத்தி ரஞ்சொன சாயுச்ய மேதெனிற் றனையில்
காத்தி ரங்களி லம்முறை யிழைத்துள கதழ்வால்
நீத்த வாரிய னினிக்கிடைப் பானெனு நிலையாம். 26

**அ**பர ஞானம தாகுமம் மூவகை யாலே
அபர மாம்பத மோக்கம தொருதிற மாசான்
அபய மாயருள் புரிபர ஞானம தாலே
உபயந் தீர்பர மோக்கம தொருதிற முணரே. 27

**ச**ரியைக் காடிறை மூர்த்தியிற் றான்மறைந் தருளுங்
கிரியைக் கிந்தன மதனத்தின் பொறியெனக் கிளரும்
உரிய யோகினுக் காக்கறந் திடுதக வுறமும்
அரிய ஞானமென் பதற்குமுன் வற்சல மெனவாம். 28

**தா**ச மார்க்கமும் புத்திர மார்க்கமுஞ் சகமும்
பாசத் தாற்பினும் பிறந்திடு பதமுத்திக் குரிய
பாச நீத்தசன் மார்க்கமிப் படிமிசைப் பிறவா
தீச னோடணை பரமுத்தி யென்பதற் குரித்தால். 29

**மொ**ழிந்த மூர்த்தியொ டாமொரு மூன்றினுங் கலுடங்
கழிந்து போமத னாற்கதி யாமெனக் கழறின்
கழிந்த தங்ஙனங் காரியங் காரணங் கழியா
தழிந்து தோன்றொரு மதிபொரு மெனவறி வாயால். 30

ஞானமின்றிச் சனனரகித மில்லையாகலின்
ஞானமே பெரிதென்பது.

*எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.*

**அ**க்கா ரியநந் திடவே யவணா
ரஞர்போ மறும்வீழ் கதிவா தையுறுஞ்
சொக்கார் பவனம் பவகா ரணமென்
றுரிசென் பதுநின் றுறுசன் மவுடல்
புக்கா டிடவே புரியும் புரியாப்
புலமே யருண்ஞா னமதர்ப் பதனாற்
பிக்கே துமிலா விபுவா மறிவே
பெரிதென் றறிவாய் பிழையொன் றிலியே. 31

பஞ்ச மாபாதக விவரம்.

**எ**னலும் பொறைசேர் மனசன் பெருவாழ்
விறையே முனரே சொனமா பவமைந்
தெனையென் றிடலும் பெருமா னருள்வா
னிகழ்பொய் கொலைகா மநறை களவென்
பனவென் றறிபொய் பகரிற் பலநாள்
பணிவந் துளமா தவமுந் தொலையும்
இனன்மைந் தனின்வெஞ் சினமுங் குவவா
யெழுமிவ் வுலகும் பழிகூ றுமரோ. 32

**கொ**லையென் பதுகே ளுடலென் றசடங்
கொளுமா வியினங் களிலே யெதையுந்
தொலையும் படிசெய் வதுதா னிதுசெய்
சுகுர்தங் களௌனும் விறகோ திகளை
உலையும் படிசெய் கனலா மழல்வா
யுறுதுன் பமதா முணவென் றுயிர்கொல்
புலையன் புலையுண் பவனுஞ் சொனவா
புகுவார் நரகம் புதரா யினுமே. 33

**கா**மம் பரதா ரசையோ கமிதன்
கலுடம் பெரிதிற் பெரிதீ தறவோர்
தாமுந் தடுமா றிடவுண் ணுழையுந்
தரமே யுளதிம் மகிமா லுடையார்
ஈமம் புகினுந் தொடர்பீ டுளதா
மிகலும் பர்துரும் பெனவே மெலிதற்
கேமந் திரமொன் றிடும்வெல் லுநரை
யிறையோ னெனவே தொழல்சா லுமரோ. 34

**இ**துபொன் றிடின்மற் றெவையுங் கழியு
மிதுநின் றிடின்மற் றெவையுங் குழுமும்
மதுரந் தரல்போ னிரயந் தருமோர்
மனுடன் புடைவெண் ணெயிலூ சிபுகும்
விதமென் னநுழைந் திடுமைம் புலனும்
விலகா வினைசெய் தரசா யுலவும்
மதிதங் கியுளா ரிதைவென் றுயவே
மதியஞ் சுகசத் துவவூ ணுகர்வார். 35

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

**ந**றாவென்னுங் கள்ளருந்த னலங்குலமு நனியழித்து நரகு நல்கும்
பெறாவின்னல் பெறப்பினரும் பொறியிகந்த பேயாகிப் பிதற்றச் செய்யும்
மறாதித்தை யுள்கலைதேர் பண்டிதரா யற்புதராய் வயங்கி னானும்
உறார்முத்தி மேதையுளா ரிவர்வதன மதைச்சிறிது முற்று நோக்கார். 36

**க**ளவெனுமோர் வன்சனிதான் பற்றுமெனிற் சோதிடநூல் கழறு கின்ற
அளவையொரு பதினைந்திற் பாதியல்ல வனந்தமாண் டங்கு மிங்குஞ்
சுளகிலுழ றானியம்போ லுழன்றலையத் துனிதந்து சுகமொன் றில்லாத்
தளர்வுடையர் தமக்குமக வாயுதிக்க வேவிதிக்குந் தரணி மீதே. 37

மாபாதகமைந்தனுள், காமம் பொய் யென்னுமி ரண்டுமே
பெருவலி யுள்ளன வென்பது.

**சொ**ற்றவைந்து பாவமுமெப் பாதகத்துந் தலையாகுஞ் சொனவோ ரைந்திற்
சிற்றளவில் காமம்பொய் யென்னுமிரண் டும்பெரிய செகமாய் நிற்கும்
பெற்றிதனை யீண்டறிதி யிவைநீங்கின் மறைவில்லை பிழையு மில்லை
நற்றவமுஞ் சித்திக்கு ஞானநெறி கைகூடு நலன்மிக் குள்ளாய். 38

உபதேசக் கிரமமாகக் குகேசவழிபா டவாய சீடனுக்கு
ஆசிரியர், மேலுங் கூறுவன கூறல்.

**எ**ன்றறிஞ னாங்குரவ னோதிடலுந் தெளிதோர்ந்த மனச னெந்தாய்
உன்றகவிற் றகரவித்தை முதலாய சரதமெலா மொருங்கே யோர்ந்தேன்
மன்றினடம் புரிகுகனை நான்வழிபா டதுசெய்யு மார்க்க மென்ப
தொன்றையினி யருள்கெனலு மவ்வறிஞ னுள்ளுவந்தீ துணர்த்த லுற்றான். 39

ஆவிடை யிலிங்க உண்மை.

**அ**க்குகனன் னட்டநிகழ் ஞானவெளி யலர்தானே யருளென் றோதுஞ்
சக்கரவட் டாகார பீடமெனு மாவிடையாத் தயங்கா நிற்குஞ்
சொக்கமுள்ள சிதாகாச மேகோளா காரலிங்க சொரூப மாகி
எக்கணுமே நிறைந்ததனி னிற்குமிது வேசைவ லிங்க மாதோ. 40

*கலிவிருத்தம்.*

**இ**ந்த லிங்கம தெம்பெரு மான்சுடர்
சொந்த லிங்கஞ் சுயஞ்சவி லிங்கமா
பந்தம் வீட்டு பராபர லிங்கநீ
சிந்தை செய்யுஞ் சிதம்பர லிங்கமே. 41

**ஆ**தி யாமு னனாதியி னுள்ளவிச்
சோதி லிங்க சுயம்புவிண் ணாந்தொழுங்
கோதி னன்னர்க் குகேச னவன்பெயர்
ஓதி லோஞ்சுப்ர மண்யமென் றோங்குமே. 42

சுப்பிரமணிய நாமார்த்தம்.

**சு**வ்வெ னும்பறை சுத்தவின் பாகுமோர்
அவ்வி யத்தவிண் ணாம்பிர மத்தினின்
றெவ்வ மின்றொளிர் கின்றமின் னேணியம்
ஒவ்வுங் கீர்சுப்ர மண்யமென் றோர்தியால். 43

புத்திரப் பெயர்.

**அ**த்து வாவெனு மாறையு நீத்தவோர்
சுத்த வத்துவிற் றோன்றலி னாலதைப்
புத்தி ரப்பெயர் பூண்ட பிரானெனாப்
பத்தர் யாரும் பழிச்சிடு வாரரோ. 44

**இ**ன்ன வாமிளி ரும்பொருட் கேயினும்
பன்னு வார்முரு கன்சிவ பாலனென்
றென்னை யாளவ னேண்வலி யின்விறல்
மின்னும் பெற்றி விளக்குங் குமாரப்பேர். 45

குமார நாமார்த்தம்.

*அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.*

**கு**வ்வெனுங் குற்சிதம் மாமலங் கொன்றருள் செய்பவன் மாரனென்
றொவ்விடு மர்த்தம தாமவை யொன்று நுவற்சி குமாரனென்
றுவ்வுளர் நாவி லெழும்பவே யுள்ளது சந்தத நன்னிலைப்
பவ்வமெ னுங்கும ராவெனப் பன்னுநர் பாசறை பாறுமே. 46

சச்சிதானந்தமென்னும் பதத்திலுள்ள சத்து, சித்து,
ஆனந்தமென்னு மூன்றிலக்கணமுஞ் சிவம்,
சத்தி, சுப்பிரமணிய மென்பது.

**பொ**ருளுள சத்து நிரந்தரம் பொருவறு மத்தை யணைந்தவிர்
அருளுறு சித்து நிரம்பிடு மதிக மதர்ப்பெனு மின்பமும்
ஒருமுக முற்றசொ லின்கண்முன் னுளது சிவப்பொரு ணள்ளது
திருவுறு சத்திந லந்தரந் திகழ்வது சுப்பிர மண்யமே. 47

ஆனந்தம் பிரமமென்ற சுருதியின்படி
அது, சுப்பிரமணிய மென்பது.

**பூ**ரண சுகவதி யின்பமே பூரண பிரமம தேயென
ஆரண நுவல்வண மின்சுக மாமொரு முருகிறை யென்றுணர்
காரண முதல்வன வன்முது சுபாவ மிலைமறை காயெனே
தாரண திரிவித மென்பன சாரடி நடுமுடி போலுள. 48

சச்சிதானந்த தத்துவம் பகுக்கப்படாதது; ஆனந்தப்
பிரமமே சுவானுபூதிப்பொரு ளென்பது.

**மூ**வகை யென்று மொழிந்தவை மூடக லங்கன நீளமென்
றாவது றழ்ந்து பிறங்கிடு மாகலி னொன்றென நின்றிடும்
கூவிய மைந்த னகந்தைவெல் கூட லெனுஞ்சுக வாய்வரும்
ஏவமி லின்ப வரும்பொரு ளீதல தொன்றிலை யென்றுணர். 49

மறைந்து நிறைந்த பொருள் சிவம்; சுவானு
பூதிப்பொருள் குமாரனென்பது.

**யா**தொரு சீவ னரும்பர ஞானமி லாம லிருஞ்சக
ஆதர மாயையி னின்றகா னாடவொ ணாவுண் மறைந்துள
தேதகை யார்சிவ மென்பதி யாதொரு சீவ னறிந்தகால்
கோதற வேநனி கண்டவிண் கொள்கும ரேசுர னென்றுணர். 50

ஞானிகளுட் சிதாகாச முருகனைத் தரிசியாதாரிலர்;
அவனை யடைதலே முத்தி யென்பது.

*எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.*

**ச**ருவ பூரண சிதம்ப ரத்திலருள்
சால்கு கேசனெனு முருகனைக்
கருதி யேதரிசி யாத மெய்யறிவர்
கால மூன்றுமுள ரோவிலர்
அருவ முஞ்சொலவொ ணாவ தீதபர
மாய சங்கவிரி வாயவிர்
முருக னோடணவி யுய்வ தேபரம
முத்தி யென்றவொரு சித்தியே. 51

அம் முத்தியினையே பலதிறவைக்கிய
மாக விளம்பல்.

**ஆ**கம் வாக்குமன மென்னு மூன்றுமசை
யாச்சு வானுபவ வத்துவாம்
ஏக வேமதக ரால யக்குகனை
யெய்து முத்தியினை யேசிவ

போக வைக்கிய மிலிங்க மென்றவொரு
பொருளி லைக்கிய மகோசர
மாக வைக்கிய மயான சோதியெனும்
வாளி லைக்கிய மெனாவுணர். 52

இங்குரைக்கப்பட்டது தகராகாச நாயகமான
குகப்பிரமத்தினது நிட்களநிலையே; இனிச்
சகளநிலை சாற்றுதுமென்பது.

**ப**சுவை மந்தமது பண்ணு நான்மமதை
பல்கு தத்துவ மனைத்தையும்
அசல ஞானவெரி யாலெ ரிக்கும்வன
மாம்ப ரம்பர சிதம்பர
பசுப திப்பெய ரிலங்கு ஞானசுக
பானு வாங்குக பரத்தினோர்
சுசிசி றந்தநிலை யீண்ட திர்த்ததறி
சொல்லு துஞ்சகள நிலையையே. 53

முருகனது சகளநிலை.

**சி**ட்டி யாதிவினை யைந்து ஞற்றுமருள்
சேர்செம் மாமுகமொ ரைந்துடன்
தட்டின் ஞானசிவ சத்தி யும்மினிது
சார வாறுமுக வுருவமாய்
மட்டி லிந்த்ரதிசை யாதி நான்குமொளி
மன்னு மம்பரமு மதமுமாச்
சுட்டு மாறுதிசை நோக்க மாகிநிமிர்
துய்ய னேமுருக மெய்யனே. 54

**ந**றிய பூகயிலை யரிய மேருகயி
லாய மன்னுபிர மாண்டமா
பொறிக ளுக்குபரி யாய மாபுனித
வப்பி ராகிருத கயிலைமேல்

நெறிசெ யுஞ்சிவ சதாசி வற்கறிவி
னேர்மை சொற்றவனும் வாமையை
மறைவி லாதவொரு வதன மாயணவி
வந்த தைவதமு முருகனே. 55

**_அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்._**

*தனதன தனதன தனதன தனதன*
*தனதன தனதனனா.*

**இ**ருநில மிசைநல மகிழ்வுறு மனையற மெனுமொரு நெறி நிமிர்வான்
முருகுறு கிரியையின் மகள்குற மகள்வல முதனனி யமரவுமே
பொருபுலன் விலகிமெ யறிவுட னடியவர் புகுமரு ணெறி நிமிர்வான்
அருளுடை யறிவெனு மொருசுர மகளிட னமரவு மவனுளனால். 56

**_ஒற்றுச்சீர் தனதனன._**

**தி**ரிகுண முதலென வுளவொரு பிரகிரு திமுருக னிவர்நவிரம்
பரிவுறு திருவரு ளறிவயி லெனுமொரு படையவ னுடையகுணம்
பெரியக ருணைநிறை வவனொரு பெயரறு பிரணவ மனுநுவலின்
கரிசறு பொறிவிரி யறிவுட னொருசிவ கதிவரு மெனவுமுணர். 57

**சீடனது வேண்டுகோ ளங்கீகரித்த வாசிரியர்**
**அவற் கனுக்கிரகித் தருளல்.**

*தனதன தந்தன தனதன தந்தன*
*தனதன தந்தனனா.*

**சொ**லிய பரம்பர னருளுற முன்சொன துகளில்வ ரம்படைவே
செலவவன் மந்திர மருளின மன்பொடு திரிபற நின்றளியால்
நலதுதி வந்தனை புரியமை யந்தல நசையற வெங்கணுமாய்
நிலவுசி தம்பர மதையடை யென்றிறை நிசவுரை தந்தனனே. 58

ஐயமறுத்தருளியன் முற்றிற்று.

## 2. தோத்திரவியல்.

சீடன்செய் தோத்திரமும், பிரார்த்தனையும்.

***அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.***

*தந்தன தந்தன தந்தன தந்தன, தந்தன தந்தனனா.*

**ந**ன்றென மைந்தனு வந்துப ரிந்தர நந்தன கந்தகுகா
மன்றமி குங்குழ லஞ்சுர குஞ்சர மங்கைம ணந்தமனா
என்றன ரும்பர சங்கர புங்கவ வெங்குநி றைந்தவணா
இன்றென ரந்தையொ டுங்குவ ணம்புரி யென்றுப ணிந்தனனே. 59

*தானன தானன தானன தானன, தானன தானதனா.*

**மா**பல தேவர்க டேவம னோலய வாழ்வுடை யார்முதல்வா
நீபந றாவணி மார்பவ னாரத நீதிப ராகுமரா
பாபவி நாசந டேசகு கேசுர பாலவி லோசனமா
தாபமு ளேனுனை யேகதி யாயடை சார்புள னாளுதியால். 60

***கலிநிலைத்துறை.***

*தானன தானா தானன தானா தனதானா.*

**சே**லன கோவார் வேலன தோளார் சிவைசேயா
மாலன மாலா ரோதிமொய் கானார் மகணேயா
மூலப ரேசா சீலந டேசா முருகாமா
சாலவி னோதா வாளுடை யாய்தா டரவாவா. 61

**சூ**ரச மாரா வாரக ராவார் சுகராயா
நாரசு ரேசா வீரகு மாரா நடராயா
ஈரவி ராமா மாமயி லாவே சிடரேறாத்
தாரவி சாகா காநனி காவா சகமீதே. 62

*தானா தானா தானா தானா தனதானா.*

**பீ**டார் நால்வே தாதீ தாசோ பிதசோதீ
தாடா தாடா தாதா வேயா ளௌவாடார்
கூடா வாழ்வா வாடா நாடா குகதேவா
ஏடா வாடா வீடீ வோநா மௌவாடே. 63

*கலிவிருத்தம்.*

**நா**தநி லைக்குயர் வுளக ணலங்கிளர்மெய்ப்
போதவெ ளிக்குண லசைவு பொருந்தவிடு
பாதமெ னக்கருண் முனிவர் பணிந்தறியென்
பேதம றுத்திட வுரிய பெருங்குகனே. 64

**உ**யிரொடு சித்துந லுடலு மொருங்குறநின்
றயர்பர நிட்டையி லொளிரு மரும்பொருளே
செயிரறு சிற்கக னமது திருந்துநடங்
கயமுற நித்தலு மிடுகு கவந்தருளே. 65

**தே**னினு மின்புறு மினிமை சிறந்திடவென்
பானிகழ் கின்றபல் பனிகள் பறந்தறநின்
கோனுனுள் வந்தன னெனுரை குயின்றருள்செய்
ஞானந டம்புரி குகவெ னலம்பரமே. 66

**மூ**டம லங்கெட வறிவு முதிர்ந்திடவென்
னோடணை யன்பர்க ணெறியை யுவந்தருளுஞ்
சேடுய ரென்குக தகர சிதம்பரமாம்
வீடெனு மம்பெரு வெளியில் விளங்கொளியே. 67

தோத்திரவியன் முற்றிற்று.

---

# 3. முடிபியல்

சீடன் சுவானுபூதி யடைதல்.

*எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.*

**இ**னவாறுண் ணனி தூண்ட மனச னன்றா
யிறைஞ்சிடலுந் திருவருளாற் சலன மில்லா
மனவடக்க மதுகூடிக் குகனைக் காணா
மகிழ்வெய்தி மனசனெனும் பெயர்போ யாணர்க்

கனவறிஞ னாய்த்தனொரு குருவைக் கண்டான்
களிகூர்ந்து தகரால யத்தைக் கண்ட
எனதரிய வன்பவென்னோ டிருத்தி யென்னா
விறையவனு மாங்கணைத்தின் பெய்தி னானே. 68

வாழ்த்து.

*அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.*

**அ**ருமறை யொடுக்க மாகி யாகமத் தீற தாகி
நிருமல சரத மாகி நித்தியா னந்த மாகிப்
பெருவெளி மயமா யுள்ளுட் பிறங்குமி ரகசி யத்தைக்
கருதுநர்க் கருளு மந்தக் கடவுளெந் நாளும் வாழ்க. 69

**தை**யலர் சதுர்த்தர் நீசர் தாபதர் சுரரே னோருள்
வைதிக சைவ ஞான மார்க்கநன் னிலைவ ழாது
கைதவங் கடந்து நிற்குங் கனகமன் றடியர் வாழ்க
மெய்புக லிந்த நூலை விரித்தவர் கேட்டோர் வாழ்க. 70

ஸுப்ரஹ்மண்யோம், ஸுப்ரஹ்மண்யோம், ஸுப்ரஹ்மண்யோம்.

முடிபியன் முற்றிற்று.

**இரண்டாங்காண்ட முற்றிற்று.**

ஆகப்பாயிரமுட்படச் செய்யுள் - 117.

## தகராலயரகசிய முற்றிற்று.

குமரகுருபரன் றிருவடி வாழ்க.

திருச்சிற்றம்பலம்.

மூன்றாவது மண்டலம் முற்றிற்று.